பெரும்புகழ்ச் செல்வர்

[நான்கு, ஐந்து பாரத்திற்குறியது]

ஆசிரியர்:
பண்டித நா. லக்ஷ்மீ நரசிம்மம்,
தலைமைத் தமிழாசிரியர்,
பி. கே. என். உயர்நிலைப்பள்ளி, திருமங்கலம்.

— மூன்றும் பதிப்பு —

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,
பப்ளிஷர்ஸ், : : கும்பகோணம்.

விலை ரூ. 0–12–0.

பெரும்புகழ்ச் செல்வர்

[நான்கு, ஐந்தாம் படிவத்திற்குரியது]

ஆசிரியர்
பண்டித நா. லக்ஷ்மீ நரசிம்மம்,
தலைமைத் தமிழாசிரியர்,
பி. கே. என். உயர்நிலைப்பள்ளி, திருமங்கலம்.

— மூன்றும் பதிப்பு 1957 —

(This Book is printed in D/crown white printing 24lb. paper)

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,
பப்ளிஷர்ஸ், : : கும்பகோணம்.

விலை 0—12—0
அல்லது 75 ந. பை.

Third Edition, June 1957-D

Approved by the Text Book Committee Madras for class use vide page 29 of the Gazette dated 15—6—57.

உள்ளுறை



பாண்டித்துரைத் தேவர்

பெரும்புகழ்ச் செல்வர்

1. தமிழ்ச் செல்வர்.

சங்கம் வளர்த்த தமிழ் மதுரை :

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்,
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் மாறனும்,
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த,
மங்கலப் பாண்டி வளநாட்டின்,

தலைநகராக வழிவழி விளங்கிய வான்புகழ் கொண்டது மதுரையம்பதி. அது, புலவர் பாடும் புகழும் புலமைத் திறமும் உடையராய்த் தமிழ் வளர்ச்சி யொன்றே தங்கள் வாழ்வின் விழுப்பயன் எனக் கருதி வாழ்ந்த பாண்டியர், அன்பின் வளர்த்த சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்த தொன்னகர்; அமிழ்தினும் இனிய தமிழ் மணம் வீசும் 'வையை என்னும் பொய்யாக் குலக் கொடி' பாய்தலால்,

வாழை வடக்கீனும் வான்கமுகு மேற்கீனும்
கரும்பு மிளநீரும் கண்திறந்து மடைசாயும்
கட்டுக் கலம்காணும் கதிருழக்கு நெல்காணும்
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை.

எனப் புலவர் புனைந்து பாடும் வளநகர். இத்தகைய வரலாற்று மாண்பும், புராணப் புகழும் வாய்ந்த இப் பெரு நகரில் சங்கம் வளர்ந்த பழம் புகழை இன்றும்

நிலைநாட்டி நிற்கும் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்டவர் **பாண்டித்துரைத் தேவர்** என்ற தமிழ்ச் செல்வராவர். இவ்வள்ளலின் வரலாற்றையறிதல் தமிழுணர்ச்சியுள்ள தமிழ் மாணவர்க்குரிய தலையாய கடமையாகும்.

சேது மன்னர் :

இராமாயணமென்னும் இதிகாசத்தின் தலைவனாகிய இராமபிரான், வானர வீரர்களின் துணையால் இலங்கை செல்லக் கட்டிய அணை சேது எனப் பெயர் பெறும். அவ்வணையைக் காத்துவர அவரால் நியமிக்கப்பெற்ற மறவர் தலைவன் வழியினரே **சேதுபதிகள்** எனக் கூறப் படுபவர். இச் சேது வேந்தர் ஆண்ட நாடு 'சேதுநாடு' எனப்படும். இச் சேது நாட்டின் தலைநகர் முகவை என்ற இலக்கிய வழக்குடைய இராமநாதபுரமாகும். சேது மன்னர் தமிழ்ப்பற்றுமிக்கவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர். இவருட் சிலர் தமிழ்ப் புலமையும் நிரம்பப் பெற்றவராக விளங்கினர்.

தமிழ்ச் செல்வர் மரபு :

இச் சேது மன்னர் மரபில் வந்த இராமசாமி சேதுபதியென்பார், ஆண் மகப் பேறின்றி அகால மரணம் அடையவே, அவரது தேவியார் **பர்வதவர்த்தினி நாச்சியார்** தம் உடன் பிறந்தாராகிய கோட்டைச்சாமித் தேவரை அமைச்சராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். அவருக்கு மற்றொரு தங்கையும் உண்டு. அச்சகோதரியார் சேது மன்னருக்கு நெருங்கிய கிளை யினரில் ஒருவரான புதுமடம் **சிவஞானத்தேவர்** என்னும் செல்வரது வாழ்க்கைத் துணைவியாக விளங்கினர். அவர் கட்குப் **பொன்னுச்சாமித் தேவர், துரைராஜா** என்ற ஆண் மக்கள் இருவர் தோன்றினர். மிக்க இளமையிலேயே

இவர்களைக் கண்ட பெரியோர்கள் 'இவருள் மூத்தவர் மதிவலியால் துதிபெற்று விளங்குவர்; இளையவரோ அரச இலக்கணங்கள் அமையப்பெற்று விளங்குதலால், மன்னவராகி மாண்புற வாழ்வர்' என்று கூறினர். பெரியோர் சொல் வீணுவதுண்டா? அவை அப்படியே பலித்தன. துரைராஜா பர்வதவர்த்தினி நாச்சியாரால் ஏற்புமகனுகக் கொள்ளப்பெற்று, **முத்துராமலிங்க சேதுபதி** என்ற பெயருடன் சேதுநாட்டு அரசரானுர். மூத்தவரான பொன்னுச்சாமித் தேவர், கோட்டைச் சாமித் தேவருக்குப் பின் அவர் திறம்பட வகித்த அமைச்சுப் பதவியை ஏற்று நடத்தலானுர்.

பெற்ருேர் :

பொன்னுச்சாமித் தேவர், இருபது வயதிலேயே இராமநாதபுரம் ஆட்சியை ஏற்று நடத்தினுர்; தொடக்கத்தில் எழுந்த குழப்பங்களை அறிவும் ஆண்மையும் கொண்டு அடக்கி இராமநாதபுரம் சீமையைச் சீர்மை பெறச் செய்தார். நாட்டில் தமிழ் மணம் கமழ்ந்தது. தமிழ்ப் புலவர்கள் தக்க புகலிடம் பெற்றனர். பொன்னுச்சாமித் தேவர், சிவகங்கைச் சீமையை ஆண்டுவந்த மருத பாண்டியர் மரபிலுதித்த பெரிய நாச்சியார் என்ற பெண்மணியை முதல் மனைவியாகக் கொண்டார். அவர் மேலும் இரு மனைவியரை மணந்து கொண்டார். இம்மனைவியர் மூலம் அவருக்கு மூன்று ஆண்மக்களும், மூன்று பெண்மக்களும் பிறந்தனர். இந்நிலையில் ஓயாத வுழைப்பால் தேவரவர்கள் உடல் தளர்ந்தது. தம் சொத்துக்களையும், மக்களையும் தமக்குப்பின் பாதுகாக்க, பிரபல வழக்கறிஞரும், நண்பருமான சேஷாத்திரி ஐயங்கார் என்ற பெரியார்

ஒருவரை நியமித்துவிட்டுத் தமது முப்பத்து மூன்ருவது வயதில் காலமாஞர் பொன்னுச்சாமித் தேவர். அவரது ஆண்மக்களில் மூன்ருமவரே நம் தமிழ்ச் செல்வர் **பாண்டித்துரைத் தேவர்.**

சகோதரர் :

பொன்னுச்சாமித்தேவர் காலமாகும்போது, மூத்தவரான கோட்டைச்சாமித்தேவருக்கு எட்டு வயது. இரண்டாவது புதல்வர் சிவஞானம் என்ற சீமைச்சாமித் தேவருக்கு ஐந்து வயது. நம் பாண்டித்துரைத் தேவருக்கு மூன்று வயது. மூத்தவரும் மூன்ருமவரும் முதல் மனைவியிடம் பிறந்தவர்கள். சீமைச்சாமித்தேவர் இளைய தேவியிடம் பிறந்தவர். பொன்னுச்சாமித் தேவருக்கமைந்த வீரம், நியாயம், தியாகம் என்ற மூன்று பெருங் குணங்களும், மூன்றுருக்கொண்டாற் போல மக்கள் மூவரும் திகழ்ந்தனர். இவருள் பாண்டித்துரைத்தேவர் 1867-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் **உக்கிரபாண்டியர்** என்பது.

கல்விப் பயிற்சி :

சேஷாத்திரி ஐயங்கார், பொன்னுச்சாமித் தேவரிடம் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நன்கு நிறைவேற்றிஞர். மக்கள் மூவரும் கல்விப்பயிற்சி பெறுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பாண்டித்துரைத் தேவர் இளமையிலேயே தனி ஆர்வத்துடன் தமிழ் கற்ருர். இளமையில் அழகர் ராஜு என்ற புலவர் அவருக்குத் தமிழைக் கற்பித்தார். ஆங்கிலம் வல்ல

வழக்கறிஞர் ஒருவர் அவருக்கு ஆங்கிலம் கற்பித்து வந்தார். பிறகு, ஷ்வார்ட்ஸ் துரைமகனுரால் தோற்று விக்கப் பெற்ற பள்ளியிற் சேர்ந்து கல்வி பயின்ருர் பாண்டித்துரைத் தேவர்.

பாலவனத்தம் ஜமீன் :

சகோதரர் மூவரும் தக்க வயதடைந்ததும், அவர் களுடைய தந்தையார் வைத்துச்சென்ற சொத்துக்களைக் கண்காணித்துவந்த சேஷாத்திரி ஐயங்கார், அவற்றை மூவருக்கும் சமமாகப் பிரித்து அவர்களிடம் ஒப்படைத் தார். பாண்டித்துரைத் தேவருக்குப் பாலவனத்தம் ஜமீனும் வேறு பல கிராமங்களும் உரிமையாயின. அவர் 1884-ல் ஜமீன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி யின் திருக்குமாரர் **பாஸ்கர சேதுபதியின்** ஆட்சிக்கு உட்பட்டது.

தமிழ்ப் பயிற்சி :

ஜமீன் நிர்வாகத்தை ஏற்ற பிறகும் பாண்டித் துரைத்தேவருக்குத் தமிழ்ப்பசி குறையவில்லை. அவர், இராமநாதபுரம் சமஸ்தானப் புலவராக விளங்கிய **சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார்** என்ற புலவர் திலகரிடம் கம்ப ராமாயணம் முழுமையும் பாடம் கேட்டார்; பிறகு, **மதுரை இராமசாமிப்புலவர்**பால் காஞ்சிப் புராணம், தணிகைப்புராணம் முதலிய நூல்களைப் பாடங் கேட்டார்; திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த **பழனிக்குமாருத் தம்பிரானிடம்** சைவ நூல்களைப் பழுதறப் பயின்ருர். இப்புலவர் பெரு மக்களிடம் பெற்ற பயிற்சியால் தேவர் அவர்களிடம் இயல்பாக அமைந்த சொல்வன்மை வளர்ந்தது. 'தந்தையினும் சதமடங்கு

தநயன்' என்னும்படி பொன்னுச்சாமித் தேவரினும் இவர் புலவரைப் போற்றுவதில் நிகரற்று விளங்கினர். எப்பொழுதும் இவரது அவைக்களம் புலவர் குழுமிய பட்டிமண்டபமாகவே காட்சியளிக்கும்.

பூச்சி ஐயங்கார் :

இசையுலகிற் புகழ்பெற்று விளங்கிய **பூச்சி ஐயங்கார்** என்ற **ஸ்ரீநிவாச ஐயங்கார்** தேவரவர்களுக்கு நெருங்கிய நண்பர். இருவரும் இளமையில் ஒன்ருகப் படித்த பள்ளித்தோழர்கள். பூச்சி ஐயங்காருடைய முன்னோர் இசைப் புலமையிற் சிறந்து விளங்கினர். இவரும் 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்பதற்கு எடுத்துக்காட்டாக இசையறிவும் குரலினிமையும் வாய்க்கப் பெற்றிருந்தார். இவர் ஆங்கிலங்கற்று உத்தியோகம் பார்ப்பதினும் இசையில் வல்லவராக விளங்குவதே சிறந்தது, என எண்ணினர் தேவரவர்கள். அந்நாளில் இசைக் கலையில் நிகரற்று விளங்கிய பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் அவரை ஒப்புவித்து இசைப்பயிற்சியில் ஈடுபடச் செய்தார். பின்னளில் பூச்சி ஐயங்கார் தாம் பெற்ற புகழுக்கெல்லாம் தேவர் அவர்களே உரிமையுடையவர் என அடிக்கடி கூறிக் கொள்வார். கலைப்பயிற்சி முடிவுற்றதும், பூச்சி ஐயங்கார், இராமநாதபுரம் சமஸ்தானக் கலைஞராக விளங்கினர்.

சோமசுந்தர விலாசம் :

பாண்டித்துறைத் தேவரவர்கள் இராமநாதபுரம் வரும்பொழுது அவரது ஒன்றுவிட்ட சகோதரராகிய பாஸ்கர சேதுபதியவர்கள் அவரைப் பெருவிருப்புடன் வரவேற்று மகிழ்வார். அவ்வாறு இருப்பினும்,

பாண்டித்துரைத் தேவரவர்கள் இராமநாதபுரத்தில், தமக்கென்று ஒரு மாளிகை கட்டிக்கொள்ள விரும்பினர். அவர் விரும்பிய வண்ணமே பெரும் பொருட் செலவில் **சோமசுந்தர விலாசம்** என்ற அரண்மனையைக் கட்டி முடித்தார்.

பட்டி மண்டபம் :

தேவரவர்களுடன் தமிழ்த் துறையிலும், கலைத் துறையிலும் இடைவிடாது பழகிப் பயன்கொண்ட புலவர் பலர். அவர் இருக்குமிடம், எப்பொழுதும் தெய்வத் தமிழ் மணம் கமழ்ந்து கொண்டே இருக்கும். புலவர்களைச் சொற்போர் செய்யுமாறு தூண்டிவிட்டுக் கேட்டு மகிழ்வார் அவர். அவரும் சில சமயங்களில் சொற்பொழிவாற்றுவதுண்டு; அவர் திருக்குறள், பரிமேலழகர் உரை நயம் பற்றிக் கூறுவது புலவர்களும் வியந்து போற்றும் வண்ணம் சிறந்து விளங்கும். அவரது பேச்சு, செவிக்கும், அறிவிற்கும், உள்ளத்திற்கும் ஒருங்கே பெருவிருந்தாக அமையும். அவர் கம்பராமாயணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களையும் கேட்பவர் மகிழ விரிவுரையாற்றுவதில் வல்லவராக விளங்கினர்.

புலவரைப் போற்றிய புரவலர் :

தேவரவர்களின் ஆதரவு பெற்ற புலவர் பலர். அவருள் **அரங்கசாமி ஐயங்கார்** என்பவர், சிறந்த தமிழ்ப் புலவர். தேவரவர்களுடன் இளமை முதலே நெருங்கிப் பழகியவர். கட்புலனில்லாக் குறையொன்று உண்டாயினும் மதிவலி நிரம்பப் பெற்றவர். அவர் மதுரையில் தேவரவர்கள் நிறுவிய தமிழ்ச் சங்கத்தின் தலைமை ஆசிரியராக இருந்த காலந்தவிர, எஞ்சிய கால

மெல்லாம் தேவரவர்களுடனே இருந்தவர் **திருநாராயண ஐயங்கார்** என்பார் இரு மொழியிலும் புலமை மிக்கவர். 'நுண்மாண் நுழைபுலம் உடையார்' எனப் புலவர்களால் புகழப்படுபவர். அவர், தம் இறுதி வரையில் தமிழ்ச் சங்கத்தின் தலைமையாசிரியராகவும் '**செந்தமிழ்**'ப் பத்திராதிபராகவும் இருந்த பெரும் புலவர். இவர்களிடம் கற்ற மாணவர் பலர் இன்று நாடெங்கும் பெரும் புலவர்களாக விளங்குகின்றனர். பிற்கூறிய பெரியாரைத் 'தமிழ்க் குலபதி' என்றே கூறலாம். காலம் சென்ற **மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர்** அவர்களும் தேவரவர்களால் உபசரிக்கப் பெற்றார். 'மணிமேகலை', 'புறப்பொருள் வெண்பா மாலையுரை' என்ற இரு பழைய நூல்களையும் முதலில் ஐயரவர்கள் வெளிடுவதற்கு வேண்டிய பொருளுதவி செய்தவர் தேவரவர்களே. நூல் வெளியீட்டில் மற்றும் பலர்க்கும் தேவரவர்கள் உதவி கிடைத்தது தமிழ்த் தாய் செய்த புண்ணியமேயாகும். தேவரவர்களின் ஆசிரியர்களுள் ஒருவரான, **மதுரை இராமசாமிப் புலவர்** பதிப்பித்த தேவாரம் தலமுறைப் பதிப்பும், சிவஞான முனிவர் பிரபந்தத் திரட்டும், **சுன்னுகம் குமாரசாமிப் பிள்ளை** பதிப்பித்த நூல்களில் சிலவும் இவரது பொருளுதவி பெற்றவையே.

வெளியீடுகள் :

தேவரவர்கள் புலவர்களுடன் நூல்களை ஆராயும் பொழுதெல்லாம் அறம், பொருள், இன்பம் பற்றிப் பொதுவாகக் கூறும் சிறந்த பாடல்களைத் தொகுத்து வந்தார்கள். இவ்வாறு தொகுத்த பாடல்களைத் திருக்குறள் போலப் பால் இயல், அதிகார அடைவு செய்து

பன்னூற்றிரட்டு என்ற பெயரால் வெளியிட்டார். இம்முறையிலே சைவ மஞ்சரி என்ற நூலும் தொகுக்கப் பெற்று வெளியாயிற்று.

சங்கம் அமைக்கும் சிந்தனை :

ஒரு சமயம் தேவரவர்கள் சிலகாலம் மதுரைக்குச் சென்று அங்கே தங்கியிருந்தார்கள். மதுரை வாசிகள் தேவரவர்களின் சொற்பொழிவைக் கேட்க விரும்பினர். அப்பொழுது, தேவரவர்கள் சொற்பொழிவுக்கு முன் கம்ப ராமாயணத்தையும், திருக்குறளையும் சிறிது பார்க்க விரும்பினர். மதுரையில் பலரிடம் கேட்டும் இவ்விரு நூல்களும் கிடைக்கவில்லை. முடிவில் புத்தகக் கடையிலிருந்து அவை விலைக்கு வாங்கி வரப்பட்டன. இதனை அறிந்த தேவரவர்கள், சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்த மதுரையில் தமிழுக்குக் கதி என்று சிறப்பிக்கப்படும் கம்பருக்கும் திருவள்ளுவருக்கும் பஞ்சம் ஏற்பட்டதே என வருந்தினர். அது அவருள்ளத்தில் நன்கு பதிந்தது. இக்குறை நீங்க, மதுரையில் தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட நிலையம் ஒன்று அமையவேண்டும் எனக் கருதினர். அக் கருத்தை மிகவும் ஆதரித்து ஊக்கியவர், மதுரையில் பெரிய வழக்கறிஞராக விளங்கிய காலம் சென்ற டி. சி. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களாவர்.

அரசியல் மகாநாடு :

1901 மே மாதம், சென்னை மாகாண அரசியல் மகாநாடு மதுரையில் கூடியது. தேவரவர்கள் அதன் வரவேற்புக்கழகத் தலைவராக அமைந்தார். அம் மகாநாட்டின் முடிவில் தேவரவர்கள் தமிழ்ச் சங்கம் அமைக்கும் தம் கருத்தை வெளியிட்டு எல்லோருடைய ஆதர

வையும் பெற்றார். மகாநாடு முடிவுற்ற மறுநாளே அதன் பொருட்டுச் சேதுபதி கலாசாலையில் ஒரு கூட்டம் கூடியது. பாண்டித்துரைத் தேவரவர்களே தலைமை வகித்தார். தலைமையுரையில், அவர் தமிழின் முற்காலச் சிறப்புக்களையும், இக்கால நிலையையும், தமிழ் மக்கள் கடமையையும் குறித்துச் செய்த சொன்மாரி எல்லோருள்ளத்தையும் கவர்ந்தது. எல்லோரும் தேவரவர்கள் கருதிய தமிழ்ப் பணியை ஒரு முகமாக வரவேற்றனர்.

நான்காம் தமிழ்ச் சங்கம்:

1901-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 14-ம் நாளன்று தமிழ்ப் புலவர்களும், செல்வர்களும் சூழ நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றியது. அத்திருவிழாவைச் சிறப்பிக்கச் சேது வேந்தர், பாஸ்கர சேதுபதி அவர்களும் தம் பரிவாரங்களுடன் எழுந்தருளினர். தொடக்கத்தில் சேதுபதி கலாசாலைக் கட்டிடத்தில் ஒரு பகுதியில் சங்கம் அமைக்கப்பட்டது. சங்கத்தில் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையும், பாண்டியன் புத்தக சாலை என்ற பகுதியும், நூலாராய்ச்சி நிலையமும் தொடங்கப் பெற்றன. அரசரும், புலவர்களும், பிறரும் நான்காம் சங்கம் நீடு வாழ்க என வாழ்த்தினர். அதன் தலைமை ஆசிரியராக, திரு நாராயணையங்கார் அவர்கள் நியமனம் பெற்றார். இடையிற் சில ஆண்டுகளைத்தவிர வாழ்வின் இறுதிவரை அவரே அதன் தலைவராக இருந்தார். சேது சமஸ்தான வித்துவான் ரா. இராகவ ஐயங்காரவர்கள் நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைகளின் தலைவராக விளங்கினர். பாண்டியன் புத்தக சாலைக்கு ஏட்டுப் பிரதிகளான பழைய நூல்கள் பலவும் பல இடங்

களிலிருந்து தொகுக்கப் பெற்றன. சில ஆண்டுகளுக்குப் பின், சங்கத்திற்கு வெளி வீதியிலிருந்த தமது பெரிய மாளிகையைக் கொடுத்துதவினர் தேவரவர்கள். அதன் பிறகு சங்கம் அக்கட்டிடத்தில் அமைந்து இன்றும் விளங்கி வருகிறது.

இச்சங்கம் சென்ற அரை நூற்றாண்டாக அமைதியாகச் செய்துவரும் தமிழ்த் தொண்டு அளப்பரியதாகும். கலாசாலையில் பிரவேசம், பால பண்டிதம், பண்டிதம் என்ற மூன்று வகுப்புக்கள் நடைபெறலாயின. சங்கக் கலாசாலையில் பயின்ற புலவர்கள் ஆங்கிலப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழாசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாறு சிறந்த முறையில் தமிழ்ப்புலமை வளர அடிகோலிய முதல் நிலையம் இச் சங்கமே. இக்கலாசாலையில் உண்டியும், உறையுளும் பெற்றுப் படித்துப் பட்டம்பெற்றுப் புலவராக விளங்குபவர் நூற்றுக்கணக்கில் உள்ளனர். முற்கூறிய தனித்தமிழ்ப் புலமைக்குரிய வகுப்புகளைத் தவிர, ஆங்கிலக் கலாசாலைகளிற் பயிலும் மாணவர் தமிழ் வளர்ச்சிபெறும் நோக்கத்துடன், அவர்களுக்குரிய தமிழ்ப் பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. சேதுபதியவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் செய்துவரும் உதவிகள் எண்ணிலந்தன. பாஸ்கர சேதுபதி, பொன்னும் பொருளுங் கொடுத்து அதனை நிலைபெறச் செய்ததோடன்றித் திங்கள் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையும் அளித்து வந்தார். அவரது ஆதரவாலும் பாண்டித்துரைத் தேவர்களது பேணி வளர்க்கும் அன்பாலும் நான்காம் தமிழ்ச் சங்கம் நாடோறும் வளர்ந்துவந்தது.

தமிழ்ப்பற்று :

பாண்டித்துரையவர்கள் செய்யுள் பாடுவதிலும் வல்லவர். தம் பாட்டனுர் நினைவில் இராமநாதபுரத் தமைந்த சிவஞானபுரத்து முருகன் பேரில் பாடிய காவடிச்சிந்து அனைவராலும் போற்றப்பட்டது. அவருடைய தமிழ்ப்பற்று எல்லையற்றது. பிழையுடைய நூல்களைக் கண்டால் அவற்றை அவர் கையாலும் தொடுவதில்லை. ஒரு சமயம் **ஸ்காட்** என்ற ஆங்கிலோ இந்தியர் தாம் பெற்றுள்ள அரைகுறையான தமிழறிவால் செறுக்குற்றுப் பெரியோர்களுடைய அருந்தமிழ்ப் பாக்களையும் நூல்களையும் தம் மனம்போனவாறு திருத்தம் செய்யலாயினர். பல நூல்களையும் அவ்வாறு திருத்தியும் யாரும் இடித்துக் கூருததால், தாம் செய்வது சரி யென்று கொண்டு திருக்குறள் பாக்களையும் அவ்வாறு திருத்தி அச்சிட்டிருந்தார். அவர் பாண்டித்துரையவர்களை மதுரையில் கண்டு தாம் செய்த அரிய செயலைத் தெரிவித்து ஒரு புத்தகத்தையும் கொடுத்தார். தேவர் அவர்கள் திருக்குறளைத் திறந்ததும்,

" அகர முதல எழுத்தெல்லா மாதி
உகர முதற்றே யுலகு " —என்றிருந்தது.

கண்டு திடுக்கிட்டார். இவ்வாறே மேலும் பல பாக்கள் சொல் நயமோ, பொருள் நயமோ கருதாமல் மோனை எதுகை பற்றியே திருத்தப் பெற்றிருந்தன. தேவரவர்கட்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவர் அதனை வெளித் தோன்ருமல் அடக்கிக்கொண்டு அமைதியாக 'எத்தனை பிரதி அச்சிட்டீர்கள்' என்று கேட்டார். ஸ்காட் துரை 'ஐந்நூறுதான் அச்சிட்டேன் ; இருநூறு பிரதிகள் நண்பர்களுக்குக் கொடுத்துச் செலவாகி விட்டன. எஞ்சிய முந்நூறு பிரதிகளும் அப்படியே

யிருக்கின்றன' என்று கூறினர். தேவர் உடனே முந்நூறு பிரதிகட்கும் உரிய விலையை அவரிடம் கொடுத்துப் புத்தகங்களைத் தமக்கு அனுப்பிவிடுமாறு கூறினர். ஸ்காட் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டு, எல்லாப் பிரதிகளையும் கட்டி அனுப்பினர். தேவரவர்கள் இராமநாதபுரம் சென்றதும், அப்பிரதிகளைக் கொண்டுவரச் செய்து ஒரு குழி தோண்டி அதனுள் வைத்துத் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்; 'இப்பைத்தியத்தின் பிரதிகள் தப்பித் தவறி அறிஞர்பாற் சென்று துயர் விளைக்காது இருப்பதற்கும், அறியாதார் குறட்பாக்களைத் தாறுமாறுகப் பாடம் ஓதாமல் இருப்பதற்கும் இதுவே தக்கவழி' என்று கூறினர்.

சேந்தமிழ் :

1903 முதல் செந்தமிழ் என்னும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து நடத்திவரச் செய்தார் தேவர் அவர்கள். முதலில் இதன் ஆசிரியர் முற் கூறிய ரா. இராகவையங்கார் அவர்களேயாவர். இவ்விதழின் தோற்றத்தால் தமிழ் ஆராய்ச்சித்துறை புத்துயிர் பெற்றெழுந்தது. பல பேரறிஞர்கள் அரிய கட்டுரைகள் எழுதிவரலாயினர். இவற்றுல் அறியப்பட்ட இலக்கிய இலக்கணச் செய்திகள் தமிழ் மக்களது அறிவுக்கும், சிந்தைக்கும் அரிய விருந்தளித்தன. ரா. இராகவ ஐயங்காருக்குப் பின், மு. இராகவையங்கார் சிலகாலம் இதன் ஆசிரியராயமைந்தார். அவருக்குப் பின் தமிழ்ச் சங்கத்தின் தலைமையாசிரியராக விளங்கிய திரு நாராயணையங்கார் அவர்களே பத்திரிகைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

தமிழ் நூலாராய்ச்சித்துறை மு. இராகவையங்கார், சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயர், இவர்களது அரிய தொண்டுகளாற் சிறப்புடன் நடைபெற்றது. பல தமிழ் நூல்களும் மேற்கோள் விளக்கத்துடன்கூடிய அகராதி யொன்றும் பதிப்பிக்கப்பெற்றன. சிங்காரவேலு முதலியார் வரைந்த 'அபிதான சிந்தாமணி' என்ற அரிய தமிழ் வெளியீடும் தமிழ்ச் சங்க வெளியீடாகத் தோன்றியது.

தமிழ்ச் சங்கம் அமைந்த பிறகு, பாண்டித்துரை அவர்கள் அதன் ஆக்கத்திற்கொண்ட ஆர்வத்தால் மதுரைமாநகர வாசத்தையே பெரிதும் விரும்பினர். இச்சமயத்தில் இராமநாதபுரத்திற்கும் மதுரைக்கும் இரயில் வசதி ஏற்பட்டு விட்டதால் அடிக்கடி மதுரை வந்து செல்வார். சங்க ஆண்டு விழா தமிழ் விழா வாகவே திகழும். நாடெங்குமுள்ள புலவர் மணிகள் ஒருங்கு கூடி மூன்று நாட்கள் தமிழ்ப் புலமையும், ஆராய்ச்சித் திறமும் விளங்கச் சொற்பொழிவாற்று வதைக் கேட்பதினும் பெறலரும் பேறு வேறுண்டோ?

பாஸ்கர சேதுபதியின் மறைவு :

சங்கம் அமைந்த மூன்றும் ஆண்டு நம் வள்ளலின் அன்பிற்குரிய சகோதரரும், சேது மன்னருமான பாஸ்கர சேதுபதியவர்கள் தம் முப்பத்தாருவது வயதில் காலமானர். அப்பொழுது உடனிருந்த நம் தமிழ்ச் செல்வர் அடைந்த துயரத்தை யாரால் கூற இயலும்? பாண்டித்துரையவர்கள் உள்ள முருகி,

> என்னுவி யுளங்குளிர அண்ணவென் றன்பொடினி
> யெனையார் சொல்வார்?

மன்னு! மன்னு! மன்னு! வெனயாரை யானினிமேல்
மதித்துச் சொல்வேன்?
பொன்னுடும் தொழும்சேது நன்னுடு புரந்தளிக்கப்
போந்தநீ வேறு?
எந்நாடு சென்றனேயோ? எங்கள்குல மணிவிளக்கே
இசைத்தி டாயே!

என்று வருந்திப் பாடினுர். தமிழகம் முழுவதும் துயர்க் கடலுள் ஆழ்ந்தது. புலவரும் கலைஞரும் வள்ளலை இழந்தோம் என வருந்தினர். பாஸ்கரன் மறைந்தால் உலகம் ஒளியிழப்பது இயற்கையே அல்லவா! தமிழகத்தின் தனிச்செல்வமான பாஸ்கரன் மறைவால் தமிழகமே ஒளியிழந்தது.

நாட்டுப் பற்று :

பாண்டித் துரையவர்கள் நாட்டுப் பற்றும் உடையவர். நம் நாட்டவர் செல்வத்தைப் பெருக்கும் தொழில் முறைகளில் ஈடுபடுவதைப் பெரிதும் விரும்பினர். 'கப்பலோட்டிய தமிழன்' எனப் புகழ் பெற்ற **சிதம்பரனுரை** அறியாதார் எவரும் இரார். அவர் ஆங்கிலேயக் கப்பல் குழுவினர் செய்யும் அநீதிகளை ஒழிக்கச் சுதேசிக் கப்பல் நிலையம் அமைக்க விரும்பினுர். அதற்கு மூலதனம் வேண்டுமல்லவா? அதன் பொருட்டுச் செல்வர்கள் பலரையும் நாடினுர். செல்வர்களிற் பலர் ஆங்கிலேயருக்கு எதிரான முயற்சிக்கு உதவி புரிய அஞ்சினர். அந்நிலையில் தம்மிடம் வந்த பிள்ளையவர்களின் முயற்சியை வாழ்த்தி, லக்ஷ ரூபாய் கொடுத்ததுடன் தம் நண்பர் சிலரையும் அப்பணியில் பங்கு கொள்ளும்படி தூண்டினுர் தேவரவர்கள். பிள்ளையவர்களின் முயற்சி கண்டு உள்ளம் கொதித்த

ஆங்கிலேயர்களும், ஆட்சியாளர்களும் அதனைப் பல வழிகளாலும் அடக்கி ஒடுக்கி அவரையும் கலகக்காரர் எனக் குற்றம் சாற்றிச் சிறையில் தள்ளிவிட்டனர். கப்பல் கம்பெனி குலைந்தது. அதற்கு உதவி செய்த தேவரவர்களையும் அரசாங்கம் ஐயுற்றதுண்டு. ஆனால், தேவரவர்கள், பொருளிழப்புக்கோ அரசாங்கத்தின் அவநம்பிக்கைக்கோ கலங்காமல், தோல்வியுற்றாலும் சிதம்பரனார் முயற்சி சீரிய முயற்சி என்றே பாராட்டினார். இவ்வாறு பல நற் கருமங்களை நடத்தி மேலும் நடத்த நினைவு கொண்டிருந்த தேவரவர்கள், விதியின் கொடுமையால் 1911–ஆம் ஆண்டு டிசம்பர் மீ 2-ம் நாள் விண்ணுலகை அடைந்தார். இச்செய்தி கேட்டுத் தமிழகமே கலங்கியது. புலவர் கூட்டம் தமிழ்ச் செல்வரை இழந்து செயலற்று மயங்கியது.



ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.

2. அருட் செல்வர்.

சமரச ஞானச் செல்வம் :

மனிதன் நினைத்து, ஆராய்ந்து, செயலாற்றி வாழ்கின்றான். நினைப்புக்கும் ஆராய்ச்சிக்கும் செயலுக்கும் நிலைக்களனாக உள்ளவற்றை மனம், மொழி, மெய் என்பர் அறிஞர். இவற்றின் விளைவுகளே இன்பம், அறம், பொருள் என்பன. இம்மூன்றும் ஒருங்குடன் வளர்வதே உத்தம வாழ்க்கை. அதுவே இயற்கை நெறி. இவற்றுள் ஒன்றைப் புறக்கணித்து ஒன்றை மட்டும் வளர்க்கும் மனிதன், ஆக்கத்தைத் தேடுவதாக எண்ணி, தனக்கும் பிறர்க்கும் அழிவையே தேடுபவன் ஆவான். ஆகவே, முற்கூறியபடி மூன்றையும் ஒன்றுபட வளர்க்கும் செந்நெறியே சன்மார்க்கம் என்ற சமரச மார்க்கம். அவ்வுயரிய நெறி, சாதி, மதம், நாடு, மொழி, இனம், பால் முதலிய எவ்வகை வேறுபாடுமில்லாதது; எல்லோருக்கும் பொதுவானது; முடிவிடம் நோக்கி மேலும் மேலும் விரிந்து செல்வது. நமது நாடு, இத்தகைய இயற்கைப் பெருவழிகளுக்கும், அவற்றைக் காலந்தோறும் பண்படுத்தி அமைக்கத் தோன்றும் சமரச ஞானச் செல்வர்களுக்கும் பேர்போனது. அவ்வாறு தோன்றிய பெரியார்களுள் **இராமலிங்க அடிகளும்** ஒருவராவர்.

பிறப்பு :

திருவருட்பிரகாச வள்ளலார் என்று சிறப்பிக்கப் படும் இராமலிங்க சுவாமிகள் இன்றைக்கு நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன் சிதம்பரத்தின் அருகில் உள்ள மருதூர் என்னும் ஊரில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் இராமையா

பிள்ளை என்பது. தாயார் பெயர் சின்னம்மையார் என்பது. இராமையா பிள்ளை கல்வியறிவொழுக்கங் களிலும் கடவுட்பற்றிலும் சிறந்து விளங்கினர். அவர் கிராமக் கணக்கராகவும் கணக்காயராகவும் பணிபுரிந்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தார், அவருக்கு மூன்று ஆண்மக்களும், இரு பெண்மக்களும் பிறந்த னர். மக்கள் ஐவருள்ளும் கடைசியாகப் பிறந்தவரே நம் வள்ளலார். இவர் 1823-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 5-ம் நாளன்று பிறந்தார். பெற்றோர் அவருக்கு 'இராமலிங்கம்' என்று பெயர் வைத்தனர்.

சென்னை வாழ்க்கை :

வள்ளலார் பிறந்த சில ஆண்டுகளுக்குள் தந்தை இராமையா பிள்ளை காலமானார். அப்பொழுது மூத்த மகனார் சபாபதிப் பிள்ளையே சற்று வயது வந்தவராய் இருந்தார். தந்தை இறந்த பின் சபாபதிப் பிள்ளை தன் உடன் பிறந்தாரையும் தாயையும் அழைத்துக் கொண்டு சென்னையில் குடிபுகுந்தார். சென்னையில் சபாபதிப் பிள்ளை தமிழ் நூல்களை முறைப்படி நல் லாசிரியர்பால் கற்றுத் தேர்ந்து புராணச் சொற் பொழிவுகள் நிகழ்த்திக் குடும்பத்தை நடத்தி வந்தார். அங்கே அவருக்குத் திருமணமும் நடந்தேறியது.

தமையனார் சீற்றம் :

இராமலிங்கத்திற்கு உரிய வயதானதும் சபாபதிப் பிள்ளை ஓர் ஆசிரியரை அமர்த்திக் கல்விப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார். வள்ளலார்க்குக் கல்விப் பயிற்சியில் மனம் செல்லவில்லை. எப்பொழுதும் தனிமையில் இருந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருப்பார். திடீ ரென்று விழித்துக்கொண்டு முருகப் பெருமான் மீது

பாடல்களைத் தட்டுத் தடங்கலின்றிப் பாடுவார். அவருடைய அற்புதப் பாடல்களைக் கேட்ட ஆசிரியர் 'ஓதாதுணரும் இவருக்கு யானோ கற்பிக்க வல்லேன்' என்றெண்ணிப் பாடம் கற்பிப்பதைக் கைவிட்டார். இதை யறிந்த சபாபதிப் பிள்ளை மனம் வருந்தினார். தம் தம்பி எல்லோரையும் போலக் கல்வி கற்றுச் சிறந்தவனாக விளங்கவேண்டுமென்ற எண்ணத்தால் அவரைத் தம் வழியில் திருப்ப மிகவும் முயன்றார். என்ன முயன்றும், எவ்வளவோ எடுத்துக்கூறியும் வள்ளலார் வழிக்கு வராமை கண்டு, தம் மனைவியிடம் 'இராமலிங்கத்திற்கு இனி இவ்வீட்டில் இடமில்லை. அவனுக்கு உணவும், உடையும் கொடுக்கக் கூடாது' எனக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார். சபாபதிப் பிள்ளை சினங்கொண்டு இவ்வாறு ஆணையிட்டாராயினும், அன்னையினும் அன்புகனிந்த அவர் மனைவியார் நாள்தோறும் தம் கணவர் இல்லாத சமயங்களில் வள்ளலாரை வீட்டின் பின்புறமாக வரச்சொல்லி உணவளித்தனுப்புவார்.

ஓதாதுணர்தல் :

இவ்வாறு நடந்துவருகையில், ஒரு நாள் சபாபதிப் பிள்ளையின் தந்தையின் திதி வந்தது. அன்று சபாபதிப் பிள்ளை, தந்தையின் திதியைச் சிறப்புறச்செய்து, வந்திருந்தவர்களுடன் உணவருந்திவிட்டு அளவளாவிக் கொண்டிருந்தார். அவரது மனைவியார் மட்டும் வள்ளலார் வருகைக்காக உண்ணாது கண்ணீர் சிந்திக் காத்திருந்தார்; மாலை நான்கு மணிக்குமேல் வள்ளலார் புறங்கடையில் வந்து நின்றதும், அவருக்கு அன்னம் அளித்தார். தந்தையின் திதியன்றும்கூட எல்லோருடன் இருந்து நல்லுணவருந்தும் நிலையிழந்து

திருடனைப்போல வந்து நிற்பதைக் கண்ட அம்மையாரது அன்புகனிந்த உள்ளம் எல்லையற்ற பரிவால் நைந்துருகியது. கண்களில் நீர் பெருகிற்று. வள்ளலாரும் அதுகண்டு அழத்தொடங்கினர். பிறகு அம்மையார் ஒருவாறு தேறி வள்ளலாரைப் பார்த்து, 'அண்ணன் சொற்படி நடந்து ஒழுங்காகப் படித்துவந்தால் இப்படித் தொல்லைப்பட வேண்டாமல்லவா' என்று அன்பொழுகக் கேட்டார். அன்பிற்குக் கட்டுப்படாதவரும் உண்டோ? அண்ணனுடைய கடுமொழி கண்டும், இணங்காத வள்ளலார் தாயினுமன்புடைய தமையன் மனைவியார் வேண்டுகோளை ஏற்றார்; இனி ஒழுங்காகப் படிப்பதாகவும் அதற்குத் தனியாக ஓர் அறை கொடுக்க வேண்டுமென்றும் கூறினர். அதன்மேல் சபாபதிப் பிள்ளையும், தம் மனைவியாரின் வேண்டுகோளுக் கிசைந்து தம்பி படிப்பதற்கென்று ஒரு தனி அறையை ஒழித்துக் கொடுத்தார்.

அவ்வறையில் நாடோறும் இராமலிங்கம் இறை வழிபாட்டுக்குரிய பொருள்களைத் தேடிக் கொணர்ந்து திருத்தணிகை முருகப் பெருமானைப் பூசித்து வழிபட்டு வரலானார். முருகப் பெருமான் அவருக்கு ஒன்பதாவது வயதிலேயே காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது. முருகன் திருவருளால் இராமலிங்கம் ஓதாமலே எல்லாக் கலைகளையும் உணரலானார். அன்று முதல் அவர் முருகன்மீது பாக்களைப் பாடி வரலானார். அவர் முருகனை யெண்ணித் தன்னை மறந்து பாடும்பொழுது அண்ணன் மனைவியார் கதவருகே நின்று பாடலைக் கேட்டு இன்புறுவார்.

பெரியபுராணச் சொற்பொழிவு :

சபாபதிப்பிள்ளை ஒரு செல்வர் வீட்டில் பெரிய புராணச் சொற்பொழிவாற்றி வந்தார். ஒரு நாள் எதிர் பாராதவிதமாக அவரது உடல்நலக் குறைவால் சொற் பொழிவுக்குச் செல்ல இயலவில்லை. அதுகண்ட அவரது மனைவியார் வள்ளலாரிடம் சென்று 'தம்பி! அண்ணன் உடல்நிலை சரியாக இல்லை, ஆகவே இன்று நீ சென்று நடராசப் பெருமானைப் பூசித்து, சில பாடல்களையேனும் படித்துவிட்டு வருக' என வேண்டினர். வள்ளலார் அதற்கு இசைந்தார். உடனே அம்மையார் அதைத் தம் கணவரிடம் கூற அவரும் ஒருவாறு இணங்கித் தம்பியை அருகிலழைத்துச் செல்வரிடம் தாம் வர இயலாமையை விளக்கி, இறை வழிபாட்டைச் சிறப்பாக முடித்துவருமாறு கூறி அனுப்பினர்.

வள்ளலார் அவ்வாறே சென்று பெருஞ் சிறப்புடன் வழிபாடுகளை முடித்துச் சொற்பொழிவாற்றத் தொடங் கினர். ஒன்பது மணிக்குத் தொடங்கியது சொற்பொழிவு. இரவு பனிரெண்டு மணியாகியும் முதற் செய்யுளின் முதல் இரண்டடிகட்கு மட்டுமே பொருள் கூறி முடித் திருந்தார். சொற்பொழிவு கேட்கக் கேட்கத் தெவிட் டாத பேரின்ப ஊற்றாக இருந்தது. 'செல்வத்துட் செல் வம் செவிச்செல்வம்' என்பதை அன்று தான் யாவரும் உணர்ந்தனர். அவரது சொற்செல்வம் கேட்போரது ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி உவப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்தது. அன்று முதல் எல்லோருடைய விருப்பத்திற்கிணங்கி அவரே சொற் பொழிவு ஆற்றலாயினர். சபாபதிப் பிள்ளையும் தம் தம்பியைப் பலரும் புகழ்வது கேட்டு மகிழ்ந்து, அவ் வாறே செய்ய அனுமதியளித்தார். கல்விப் பயிற்சிபெறாத

தம் தம்பி பலரும் புகழுமாறு சொற்பொழிவாற்றுவதை அறிய விரும்பிய அவர் ஒருநாள் மறைவில் நின்று கேட்டார்; அறிவுக் கடலாக விளங்கும் கடவுள் தன்மை பெற்றவன் என வுணர்ந்தார்; 'ஐயோ! தம்பி என்ற முறையால் உண்மையுணராது எவ்வளவு கொடுமைப் படுத்தி விட்டேன்' என வருந்தினர்; 'இவன் தம்பியல் லன், முருகப்பெருமான் அவதாரமே' எனக் கருதினர். தம் கருத்தைத் தம் மனைவியிடமும் கூறி, அன்று முதல் அவர் வள்ளலாரிடம் அச்சமும் அன்பும் காட்டி நடந்து வரலானர்.

நூல் இயற்றுதல்:

வள்ளலார் கல்விப்பெருமை பலவூர்களிலும் பரவியது. அந்நாளில் காஞ்சிபுரத்தில் **மகாவித்வான் சபாபதி முதலியார்** என்பவர் வாழ்ந்துவந்தார். அவர் வள்ளலாருடைய பெருமையைக் கேள்வியுற்றுப் பாராட்டியதுடன், சிறியவரும் பெரியவரும் எளிதில் படித்து இன்புறுமாறு ஓர் உரைநடை நூல் இயற்றித்தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். வள்ளலாரும் அதற்கிணங்கி **மனுமுறைகண்ட வாசகம்** என்னும் அரியதோர் நூலை எழிதியுதவினர். சபாபதி முதலியார் அதைப் படித்து மகிழ்ந்து வள்ளலாரது புலமையையும், அருட்டிறத்தையும் வியந்து போற்றினர்.

பின்னர் வள்ளலார் வேறு சிலரது வேண்டுகோட்கிணங்கித் **தொண்டைமண்டல சதகம்** என்னுமோர் நூலை இயற்றினர். அவ்வாறே, அவர் பல சமயங்களில் **சிவநேசவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கிதமாலை** முதலிய நூல்களையும் இறை வணக்கப் பாடல்களை

யும் இயற்றினர். வள்ளலாரது நூல்களையும் பாக்களை யும் எல்லோரும் படித்துப் போற்றி மகிழ்ந்தனர்.

மாணவர் கூட்டம் :

இராமலிங்கரது பெருமையை அறிந்த **தொழுவூர் வேலாயுத முதலியார்** என்ற அறிஞர் அவரிடம் மாணவ ராக அமர்ந்து அவரது அன்பிற்குரியரானார். அவரைத் தலை மாணவராக ஏற்ற இராமலிங்கர் அவரது ஐயங் களைப் போக்கியதுடன் தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் அவருக்குக் கற்பித்து வரலானார். அது முதல் வேலாயுத முதலியார் புகழும் பெருகிற்று. அவரைப் பின்பற்றிப் பல பெரும் புலவர்களும் வள்ளலாரிடம் மாணாக்கராக வந்து சேர்ந்தனர்.

இவ்வாறு வள்ளலார், பலரது அய்யங்களைப் போக் கும் ஞான விளக்காய் விளங்கிச் சென்னையிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் சிறிது காலம் தங்கி வாழ்ந்து வந்தார். வர வர மாணவர் கூட்டமும் விரும்பிப் போற்றும் அன்பர் கூட்டமும் பெருகவே எப் பொழுதும் தனிமையை விரும்பும் அவரது உள்ளம் சலிப்புற்றது. ஆகவே, அவர் சில சமயங்களில் எவரு மறியாமல் அருகிலுள்ள குன்றுகளுக்கும் ஆற்றோரங் களுக்கும் சென்று தியானத்தில் மூழ்கியிருப்பார். இச் சமயங்களில் சீடர்கள் அவரைக் காணாது தேடி வருந்து வர். அவ்வமயம் வள்ளலார் திடீரென்று தோன்றி அவர்கள் துயரத்தைப் போக்குவார்.

விந்தைச் செயல்கள் :

இராமலிங்கருக்கு யோகமார்க்கத்தில் பற்றுண்டு. தனிமையில் அவர் யோகமுறைகளில் பயின்று வெற்றி பெற்றார். அதனால் அவர் பலவகையான விந்தைச்

செயல்கள் புரிவதிலும் வல்லவராஞர். அவ்வன்மையைச் சில சமயங்களில் மக்கள் நன்மை கருதி வெளிப்படுத்திஞர். மக்கள் வியப்புற்றுப் புகழ் பாடும் வண்ணம் அவ்வன்மையைப் பயன் படுத்த அவர் விரும்பவில்லை. இவ்வாறு இருப்பினும் அவரது பெருமை வெளிப்பட்டு மக்களை வியப்பினுள் ஆழ்த்தியது.

ஒரு நாள் இரவு திருவொற்றியூரில் கடவுளை வணங்கி வழிபட்ட பிறகு சீடருடன் புறப்பட்ட சமயம் பெரு மழை தொடங்கி அவர்களை வெளியேற விடாமல் செய்தது. நெடுநேரமாகியும் மழை நிற்கவில்லை. சீடர் பசியால் வருந்துவதுகண்ட வள்ளலார் வடிவாம்பிகை திருமுன்சென்று வேண்ட அனைவருக்கும் அப்பொழுதே உணவு கிடைத்தது. எல்லோரும் உணவுண்டு பசி நீங்கி வியந்து போற்றினர். அப்பொழுது வள்ளலார் இறைவியின் திருவருளை வியந்து **வடிவுடை மாணிக்க மாலை** என்னும் நூலைப் பாடிஞர்.

வள்ளலார் இரஸவாதக் கலையிலும் தேர்ச்சியுற்றிருந்தார். **இரஸவாதம்** என்பது இரும்பு, செம்பு, பித்தளை முதலிய தாழ்ந்த உலோகங்களைப் பொன்ஞக மாற்றுவதாகும். வள்ளலார் உள்ளம் இளமை முதலே எப்பொருளிலும் பற்றுக்கொள்ளாத துறவுப் பான்மையை இயல்பாக உடையது. அவருக்கு ஓடும், பொன்னும் ஒன்றுதான். ஆகவே, சில சமயங்களில் இரஸவாதத்தை வெற்றியுறச் செய்தாலும், தமக்கேனும் பிறர்க்கேனும் அது பயன்படக்கூடாதெனக்கருதி, எவருக்கும் கிட்டாதபடி ஆறுகளிலோ, குளங்களிலோ எறிந்துவிடுவார். இதனைப் பல சமயங்களில் அருகில் இருந்து நோக்கிய ஒருவர் பொருளாசையால் தாமும்

அவரைப்போலச் செய்ய முற்பட்டார். உடனே அவர் கண்ணொளி மழுங்கியது. அவர் நடுநடுங்கி இராமலிங்க ரிடம் உண்மையைக் கூறித் தம்மை மன்னிக்குமாறு வேண்டினர். இராமலிங்கர் அவரை மன்னித்து மீண்டும் அவர் கண்பார்வை பெறச்செய்தார். அதி லிருந்து அவர் அக்கலைப் பயிற்சியைக் கனவிலும் கரு தாமற் கைவிட்டாராயினும், அவரால் இராமலிங்கர் இரஸவாதம் செய்துவருகின்ருர் என்ற வதந்தி எங்கும் பரவிற்று. இவ்வதந்தியே, இராமலிங்கரது பெருமை யால் உலகம் அடையவேண்டிய நன்மைக்கு ஒரு பெருந் தடையாயிற்று.

வள்ளலாருக்குச் சுந்தர சுவாமிகள் என்ற பெரி யார் ஒருவருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இருவரும் சின்னட்கள் கூடியிருந்து பிரியலுற்றபோது வள்ளலாரின் கண்களில் நீர் பெருகிற்று. அதைக் கண்ட அன்பர்கள் காரணம் வினவ அவர், 'சுந்தர சுவாமிகள் இன்னும் சில தினங்களில் மறைந்துவிடு வார்' என்ருர். அவ்வாறே முடிந்தது கண்ட அன்பர் கள் பலரும் வள்ளலார் வருவதுரைத்த வாய்மைக்கு வியப்பும், சுந்தர முனிவர் மறைவிற்கு வருத்தமும் ஒருங்கே எய்தினர்.

ஒரு சமயம், கருங்குழி என்னும் ஊரில் வள்ளலார், வேங்கட ரெட்டியார் என்னும் அன்பர் இல்லில் தங்கி யிருந்த பொழுது, ஒரு நாள் இரவு பாக்களை எழுதிக் கொண்டே யிருந்தார். அப்போது விளக்கில் எண் ணெய் குறையவே ஒளி மங்கத் தொடங்கிற்று. வள்ள லார் செய்யுளில் ஆழ்ந்த நினைவால் அருகில் செம்பி லிருந்த தண்ணீரை எண்ணெய் என்ற நினைப்புடன்

விளக்கில் ஊற்றினார். விளக்கு அணையாமல் சுடர்விட்டெரிந்தது. இரவு முழுவதும் அவ்வாறே தண்ணீராலேயே விளக்கு எரிந்ததை மறுநாட் காலையில் அறிந்த ரெட்டியார் அவரது கடவுள் தன்மைக்கு வியந்து அவரைக் கடவுளாகவே கருதி வழிபடலானார். இவ்வாறு அவர் நிகழ்த்திய அற்புதங்கள் பல. இவ்வற்புதங்களால் அன்பர்களின் உள்ளத்தே இறையன்பைச் செழிக்கச் செய்தார் வள்ளலார்.

திருமணம் :

இராமலிங்கர், இவ்வாறு சொற்பொழிவாலும் அற்புதச் செயல்களாலும் அன்புகனிந்த அருட்பாக்களாலும் பலரும் போற்ற வாழ்ந்துவரும் நாளில், இவருக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று உறவினர் முனைந்தனர். வள்ளலார் மனப்பாங்கை அறிந்திருந்தும், அவர் எவ்வளவோ மறுத்துக் கூறியும் சுற்றத்தார் விடாது வற்புறுத்தினர். அதன்மேல் வள்ளலார் தம் தமக்கையார்மகள் தனக்கோட்டியம்மையைத்திருமணம் செய்துகொண்டார். ஆனால் சுற்றத்தார் எண்ணியது போல இவர் இல்வாழ்க்கையில் ஈடுபடவில்லை. பிறப்பிலேயே பற்றற்ற உள்ளத்துடன் தோன்றிய பெரியாரை—உலகம் உய்ய வழிகாட்ட வந்த ஞான விளக்கை—பிறந்தபொழுதே மாயையைக் கிழித் தெறிந்து உண்மை யுணர்ந்துகொண்ட மெய்த் துறவியை உலக வாழ்வில் ஈடுபடுத்தும் முயற்சி எத் தகையதாயினும் அதனைச் செய்வார் எவராயினும் அம் முயற்சி தோல்வியுறுவதில் வியப்பேதுமில்லையல்லவா? தங்கள் முயற்சி தோற்ற பிறகு தாங்கள் செய்த பிழைக்குச் சுற்றத்தார் வருந்தினர்.

வள்ளலார் அருட்பணிகள்:

வள்ளலார் எல்லா வுயிர்களும் இன்புற்று வாழ வேண்டும், துன்பம் ஒழியவேண்டும் என்னும் கருத்துடன் அது நிறைவேறுவதற்கு ஒரு அற நிலையம் அமைக்க விரும்பினர். தம் விருப்பத்தைத் தம் மாணவர்களிடம் கூற அவ்வாறே மாணவர் அன்பர் முயற்சியால் வடலூரில் அறநிலையம் தோன்றியது. அது நடைபெறுவற்கு ஒன்பது காணி நிலம் கொடுக்கப்பட்டது, இன்றும் அது தன் சீரிய தொண்டைச் செய்து வருகின்றது.

வள்ளலாருடைய அறிவுரைகள் உயர்ந்த பொது நோக்குடையன.

> "உயிர்களிடம் அருள்காட்ட வேண்டும், அன்பும் அருளுமே இறைவனை அடைதற்குரிய நேரிய வழிகள்; கடவுட் பெயரால் உயிர்க் கொலை புரிதல் கொடியது. அது கடியப்படுதல் வேண்டும். உலகிலுள்ள, எல்லா மதங்களும் சாற்றும் உண்மை சன்மார்க்கமே. அச் சமரச சன் மார்க்கமே உண்மை நெறி. எவ்வித வேற்றுமையும் பாராட்டலாகாது. அன்பே சிவம்"

என்ற இவைகளே அவரது அறவுரைகளுள் முக்கியமானவை.

1867–ஆம் ஆண்டில் வள்ளலார் சமரச சுத்த சன் மார்க்க சங்கம் என்னும் இயக்கத்தைத் தோற்றுவித்தார். உலக மக்கள் யாவரும் சகோதரப் பான்மை பூண்டு வாழவேண்டுமென்பதும், அதற்கு மறை நூல்களிலுள்ள உண்மை அறவுரைகள் பரவவேண்டும் என்பதுமே இதன் நோக்கங்களாம். இப்பொழுது

இச்சங்கத்தின் கிளைகள் பலவூர்களிலும் விரிந்து சிறந்த தொண்டாற்றி வருகின்றன.

இராமலிங்கர் வருவது கண்டுரைக்கும் வாய்மை பற்றிய நிகழ்ச்சியொன்று முன்னமே கூறப்பட்டது. அவருடைய கருத்துக்களில் சில நாளடைவில் உண்மை யாவதைக்கண்டு பெருவியப்புற்றனர் பலர். தம் கருத்துக்களைத் தம் நாட்டவர் விரும்பி ஏற்றுக்கொள்ளா விடினும், மேனாட்டார் அவற்றைப் போற்றுவர் எனக் கூறுவர். 'ஊன் உண்ணும் பழக்கம் நாளடைவில் குறையும். சாதி இன வேற்றுமைகள் விரைவில் மறைந்துவிடும். அமெரிக்கர், ருஷ்யர் முதலானோர் உலக வொற்றுமைக்குப் பாடுபடுவர்' என்ற இவை போன்ற கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார்.

தோற்றம்:

இராமலிங்கர் பார்வைக்கு மெலிந்த தோற்ற முடையவர். எப்பொழுதும் நிமிர்ந்த பார்வையுடன் இருப்பார். அவர் தம் கடைசிக் காலத்தில் நீளமான முடியை வளர்த்திருந்தார். கால்களில் பாதரட்சை அணிவார். இரண்டு வெள்ளை ஆடைகளே இவருக்குப் பழக்கமான உடை. இவர் சிறிதும் சோர்வுற்று இளைப்பாறுவதில்லை. இரண்டு மூன்று நாளைக்கொரு முறை ஒன்று அல்லது இரண்டு கவளம் உண்பார். பல தடவைகளில் பல மாதங்கள் சர்க்கரைத் தண்ணீரை மட்டும் உட்கொண்டு வேறு உணவருந்தாமலே இருப்பதுண்டு.

மறைவு:

யோகசாதனங்களில் பல படிகளைக் கடந்த வள்ளலார் மேலும், அதில் முழுவெற்றிப்பெறப் பலவேறு

பயிற்சிகளை அடிக்கடி மேற்கொள்வாராயினர். அதற்காகச் **சித்திவிளாகம்** என்னுமிடத்தில் ஒரு தனி மாளிகை அமைத்துத் தனிமையில் கதவை மூடிக்கொண்டு பயிற்சிகளை மேற்கொள்வார். அவ்வறையிலிருந்து சில நாட்கள் வெளிவராமலே இருந்து விடுவர்; பிறகு தாமாக வெளிப்போந்து சொற்பொழிவாற்றுவார்; அற்புதப் பாடல்கள் பல இயற்றுவார்; மீண்டும் மாளிகையுட்புக்கு மறைந்திருப்பார். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அவர் சீடரையும், அன்பரையும் நோக்கித் தாம் இன்னும் இரண்டரை நாழிகையில் மறையப் போவதாகக் கூறி, அறைக்குள் சென்று, கதவைத் தாளிட்டுக்கொண்டார். அவர் அவ்வாறு செல்லுமுன் 'அன்பர்கள் தாம் காட்டிய அருள் நெறியில் வழிபட்டு வந்தால், அருட்பெருஞ்சோதி ஆண்டவன் விரைவில் தோன்றிப் பல திருவிளையாடல்களைப் புரிவான், உலகின் துயர்தீரும்' எனக் கூறினர். அவர் அறைக்குட்புக்க நாள் 1874-ஆம் ஆண்டு தைத் திங்கள் 19-ஆம் நாள் வெள்ளிக்கிழமையாகும். பல மாதங்கள் கதவு திறக்கப்படாமலே இருந்தது. சீடர்கள், வள்ளலார் ஆணைப்படி நடந்து அதைப் பாதுகாத்து வந்தனர். இதற்குள் அவர் இரஸவாதம் செய்கிறார் என்ற வதந்தி எங்கும் பரவியது. அரசாங்கம் அதை அறிய விரும்பிற்று. தாசில்தார் ஒருவர், வீண் பேச்சுக்களை நம்பிக் கலெக்டருடனும், ஒரு டாக்டருடனும் வந்து சீடர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேளாமல் கதவையுடைத்தார். கண்டதென்ன? காலியாயிருந்த அறையையே கண்டார். வள்ளலார் மறைந்த விந்தை இன்றளவும் தீராத விந்தையாகவேயுள்ளது. அவரது ஊன்உடலை இன்றுவரை யாரும் காணவில்லை. கலெக்

டரும், டாக்டரும் இந்த அதிசயத்தைக்கண்டு "கடவுள் அருள் பெற்றவர் ஆற்றலை யாரால் அளவிட்டறிய முடியும்" எனக் கூறிச் சென்றனர்.

இராமலிங்கர் சமரச சன்மார்க்கம் விளங்க அவ்வப் பொழுது பாடிய அருட்பாக்கள் பல. அதனால், அவர் **திருவருட்பிரகாச வள்ளலார்** என்றழைக்கப் பெற்றார். அவர் பாடிய பாக்கள் அனைத்தையும் அவரது முதல் மாணுக்கர் தொழுவூர், வேலாயுத முதலியார் அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கித் **திருவருட்பா** என்னும் பெயரால், 1867-ல் ஆறு திருமுறைகளாகப் பகுத்து வெளியிட்டார். அப்பாக்கள் சொற்சுவையும், பொருட் சுவையும், பத்திச் சுவையும், சமரசப்பண்பும் பழுத்து விளங்குவன.



ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்.

3. இசைச் செல்வர்

இன்னிசையின் மேன்மை :

இன்னிசையின் மேன்மையை எவரும் உணர்வர். அது உயிர்ப் பண்பை வளர்க்கும் உயரிய கலை. கொடு விலங்கினங்களும் இசையின் வசப்பட்டுத் தம் கொடுஞ் செயலை மறந்துவிடும். அமுத கீதங்களால் கல்லும் வெண்ணெய்யென உருகும். மரங்களும் அசைவற்று நிற்கும். சிறு குழந்தைகள், தாய்மார் பாடும் தாலாட்டுப் பாடல்களைக் கேட்டுப். பசியையும் அழுகையையும் மறந்து உறங்கிவிடும். நாள் முழுவதும் உழைப்பவர் தங்கள் சோர்வை மறந்து இன்னிசையில் மூழ்கி மகிழ் வர். இவ்வாறு எவ்வுயிரும் இசைக்கு வசப்படும் இயல் பால் எல்லாவுயிரும் தானேயாகிய ஈசனும் அதற்கு மகிழ்கின்றான். இக்காரணத்தாலேயே அன்பர்கள் இறைவனைப் பண்ணுடன் பாடித் துதிக்கின்றனர். ஏழிசையாகவும் இசையின் பயனாகவும் இறைவன் விளங்குகின்றான் என்று நூல்கள் கூறுகின்றன. நாரத முனிவரின் யாழிலிருந்து வெளிப்படும் அமுத கானம் சிவபெருமானது நெற்றித் தனிக்கண் நெருப் பைக் குளிர்விக்கும் சிறப்புடையது என்று கூறுவர் பெரியோர்.

இசைச் செல்வர் தியாகராஜர் :

இத்தகைய இன்பமளிக்கும் இசைச் செல்வத்தால் இறைவனை வழிபட்ட பெரியார்களுள் அன்பர் **தியாக ராஜரும்** ஒருவர். அவர் இறைவனிடத்து அழியாத அன்பு பூண்டவர். கடவுளருளால் பெற்ற இசைச் செல்வத்தைக் கடவுளுக்கே அடிப்படுத்தி அவ்வின்

கலைக்குப் புத்துயிர் அளித்த பெரியார் அவர்; தேனினும் இனிய தெலுங்கு மொழியில் அமுதமயமான பாட்டிசைத்துப் புகழ் பெற்றவர்.

பிறப்பு :

சோழவள நாட்டைச் சேர்ந்த திருவாரூரில் சுமார் நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் **கிரிராஜ கவி** என்றொரு அந்தணர் வாழ்ந்து வந்தார். இவர் தாய்மொழியாகிய தெலுங்கிலும், வட மொழியிலும் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். இவருக்கு இசையிலும் நல்ல தேர்ச்சி உண்டு. இவர் அக்காலத்தில் தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னரிடம் அவைக்களப் புலவராக இருந்து வந்தார். இவருக்கு நான்கு ஆண் மக்கள் பிறந்தனர். அம்மக்களுள் ஒருவரான **இராமப் பிரும்மம்,** நற்குண நல்லொழுக்கங்களில் தந்தையைப் போன்று விளங்கினார். தக்க வயது வந்ததும் இராமப் பிரும்மம் **சாந்தை** என்ற மங்கையை மணந்தார். அந்த அம்மையும் கணவனுக்கேற்ற மனைவியாய் இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தார்; இவ்வுத்தமத் தம்பதிகளுக்கு ஆண் மக்கள் மூவர் பிறந்தனர். அவருள் மூன்றாவதாகப் பிறந்தவரே நம் **இசைச் செல்வர் தியாகராஜர்.** அவருக்கு முன்னவர் இருவரும் முறையே **ஜப்பேசன், பஞ்சாபகேசன்** என்று பெயரிட்டனர்.

வறுமையிற் செம்மை :

"இருவே(று) உலகத் தியற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு"

என்பது பொய்யாமொழியன்றோ? அவ்வியல்பின்படி இராமப்பிரும்மத்தின் குடும்ப வாழ்க்கை வறுமையிருளில் உழன்றுகொண்டிருந்ததாயினும் அவர் தம் அறி

வொளியால் அதனைப் புறங்கண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார். வறுமைநிலை தமக்கு எவ்வித மாறு பாட்டையும் விளைக்க முடியாத உள்ள நிறைவுடைய ராகத் தாம் இருப்பினும், தம்மக்கள் நல்வாழ்வு பெறச் செய்தல் தம் கடனுதலை யுணர்ந்து, திருவாரூரைவிட்டுத் திருவையாற்றில் குடியேறினார் இராமப்பிரும்மம். அங்கும் வருமை விட்டபாடில்லை. வைகறையில் எழுந்து காவிரியில் மூழ்கிக் கடன்களை முடித்துப்பின் கடவுள் நாமங்களைச் சொல்லிப் பஜனை செய்துகொண்டு வாழ்க்கையை நடத்திவந்தார்.

ஒரு சமயம் தஞ்சை மன்னர் அவரது வறுமை நிலையைக் கேள்வியுற்று அவருக்கு ஒரு வீடு கட்டித் தருவதாகக் கூறினர். துறவுள்ளம் படைத்த இராமப் பிரும்மமோ அதை வேண்டாம் எனப் பணிவுடன் மறுத்தார். அரசர் விடாது வேண்டவே அவர் முடிவில் ஒருவாறு அக்கொடையை ஏற்றுக்கொள்ள இசைந்தார். எனினும் சில தினங்களில் அவ்வீட்டைத் தம்மினும் தாழ்ந்த நிலையிலிருந்த ஒருவருக்கு வழங்கிவிட்டார். அது கண்ட அனைவரும் அவரது பற்றற்ற உள்ள நிலையை வியந்தனர்.

இசைப் பயிற்சி :

இராமப் பிரும்மம் தம்மக்கட்குத் தாமே ஆசிரிய ராக இருந்து தாய் மொழியாகிய தெலுங்கையும், வட மொழியையும், வேதங்களையும் கற்பித்தார். மக்கள் மூவருள்ளும், தியாகராஜரே நன்கு கற்றுத் தேர்ந்தார். நாளடைவில் மக்கள் மூவருக்கும் மணவினை நடை பெற்றது. இராமப் பிரும்மத்தின் குடும்பம் பெருகியதே யன்றி, வருவாய் பெருகவில்லை. இந்நிலையில் அவர்

வயதேறப் பெற்றார். அவர் சில காலம் நோய்வாய்ப் பட்டு இருந்து, இறைவனைத் தியானித்துக்கொண்டே அவனடி சேர்ந்தார். இராமப்பிருமத்தின் மனைவியாரும் அவர்க்குப்பின் அதிகநாள் உயிரோடிருக்கவில்லை. கணவினிறந்த சில திங்களில் அவ்வம்மையும் காலமாயினர். அதன் பிறகும் சகோதரர் மூவரும் சிலகாலம் ஒரு குடும்பமாகவே வாழ்ந்துவந்தனர். தியாகராஜர் அவ்வூரிலிருந்த வேங்கடரமணதாசர் என்பாரிடம் இசைபயின்று மிகவிரைவில் நல்ல தேர்ச்சியடைந்தார். இவர், பண்ணிசைத்துப் பாடுவதைக் கேட்பவர் தம்மை மறந்து ஈடுபடுமாறு மிக்க இனிமையுடன் பாடுவதிலும், கீர்த்தனைகள் புதிதாக இயற்றுவதிலும் திறமைபெற்று விளங்கினார்.

கடவுட்பற்று :

சகோதரர்க்குள் மனவேறுபாடு தோன்றியது. ஒற்றுமை குலைந்தது. தியாகராஜர் தம் தந்தையைப் போன்றே கடவுட்பற்று மிக்கவராய் துறவுள்ளத்துடன் வாழ்க்கை நடத்தினார். அவரை அவரது சகோதரர் இருவரும் 'ஒரு தொழிலும் செய்ய விரும்பாத வீணன்' என்றிகழ்ந்தனர். ஆகவே அவர்கள் பிரிந்து தனியாக வாழவிரும்பினர்; அப்பொழுதாவது 'தம்பி உலகியலை உணர்ந்து திருந்தி ஏதேனும் ஒரு தொழிலில் முயன்று வருந்தித் தேடி வாழ்வான்' எனக்கருதினர். தியாகராஜர் எதனையும் எண்ணாமல் குடும்பத்திலிருந்த இராமபிரான் உருவச்சிலையைத் தம் பொருளாக விரும்பிப் பெற்றுப் பூசித்து வரலாயினர். இவரது கடவுட்பற்று மேலும் பெருகிற்று. இராமனைக் குறித்துப் பல கீர்த்தனைகளைப் பாடி வழிபட்டு வரலாயினார் தியாகராஜர்.

அரும்பொருளறிதல் :

ஒருநாள் தியாகராஜர், காவிரியில் நீராடிவிட்டுத் திருப்பி வந்துகொண்டிருக்கையில், ஞானவொளி வீசும் பெரியார் ஒருவர் எதிரேவந்து 'இவ்வூரில் தியாக ராஜர் என்றொருவர் இருக்கிறாராமே அவரது இல்லம் எங்குள்ளது' என வினவினர். தியாகராஜர் மிக்க பணிவுடன் 'அடியேன்தான் தியாகராஜன்' என்று கூறி அவரைத் தம்முடன் அழைத்துச்சென்று, உபசரித்து மகிழ்ந்தார். அப்பெரியார் இவரை நோக்கி 'அன்பிற்கு உறைவிடமாக விளங்கும் உன்னால் இசைக் கலையே ஒளிபெறப்போகின்றது' என்று கூறினர். தியாகராஜர் 'நான் எம்மாத்திரம்? நானா சங்கீதத்தை ஒளிபெறச் செய்ய வல்லேன்' என்று பணிவுடன் மொழிந்தார், அதற்கு அவர் 'நீயா? உன்னுள் விளங்கும் இராமனே அதைச் செய்வான்' எனக் கூறி அவரைத் தம்மருகில் வரச்செய்து, மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரமும் இம்மையே எழுமை நோய்க்கும் மருந்துமாகிய '**ராமா**' என்னும் தாரக மந்திரத்தை உபதேசம் செய்தார். தியாகராஜர் அப் பெரியாரிடம் உபதேசம் பெற்றதும் நீண்டநாளாக எதிர்நோக்கியிருந்த ஞானசிரியனை எதிர்பாராமல் பெற்ற மகிழ்ச்சிப்பெருக்கால் தம்மை மறந்தவராயினர். அதன்மேல், அப்பெரியார் இம்மந்திரத்தைத் தொண் ணூற்றுருகோடி தடவை உருவேற்றுமாறு கூறி விடைபெற்றுச்சென்று மறைந்தார். தியாகராஜர் அல்லும் பகலும் இடைவிடாது முயன்று சில ஆண்டு களுக்குள் தொண்ணூற்றுருகோடியும் உருவேற்றி முடித்தார். இராமநாமத் தியானத்தால் அவருள்ளம் பேரின்பக்கடலில் மூழ்கினற்போன்ற நிலை பெற்றது.

கடவுட் காட்சி :

ஒருநாள் நடுநிசி. அப்பொழுதுதான் மந்திரம் உருவேற்றி முடிந்தது. வாயிற்கதவை யாரோ தட்டுவதுபோன்ற ஓசை கேட்டது, தியாகராஜர் 'கதவைத் தட்டுபவர் யார்? உள்ளே வரலாம்' என்றார். 'கதவைத் தாழிட்டுவிட்டீரே அதை முதலில் திறவும்' என்று விடை வந்தது. 'இதென்ன வியப்பு?' கதவுக்குத் தாழ்ப்பாளே கிடையாதே; எப்படித் தாழிடமுடியும்? இப்படிச்சொல்வது யார்?' என்றெழுந்தார் தியாகராஜர். மீண்டும் 'என்ன ஐயா! ஒன்றும் அறியாதவர்போன்று இருக்கின்றீர்; நீர்தான் என்னை உமது மனக்கோயிலில் வைத்துத் தாழிட்டுவிட்டீரே; விரைவில் திறவுமையா' என்ற குரல் கதவுக்கு வெளியே எழுந்தது. தியாகராஜர் பெருவியப்பினுள் ஆழ்ந்தவராய் விரைந்து சென்று கதவைத் திறந்தார், ஆஹா! அங்கே அவர் காட்சியை என்னென்று வருணிப்பது! பொன்னுடை அணிந்தவர்களாய்ப் பேரொளி வீசும் வடிவுடன் வில்லைத்தாங்கிய கையினராய் வீரர் இருவர் புன்னகை தவழ நிற்கும் அற்புதக் காட்சியைக் கண்டார். 'தாம் உருவேற்றிய மந்திரத்தின் பயன் அவர்களே; அவர்களே இராமலக்குவர்' என உணர்ந்தார் தியாகராஜர். எல்லைமீறிய உவகை கொண்டார்; ஆடினார்; பாடினார்; அவர்களுடைய திருவடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்தார்; மெய்மறந்து சிறிது நேரம் தரையிற் கிடந்து எழுந்துபார்த்தார்; அப்பொழுது அவ்விருவரையும் காணமல் ஆற்றாமை மேலிட 'இராமா ஏன் என்மீது உனக்குக் கருணை பிறக்கவில்லை' என்று பொருள்பட 'ஏல நீ தயாராது' என்னும் கீர்த்தனையைப் பாடி உள்ளம் உருகினர்; தாரகமந்திரத்தை உபதே

சித்த குருவை நினைந்து 'சற்குருஸ்வாமி கிசாடி எவரே' என்ற கீர்த்தனையைப்பாடினார்; இறைவனது அழகிய திருக்கோலத்தை எண்ணி மகிழ்ந்தார்; அவன் பேரருளை வியந்தார். கீர்த்தனைகள் கடல்மடை திறந்த வெள்ளம்போற் பெருகின. ஊரெங்கும் இவர் பெருமை வெளிப்பட்டது.

வழிபாட்டு விழா.

அவருடைய வீட்டில் இறைவழிபாடும் இன்னிசை முழக்கமும் முன்னைவிடப் பன்மடங்கு சிறப்பாக நடைபெறலாயின. மூன்று காலமும் தவருது இராமபிரான் உருவத்திற்குப் பூசை நடைபெற்றது. அடிக்கடி திருவிழாக்களும் கொண்டாடப் பட்டன. அவ்வூரிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள மக்கள் திரள் திரளாய் வந்து வாழ்த்திசையில் உள்ளமுருகி வழிபாடுகளில் கலந்து கொண்டு மகிழ்ந்து செல்வர். அவர்கள் தம்மாலியன்ற உதவிகளை அவ்வப்பொழுது தியாகராஜருக்கு மனமுவந்து செய்வாராயினர்.

இசை நூல் பேற்றது.

ஒரு நாள் உச்சிப்பொழுதில் ஒரு கிழ வேதியர் தியாகராஜர் 'எங்கே' எனக் கேட்டுக்கொண்டே வீட்டினுட்புகுந்தார். அப்பொழுது தியாகராஜர் தம்மை மறந்து இராமனைப் பூசித்துப் பாடிக்கொண்டிருந்தார். வந்தவர் அது முடியும் மட்டும் ஒருபுறம் அமர்ந்திருந்தார். பூசை முடிந்தபின் தியாகராஜர் எழுந்து கிழ வேதியரை வரவேற்று உபசரித்து 'உச்சிப்பொழுதாய் விட்டபடியால்' இங்கேயே உணவருந்தலாம்' எனப் பணிவுடன் விண்ணப்பித்துக்கொண்டார். அக்கிழவர் 'நான் நெடுந்தூரத்திலிருந்து உன்னைப் பார்க்கவே வந்

தேன். இன்னும் நீராடவில்லை; காவிரியில் நீராடிவிட்டு வருகிறேன். இதை வைத்துக்கொள்' என்றொரு ஓலைச் சுவடியைக் கொடுத்துவிட்டு எழுந்து சென்றார். சென்ற வர் திரும்பவேயில்லை. தியாகராஜர் அவரைக் காணுமல் ஊர் முழுவதும் தேடியும் பயன் பெருது வீடு சேர்ந்து, விருந்தினரைக் காணுத மனச்சோர்வாலும் கடும் வெய்யிலில் தேடியலைந்ததால் ஏற்பட்ட உடற்சோர்வாலும் உண்ணுமலே படுத்துக் கண்ணயர்ந்துவிட்டார். அப்பொழுது கனவில் அக்கிழ வேதியர் தோன்றி, 'அன்பனே! நான் நாரத முனிவன், உன்னிடம் கொடுத்த ஏடு '**சங்கீத ஸ்வரார்ணவம்**' என்ற நூலாகும். உன்னால் இசைக்கலை புத்துயிர் பெறப்போவதால் உன்னிடம் அதைக் கொடுத்தேன். நீ அந்நூலை நன்கு கற்றுத் தேர்ந்து உலகில் வழங்குக' என்று கூறி மறைந்தார். தியாகராஜர் விழித்துப் பார்க்கையில் கனவு உண்மையாயிருப்பதை உணர்ந்தார். நாரத முனிவரை நேரே கண்டும் அறியாதிருந்து விட்டோமே என வருந்தி 'நாரத குருஸ்வாமி' 'நாரத கானலோல' எனப்பல கீர்த்தனங்களை அவற்மேற் பாடினுர். பிறகு சில நாட்களில் அந்நூலை ஐயம் திரிபு அறக் கற்றுணர்ந்து மாணவர் பலர்க்கும் கற்பிக்கலானுர்.

கலைச்செருக்கடக்கியது.

அந்நாளில் ஆந்திர நாட்டைச் சேர்ந்த பொப்பிலி என்னும் ஊரில் **கேசவையா** என்றொரு சங்கீத வித்துவான் இருந்தான். அவன் கலைச்செருக்கால் இசை வல்லார் பலரையும் இசை வாதுக்கழைத்துத் தன் திறமையால் தோல்வியுறச் செய்து வந்தான். சென்ற இட

மெல்லாம் அவனே வெற்றி பெற்றதால் கலைச் செருக்குத் தலைக்கேறியது. இனி ஆந்திர நாட்டில் தனக்கு நிகர் யாருமில்லை எனக் கூறிக்கொண்டு தமிழ் நாட்டிலும் அவ்விதமே வெற்றிக்கொடி நாட்ட வந்தான். திருவையாற்றிலுள்ள தியாகராஜரைப்பற்றிக் கேள்வியுற்றான். கேசவையா இவரை வென்றால் தமிழ் நாட்டையே வென்றதாகிவிடும் என்றெண்ணி நேரே தியாகராஜரிடம் வந்து அவரை இசைவாதுக் கழைத்தான். அன்புப்பணியால் அமைதி குடிகொண்டு விளங்கும் தியாகராஜர், அமுதமயமான இன்னிசை பயின்றும் அகந்தையால் வாதுக்கு வந்து நிற்கும் கேசவையாவின் மனநிலைக் கிரங்கிச் சிறிது நேரம் மௌனம் பூண்டார். தலைக்கேறிய செருக்கால் தடுமாறிய கேசவையா, 'என்ன யோசனை செய்கிறீர்; முடியாதாயின் யாம் செல்வோம்' என வெற்றிகொண்ட மனப்பான்மையுடன் பேசினான். தியாகராஜர் பொறுமையாக 'ஐயா பாடுகிறேன்; ஆனால் உம்முடன் இசைவாது செய்யும் எண்ணத்துடன் அன்று; எப்பொழுதும்போல் இறைவனைப் பாடுகின்றேன் கேளும்' எனக் கூறிச் சில கீர்த்தனைகளைப் பாடினார். கடவுட் பற்றில் ஆழ்ந்த உள்ளத்தினின்று அமுதப் பண்ணில் தோய்ந்தெழுந்த உயிர்ப் பாடல்கள் கேட்போர் யாவரையும் தம்பால் ஈர்த்தன. கேசவையாவும் மயங்கினான். 'இசைக்கடலாக விளங்கும் இவருடனா நான் வாது செய்ய வந்தேன்' என்றெண்ணிச் செருக்கொழிந்து தியாகராஜரைப் பணிந்து தன்னை மன்னித்துத் தன்னையும் ஒரு மாணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிந்து வேண்டி நின்றான். தியாகராஜர் இறைவன் திருவருளை வியந்து கேசவையாவுக்கு ஆறுதலும் அறிவுரையும் கூறி அனுப்பினார்.

துறவிக்கு வேந்தன் துரும்பு :

அக்காலத்தில் தஞ்சாவூரை ஆண்ட சரபோஜி மன்னர் தியாகராஜர் புகழைக் கேள்வியுற்று அவரது வாயால் பாடல் பெற விரும்பினர். அதற்காக அவரை அழைத்துவருமாறு ஆட்களை ஏவினர். தியாகராஜர் அரசரிடம் மதிப்பு மிக்கவரேனும் எதற்காயினும் எவருடைய ஆணைக்காயினும் தம் உயிரினும் மேலாகக் கருதிய இராமனை விட்டுச்செல்ல விரும்பவில்லை. ஆகவே, அவர் அமைதியாக எனக்கு 'அரசரிடம் வேலையொன்றுமில்லை; வேண்டுமாயின் அரசர் இங்கு வந்து பார்த்துப் போகலாம்' என விடை கூறி அவ்வாட்களை அனுப்பிவிட்டார். துறவிக்கு வேந்தன் துரும்பல்லவா? இவ்விடத்தில் மகேந்திர பல்லவன் ஆணையை மதியாது 'நாமார்க்கும் குடியல்லோம்' என முழக்கிய நாவுக்கரசரது பெருமித வுணர்ச்சி ஒப்புநோக்கி அறியற்பாலது.

அரசர் சீற்றமும், தெளிவும் :

தியாகராஜர் விடையைக் கேட்ட அரசர் சீற்றம் கொண்டார். 'என்ன நமதாட்சிக்குட்பட்ட இவர் நமதாணையைப் புறக்கணித்து நம்மை அவமதிப்பதா' என உள்ளம் கொதித்துக் கூறினர். அருகிலிருந்த சிலர் அரசருக்கேற்றபொழுது 'அடுக்கும் ஈது, அடாது ஈது' என்ற ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டும் வலியற்றவராதலின் அரசர் எண்ணியவழியே 'ஆம் இது மிகக் கொடிய குற்றம்; இதனை வளரவிட்டால் ஆட்சியின் கட்டுப்பாடு கெடும்; இதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்' எனக் கூறி அரசர் மனக்கொதிப்பை வளர்த்தனர். உடனே அரசர் ஆராயும் நிலை யிழந்தவராய் 'இதோ அவரது செருக்கை ஒடுக்குகின்றேன்'

எனக்கூறி அருகில் நின்ற ஓர் அமைச்சனை நோக்கி 'இப்பொழுதே சில வீரர்களை அனுப்பி அவரை இழுத்துவரச் செய்க' என்று உரக்கக் கூறினர். அக்கணமே தாங்கமுடியாத சூலை நோய் அரசரைப் பற்றிக் கொண்டது. அரசர் புழுவாய்த் துடித்தார். பிறகு மெய்யன்பராகிய தியாகராஜரைக் கடுமையாகப் பேசியதே இதற்குக் காரணமாயிருக்கலாம் என்றுணர்ந்து பரிசனங்கள் சூழ வந்து தியாகராஜரை வணங்கித் தன்னை மன்னித்து நோயைத் தீர்த் தருளுமாறு வேண்டி நின்றார். தியாகராஜர் இறைவன் சோதனை எண்ணி அரசர் நிலைக்கு மனமிரங்கி இராமனைத் துதித்தார். அவ்வளவில் அரசர் நோய் நீங்கித் தியாகராஜரை மீண்டும் பணிந்து வாழ்த்தித் தம் இருப்பிடம் சென்றார். அரசரது சீற்றத்தை வளர்த்துவிட்ட அமைச்சர்களும் தம் அறிவு திருந்திச் சென்றனர்.

அண்ணன்மார் செய்த அவச்செயல்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற தியாகராஜரது தமையன்மார் இருவரும் "கொற்றவன் அறிதல் உற்றிடத்துதவி" என்பதை உணராமல், 'அவன் தயவால் வரக்கூடிய நன்மைகளைத் தான் அடையாது போனதன்றித் தன்னைச் சேர்ந்தவர்களும் பெரு வண்ணம் செய்துவிட்டான் இவன்' எனச் சினம் கொண்டனர். இவ்வாறு உலகம் அறியாமல் தியாகராஜர் வாழ்வதற்கு ஸ்ரீ ராமனுடைய வடிவமே காரணம் என்றெண்ணி, ஒரு நாள் தியாகராஜர் வீட்டிலில்லாத சமயம் அதனை எடுத்துச் சென்று காவிரியில் வீசி எறிந்துவிட்டனர்; வடிவத்தைத் தொலைத்துவிட்டால் அவர் திருந்திவிடுவார் என்றெண்ணிக் கொண்டனர். அவர்கள் பேதமை இருந்தவாறு என்னே!

தியாகராஜர் துயரம்.

வீடு சேர்ந்த தியாகராஜர் ஸ்ரீ ராமனது சிலையைக் காணமல் மனம் பதைத்தார்; பல இடத்தும் தேடினர், புலம்பினர், தாயைப் பிரிந்த கன்றுபோலக் கதறி அழு தார்; சிலை காணமல் போனதற்குத் தமையன் மார்களே காரணம் என்பதை அறிந்தார். 'இராமா! அறியாமையால் உனக்கு இவ்வின்னல் விளைத்த அவர்களை மன்னிப்பாய், நீ எவ்விடத்தும் இருப்பவன்; ஆனல் உன் சிலை வடிவத்தைப் பாராமல் என்னல் இருக்க முடியவில்லையே; நீ எங்கே மறைந்திருக்கிருய்' எனப் பலவாறு கூறி வேண்டினர். இறைவனைப் பிரிந்த துயரத்தாலும் அவனைப் பூசிக்க முடியாது போயிற்றே என்ற ஏக்கத்தாலும் உள்ளம் நொந்து உடல் நைந்தார். சரியாக உண்ணமலும் உறங்காமலும் காலம் கழித்தார். இப்படி ஓராண்டு கழிந்தது. இக் காலத்தில் 'இராமாபிராமா' 'மாருபல்க' 'ரா ராமா இண்டிதாக' எனத் தொடங்கும் நெஞ்சை யள்ளும் கீர்த்தனைகளைப் பாடினர். தாயுரைகொண்டு தந்தை சொற் காப்பதற்காகக் கானகம் சென்ற இராமன்மேல் அளவற்ற அன்புகொண்ட இளவலாகியபரதன், அவன் சொற்படி நந்திக் கிராமத்திலிருந்துகொண்டு பதினன் காண்டுகள் கழிந்ததும் அண்ணன் வருவான் எனக் கருதி, நோக்கின் தென்திசையல்லது நோக்காது ஏக் குற்று, ஏக்குற்று இரவிகுலத்துளான் வாக்கிற் பொய் யான்வரும் என்று உயிர்போக்கிப் போக்கி விரதம் பூண்டு தன் உயிரோடும் தன் அண்ணன் மீட்சியை எதிர்நோக்கியிருந்தது போன்று இராமன் வடிவத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார் தியாகராஜர்.

சிலையை மீண்டும் பெற்றது.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் தியாகராஜர் கனவில் ஸ்ரீராமன் தோன்றித் தான் இருக்குமிடத்தைக் கூறி மறைந்தார். அப்பொழுதே தியாகராஜர் விழித் தெழுந்து 'கண்டுகொண்டேன் என் கற்பகத்தை' என ஆனந்த மிகுதியால் ஆடிப்பாடினர். பொழுது புலர்ந்த தும் ஓடோடியும் சென்று, கனவில் கண்ட இடத்தை அடைந்து மணலைத் தோண்டினர். 'என்ன விந்தை' இராமன் சிலை சிறிதும் பழுதுருமல் அங்கிருந்தது. அவர் அதை எடுத்துக்கொண்டு வந்து மீண்டும் உரிய இடத்தில் வைத்துப் பூசித்துக் கீர்த்தனை மழை சொரிந்தார். இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்ட பிறகு அவருடைய தமையன்மார் இருவரும் நல்லறிவு பெற்றவர்களாய்த் தியாகராஜருடன் இறையன்புப் பணியில் ஈடுபட்டனர்.

வேங்கடத்து நிகழ்ந்த விந்தை.

சில ஆண்டுகள் கழிந்த பிறகு தியாகராஜ சுவாமிகள் திருவேங்கடம் என்ற திருப்பதி சென்று, இறைவனைக் காண விரும்பிச் சீடர்களுடன் தல யாத்திரைக்குப் புறப்பட்டார். திருப்பதி யடைந்து இறைவனைத் தரிசிக்கச் சென்ற சமயம் கடவுள் திரு முன்பு திரையிடப்பட்டிருந்தது. 'இவ்வளவு தூரம் வந்தும் இறைவனைக் காணமுடியாமல் திரை மறைத் துள்ளதே. நமது பாவந்தான் திரையாக வந்து மறைக் கின்றதோ' என வருந்தித் 'திரையை விலக்கலாகாதா' என்ற கருத்தில் ஒரு கீர்த்தனை பாடினர். அவ்வளவில் திரை தானுக விலகியது. 'என்ன விந்தை' என்று அங்கிருந்த எல்லோரும் வியப்புற்றுச் சுவாமிகளின்

பெருமையைக் கொண்டாடினர். சுவாமிகளும் சீடர்களும் திருவேங்கடமுடையானைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தனர்.

கன்மாரி காத்த வில் வீரர்.

திருவேங்கடத்தில் சின்னாள் இருந்து திரும்பிவரும் வழியில் **கோவூர்** என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த **சுந்தர முதலியார்** என்னும் செல்வர் சுவாமிகளின் புகழைக் கேள்வியுற்றவராதலின், அவர் சுவாமிகளை எதிர்கொண்டழைத்துத் தம்மூரில் சில நாள் தங்கியிருக்குமாறு வேண்டிக்கொண்டார். சுவாமிகளும் அவ்விதமே அங்குத் தங்கி ஆங்குள்ள சிவபெருமான் மீது சில கீர்த்தனைகளைப் பாடி மகிழ்ந்தார். பிறகு சுவாமிகள் அங்கிருந்து புறப்படுகையில் முதலியார் ஒரு பல்லக்கைக் கொடுத்துச் சுமக்கும் ஆட்களையும் நியமித்துச் சுவாமிகள் பல்லக்கில் செல்லவேண்டும் என வேண்டிக் கொண்டார். மற்றச் சீடர்களும் அதை விரும்பினர். சுவாமிகள் இதுவும் இறைவன் திருவருள் எனக் கருதி மறுக்காமல் ஒப்புக்கொண்டார். பல்லக்குப் புறப்பட்டது. அது புறப்படுமுன் முதலியார் ஆயிரம் பொற்காசு கொண்ட பொற்கிழி யொன்றைச் சுவாமிகளுக்குத் தெரியாமல் அதற்குள் வைத்து வழியனுப்பினர். சுவாமிகளிடம் தெரிவித்தால் அவர் அதை ஏற்றுக் கொள்ளார் எனக்கருதியே அவ்வாறு செய்தார்.

நடு வழியில் அடர்ந்த காடு. அக்காட்டில் வாழ்ந்த ஆறலை கள்வர் பல்லக்கைக் கண்டதும் 'இன்று நாம் நரி முகத்தில் விழித்தோம், நல்ல வேட்டை கிடைக்கும்' எனக் கருதி நாற்புறமும் மறைவில் நின்று கற்களை

வீசிச் சீடர் கூட்டத்தை அச்சுறுத்த முயன்றனர். சீடர்கள் என்ன செய்வதென்றறியாது சுவாமிகளிடம் கூறினர். சுவாமிகள் 'நாம் ஏன் கள்வருக்கு அஞ்ச வேண்டும். மடியில் கனமிருந்தாலல்லவா வழியில் பயம். நம்மிடம் என்ன இருக்கிறது' எனக் கேட்கச் சீடர்கள் முதலியார் பொற்கிழி வைத்துள்ளதைக் கூறினர். அதன்மேல் சுவாமிகள் 'எல்லாம் அவன் செயல்; அவனைத் துதித்து மேற்செல்லுங்கள்' எனக் கூறிவிட்டுச் சில பாடல்களை அப்பொழுதே பாடி இறைவனைப் பணிந்தார். பல்லக்கு மேற்கொண்டு சென்றது. அக்கணமே பல்லக்கின் இரு புறத்தும் இராம லக்குவர் வில்லும் கையுமாக நின்று அம்பு மாரியால் கற்கள் பல்லக்கின் அருகிலும் வராதவாறு காத்துக்கொண்டே சென்றனர். அவர்கள் கள்வர்க்கு மட்டும் காட்சியளித்தனர். கள்வர்கள் பல்லக்கைக் காத்துவரும் வீரர்களின் வில் வன்மையிலும் மேனிப்பொலிவிலும் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவராய்ப் பல்லக்கைத் தொடர்ந்து வந்தனர். பொழுது புலர்ந்ததும் வீரர் இருவரும் மறைந்தனர். கள்வர்கள் பெருவியப்புடன் சுவாமிகள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நிகழ்ந்த செய்தியையும் தாங்கள் கண்ட காட்சியையும் தெரிவித்தனர். 'இரவிலும் ஒளி வீசும் எழில் படைத்த அவ்வீரர்கள் யாவர்? அவர்கள் எங்கே?' எனக்கேட்டனர் கள்வர். தியாகராஜசுவாமிகள் எம்பெருமான் திருவிளையாடலை எண்ணி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியவராய்க் கள்வர்களை நோக்கி, 'அன்பர்களே! நீங்கள் பெறுதற்கரிய பேறு பெற்றவர்கள். இராம–லக்குவரைக் கண்ணுற்றுக் காணும் பாக்கியம் பெற்றீர்கள்' எனக் கூறி வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினர்.

சமாதியடைதல்.

இவ்வாறு பல தலங்களுக்கும் யாத்திரை செய்து மீண்டார் சுவாமிகள். அவர் செல்லுமிடமெல்லாம் புதிய புதிய கீர்த்தனைகள் எழுந்தன. முடிவில் சுவாமிகளுக்கு இவ்வுலகில் தாம் வந்த நோக்கம் நிறைவேறியதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டு 'இராமா உன்னையடையும் நாள் எந்நாளோ' என ஏங்கலாயினர். ஒரு நாள் கனவில் இராமன் தோன்றி 'இன்றைக்குப் பத்தாம் திங்கள் எம்மை வந்தடைவாய்' எனக் கூறி மறைந்தான். அன்று முதல் அவர் இறைவனைச் சேரும் நன்னாளை எண்ணி அமைதியாகக் காலம் கழித்தார். இனித் துறவு பூணுதல் தக்கது எனக்கருதி அவ்விதமே துறவிக்குரிய தீக்ஷையைப் பெற்றார். ஸ்ரீ ராமன் கனவில் கூறிய தைத்திங்கள் பகுள பஞ்சமி நாள் வந்தது. அன்று அவர் தம் சீடர்களை அழைத்து 'இறைவன் அழைப்பு வந்துவிட்டது, நான் அவனை நாடிச் செல்கிறேன், நீங்கள் இன்னிசையின் பொன்னொளியை எங்கும் பரப்பி வாழ்வீர்களாக' எனக் கூறிவிட்டு ராம நாமத்தை உச்சரித்துக்கொண்டே இறைவன் திருவடி எய்தினர். அச்சமயம் ஓர் அதிசய ஒளி அவரது கபாலத்தைப் பிளந்துகொண்டு மேல் நோக்கிச் சென்றதாகக் கூறுவர்.

குருவை இழந்த சீடர்கள் உயிரை இழந்த உடல்களைப்போல் செயலற்று மயங்கினர். பிறகு ஒருவாறு தேறி அவரது உடலைத் துறவிகட்குரிய முறைப்படி திருவையாற்றுக் காவிரிக்கரையில் அடக்கம் செய்தனர். இன்றும் அவ்விடத்தில் அச்சமாதி காட்சியளிக்கின்றது.

அழிவற்ற புகழ்ச் செல்வர்.

தியாகராஜர் இசைக் கலைக்குப் புத்துயிரளிப்பதற்கென்றே உலகில் தோன்றினர். தாம் தோன்றிய செயலைத் திறம்படச் செய்துமுடித்து மறைந்தார். ஒலி வடிவான இன்னிசை அவ்வொலியின் காரணப்பொருளான இறைவழிபாட்டிற்கே பயன்படவேண்டும் என்பது அவர் செய்துகாட்டிய வழியாகும். அப்பொழுது தான் அது உயிர்க்கலையாகும்; மக்களை வாழ்விக்கும் மருந்துமாகும்; உண்மை ஞானத்திற்கும் ஊன்றுகோலாகும். அவ்வாறின்றிக் கலை, உணர்ச்சியைத் தூண்டும் வழிகளையே பின்பற்றிச் செல்லுமாயின் மனிதனை வாழ்விப்பதற்குரிய அது, மனிதனைத் தாழ்விப்பதற்கும் கருவியாகிவிடும். இவ்வுண்மைகளை அவர் வாழ்க்கையிலிருந்தே நன்கு உணரலாம்.

அவரது கீர்த்தனைகள் இசைக்கலையின் மேல்வரம்பாகி மிளிர்கின்றன. இசைப்புலவர்கள் அக்கீர்த்தனைகளாலேயே இசைக்கலையிற் புகழும் பொருளும் பெறுகின்றனர். ஆண்டுதோறும் தைத் திங்கள் பகுள பஞ்சமி நாளன்று, நாடெங்குமுள்ள இசைக் கலைஞர் ஒருங்கு திரண்டு ஆராதனைகளும், இசை விழாக்களும் நடத்திவருகின்றனர். அவ்விசை விழா திருவையாற்றில் மட்டுமன்றிப் பல்வேறிடங்களிலும் பெருஞ் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இசை வளர்த்த அப்பெரியாரின் ஊனுடல் மறையினும், அவரது புகழுடல் இன்றும் இன்னிசையை வளர்த்து வருகின்றது. இவ்வாறு இசைச்செல்வராக இன்றும் வாழ்ந்து வருகின்றார் தியாகராஜர்.

4. புகழ்ச்செல்வர்

தமிழ்நாட்டு வள்ளல்.

உலகில் எளிமையிற் பிறந்து வறுமையில் உழன்று தம் அறிவாலும், அரிய பேருழைப்பாலும், தாமும் வாழ்ந்து பிறர்க்கும் நல்வாழ்வு நல்கும் அரும்பணியாற்றிப் பெரும்புகழ்கொண்டோர் பலர். ஆயின், செல்வத்திற்பிறந்து செல்வம் செழிக்க வளர்ந்து, அச் செல்வம் தேடும் முயற்சி ஒன்றிலேயே ஆழ்ந்து விடாது, மனப் பண்பும் வினைத் திட்பமும் உடையவராய், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற உயரிய நோக்குடன் பணியாற்றிப் புகழ்ச் செல்வராக விளங்குபவர் மிகமிக அரியராவர். அவர்கள் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பதற்கு இலக்கியமாக விளங்குபவர். உயர்ந்த உள்ளம் படைத்தோரையும், சிறந்த சொற்செல்வ முடையோரையும் உலகம் போற்றும். ஆனால், திண்ணிய செயலுடையராலேயே உலகம் வாழும். அவர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்று நிற்கின்றது. என்னை? சிந்தையில் உண்மையும் செயலில் திண்மையும் உடையவரே வினைத் தூய்மை யுடையோராவர். அவர்கள் நினைப்பும் பேச்சும் செயல் வடிவிலேயே காட்சியளிக்கும். ஆதலின், அவர்கள் நினைத்த வண்ணம் செயலாற்றுவதில் வெற்றிபெறுவர். வினையாட்சியில் அவர்களடையும் வெற்றி பிறர்க்குப் பெருவியப்பை விளைக்குமாயினும் அவர்களுக்கு அது இயல்பே யாகும். 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்பது பொய்யா மொழியன்றோ! இத்தகைய பெரும்புகழ்ச் செல்வர்களுள் நம் தமிழ்நாட்டு வள்ளல் **ராஜா சர். அண்ணமலைச் செட்டியார் அவர்களும்** ஒருவராவர்.



தனவணிகப் பெருமக்கள்.

நம் நாட்டில் கோயில், குளம், பாடசாலை முதலிய அறநிலையங்களை நினைக்கும்பொழுது நம் உள்ளத்தில் காட்சியளிப்பவர் தனவணிக மரபினராவர். 'செல்வத்தின் பயனே ஈதல்' என்பதனைக் கல்லாமலே கண்டுணர்ந்து வரையாது வாரி வழங்கும் மரபினர் எனப் புகழ் பெற்றவர்; இம்மரபினர் வழிவழியாகத் தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்ப்பவர். நாடு எங்குமுள்ள பழங்கோயில்களைப் புதுக்குதல், புதுக் கோயில்கள் அமைத்தல், பசுமடம் வைத்தல், பாடசாலை கட்டுதல் முதலிய அறச் செயல்களைப் பரம்பரைத் தருமச் செயல்களாகக் கருதிக் கண்ணும் கருத்துமாகச் செய்வர். வாணிகமே இவர்கள் குலத்தொழில். அதனிற் செம்மை பெற இளம் பருவ முதலே பயிற்சி பெறுவர். இவர்கள் முன்னாளில் பல பண்டங்களையும் கொண்டு சென்று வாணிகம் செய்து திரைகடலோடியும், தரை வழிச் சென்றும் பொருளீட்டினாராயினும் பின்னாளில் பெரும்பாலும் வட்டித் தொழிலே இவர்களிடம் பெருகியது. பர்மா, சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களில் பலகோடி ரூபாய்கள் கொடுக்கல் வாங்கல் செய்து செல்வம் திரட்டுவாராயினர்.

இன்று தன வணிகர் செல்வத் துறையில் மட்டுமின்றி, நாட்டுப் பற்று, அரசியல், மொழிப்புலமை, சீர்திருத்தம், கலை வளர்ச்சி முதலிய பல துறைகளிலும் முன்னேற்றம் பெற்று விளங்குகின்றனர். சிறந்த நூலாசிரியர்கள், பேராசிரியர்கள், பண்டித மணிகள், இசைப் புலவர்கள், அறிவியலறிஞர், அரசியலறிஞர், இதழாசிரியர்கள் முதலிய பலர் இம்மரபில் தோன்றியுள்ளனர்.

குடும்பச்சிறப்பும், குலமணிவிளக்கும்.

இத்தகைய மரபில் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யா மொழிக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது, கானாடுகாத்தான் **வெ. சா. குடும்பம்** எனப் புகழ் பெற்ற **வெள்ளையன் செட்டியார்** குல மணியாக விளங்கிய **சாத்தப்ப செட்டியார்** குடும்பம். அவருக்கு நால்வர் ஆண் மக்கள் பிறந்தனர். அவருள் **இராமநாதன் செட்டியாரவர்களது** தவப் புதல்வராகத் தோன்றினார் **முத்தையா செட்டியார்**. இவர் அன்பும் அருளும் நிறைந்த பண்பினர்; கடவுட் பற்று மிக்கவர். இவர் சிதம்பரத்திலும், கரூரிலும் கோயில் திருப்பணிகள் பல புரிந்தவர். செல்வமும் செழித்தது. இவர் மீனாட்சி அம்மையார் என்ற மாதரசியை மணந்தார்.

முத்தையா செட்டியாருக்கு மூன்று பெண் மக்களும் நால்வர் ஆண் மக்களும் பிறந்தனர். ஆண் மக்களில் கடைசியாகப் பிறந்தவரே நம் புகழ்ச் செல்வர் **ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்**. இவர் 1881-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் நாளன்று பிறந்தார்.

கானாடுகாத்தான்.

கானாடுகாத்தான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருநகராகும். இது பழம் பதியேயாயினும் மாட மாளிகைகளாலும், கூட கோபுரங்களாலும், சூழ்ந்துள்ள சோலைகளின் பொலிவாலும் புதுமையழகுடன் விளங்குவது; இக்காலத்திற்கேற்ற மின்சார வசதிகள், பிரயாண சாதனங்கள் எல்லாம் நிறைந்துள்ளன. இக் கானாடுகாத்தான், செட்டிநாட்டுக்கே திலகம்போல் விளங்குவதால் **செட்டிநாடு** என்றும் அழைக்கப்பெறுகின்றது.

சகோதரர்.

சகோதரர் நால்வருள் மூன்றுவதாகப் பிறந்த அருணுசலம் இளம் பருவத்திலேயே காலமாகிவிட்டார். மூத்தவராகிய சிதம்பரம் செட்டியார் மிகுந்த செல்வாக்குடன் கானுடுகாத்தானிலேயே வாழ்ந்தார். இரண்டாவது சகோதரர் இராமசாமி செட்டியார் அறிவும் ஆற்றலுமுடைய பெரியார். இவர் சிதம்பரம் கூத்தப் பெருமானிடம் பேரன்பு பூண்டு அங்கேயே தொண்டு செய்து வாழ்ந்தார்; சிதம்பரம் நகராண்மைக் கழகத் தலைவராக இருந்து பணி புரிந்தார்; அங்குத் தன் பெயரால் ஒரு உயர்நிலைப்பள்ளியை நிறுவினுர்; திவான் பகதூர் பட்டம் பெற்று வாழ்ந்தார். இச்சமூகத்தில் முதன்முதலாகச் சட்டசபையில் அங்கம் வகித்த பெருமை இவரையே சாரும். இவர் தொடங்கிய பணிகளைப் பிற்காலத்தில் நம் புகழ்ச் செல்வரே மேற்கொண்டு நடத்திஞர். ராஜா சர் அவர்கள் தம் முன்னோர்போல அருட்கோயில் திருப்பணிகளுடன் கலைக்கோயில் அமைத்துத் தம் குலம் மட்டுமின்றித் தமிழர் குலமும் விளங்கச் செய்தார்.

கல்வித் தேர்ச்சி.

ராஜா சர் அவர்கள் கருவிலே திருவுடையார். திருமகளும் கலைமகளும் போட்டியிட்டு அவர்க்கு அருள் பொழிந்தனர். பள்ளியிற் பெற்ற பயிற்சி அவர்க்கு அதிகம் இல்லை என்றே சொல்லவேண்டும். ஒரு சில மாதங்கள் கரூரில் உள்ள பள்ளியிற் கல்வி பயின்ருர். தன் முயற்சியாலேயே அவர் தமிழ்ப் பயிற்சி பெற்ருர். ஓழிந்த நேரங்களில் ஆங்கிலம் கற்றவர்களிடம் ஆங்கில மொழி பயின்ருர். இயற்கையிலமைந்த மதி நுட்பத்

தாலும் உலகியற்பயிற்சியாலுமே இவரது கல்வியறிவு நிரம்பியது. பல பெருங் கல்விச் செல்வர்களோடும், பேரறிஞர்களோடும், ஆங்கிலேயர்களோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்பினை அளித்த பேறு எல்லாவகையாலும் தகுதியுடையவராகச் செய்துகொண்டே வந்தது. வழி வழியாகச் செய்து வந்த வாணிகக் கல்விக்குத் தந்தையே ஆசிரியராக அமைந்தார். இளமையில் இருந்தே, தந்தைக்கு உதவியாயிருந்து கணக்கில் சிறந்த தேர்ச்சி பெற்றார் நம் புகழ்ச் செல்வர்.

சீதை ஆச்சியார்.

முத்தையா செட்டியார் தக்க வயதுற்றதும் தம் மக்களுக்குத் திருமணம் முடித்துவைத்தார். முன்னவர் இருவர்க்கும் மணம் முடிந்தபின், அண்ணாமலைக்கும் பள்ளத்தூர்த் தன வணிகப் பெருஞ் செல்வரான பழனியப்பச் செட்டியாரவர்களின் அருமைப் புதல்வி **சீதை** என்னும் பெண்மணியைத் திருமணம் செய்து வைத்தார். சிறந்த வாழ்க்கைத் துணையே நிறைந்த செல்வம். சீதை ஆச்சி, வாழ்க்கைத் துணையின் இலக்கணங்கட்கு இலக்கியமாகத் திகழ்பவர். கணவனை விட்டு நீங்கா நிழல்போல் இருந்து, அவருக்குப் பணி செய்வதே அறம் எனக் கொண்டவர். அத்தகைய மனைமாட்சி மிக்க ராஜா சர் அவர்களின் இல்வாழ்வு இன்பந்தரும் நல்வாழ்வாகத் தளிர்த்ததில் வியப்பு உண்டோ ?

பங்குப் பிரிவினை.

ராஜா சர் அவர்களுக்குப் பத்தொன்பதாவது வயதில் தந்தையார் காலமானார். அதன் பிறகு சகோதரர் மூவரும் ஒருமனப்பட்டவராய்த் தமக்குள்

சொத்துப் பிரிவினை செய்து கொண்டனர். முதல்வரா கிய இராமசாமி செட்டியார் முன்னே கூறியபடி தில்லையை இருப்பிடமாக்கிக்கொண்டு அருட்பணி களையும் பொதுநலப் பணிகளையும் ஆற்றிவரலானார். சிதம்பரம் செட்டியார் கானாடுகாத்தானிலேயே தங்கிக் காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராக இருந்து தமக்கியன்றவகையில் பணி புரிந்தார். அண்ணா மலையார் தந்தை விட்டுச்சென்ற வாணிகத்தில் கருத் தைச் செலுத்தினார்.

வள்ளல் குறிக்கோள்.

ராஜா சர் அவர்களின் வாழ்வின் குறிக்கோள் ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பன. இக்குறிக்கோளே அவர் அரசர் பட்டத்துக்கு மிகவும் உரியவர் என்பதைக் காட்டவில்லையா? 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லதரசு' என்பது வள்ளுவர் வாய் மொழியல்லவா? ராஜா சர் அவர்கள் அல்லும் பகலும் அயராதுழைத்தார். முயற்சி திருவினையாக்கு மல்லவா? 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையா னுழை' என்பது பொய்யாகுமா? வினையாண்மையின் மிக்குயர்ந்த அண்ணாமலையை நோக்கி வருவாய்க் கொண்டல் விரைந்து கவிந்து பொன் மழை பொழியத் தொடங்கியது. ஆனால் தன்மேற் பெய்த மழையை மலை தனக்குள்ளே நிறுத்திக் கொள்ளாதல்லவா? அதுபோன்றே அண்ணா மலையும் பொன் மழையைப் பல கால்களின் மூலம் நாட்டிற்களித்து நற்பயன் விளையச் செய்தார்.

வளநிதி படைத்த வினைத் திட்பம்.

செல்வம் தேடுவது எளிதன்று. தேடிய செல் வத்தைக் காப்பதும் அவ்விதமே. ராஜா சர் அவர்கள்

தொழில் தொடங்கும்பொழுது அளவற்ற செல்வம் படைத்திருக்கவில்லை. இடையறுவுழைப்பும் கருத் தூன்றியவினைத்திறமும், எடுத்த கருமத்தை எத்தகைய இடையூற்றையும் கண்டு கலங்காது முடிக்கும் நெஞ்சத் திட்பமும், பரந்த உலகியலறிவும் அவர்பால் இயல்பினமைந்து கிடந்தன. அவ்வியல்புகளே அவரைக் குபேரச் செல்வமுடையராகச் செய்தன. தந்தையமைத்த இலேவாதேவிக் கடைகள் தென்னிந்தியா, இலங்கை, பர்மா, மலேயா முதலிய பல் வேறிடங்களில் சிறியனவும் பெரியனவுமாய்ச் சிதறிக் கிடந்தன. அவற்றை ராஜா சர் ஒன்றுபடுத்தினர். முற்கூறிய இடங்களிலும் கிழக்கிந்தியத் தீவுகள் சயாம் முதலிய நாடுகளிலும் மேலும் பல கிளைகள் விரிந்தன.

வினையாட்சியில் அண்ணாமலை கண்ணோட்டம் செய்யார்; ஒரு காசும் கணக்கில் விடார்; ஒரு கணமும் வீணுவதை விரும்பார்; தாமும் உழைத்துப் பிறரையும் அவ்வாறே உழைக்கச் செய்வார்; ஒன்றை நிறைவேற்றிய பிறகே மற்றொன்றைத் தொடங்குவார். காளுடுகாத்தானில் இருந்துகொண்டு தொழில்கள் தாமாக நடைபெறும் என்று அவர் இருப்பதில்லை. கடைகள் ஒன்றற்கொன்று எவ்வளவு சேணகத்திருப்பினும் தாமே நேரிற்சென்று பார்வையிடுவார்; பயணம் செய்வதில் சலிப்படைவதில்லை; ஓயாமல் சுற்றுவார். எதனையும் குறிப்பேட்டில் பதிந்துகொள்வது அவர் வழக்கம். உறங்கும் பொழுது குறிப்பேடும் எழுதுகோலும் அருகில் இருக்கும். மறுநாள் பார்க்க வேண்டியவர் பெயர்களும், செய்ய வேண்டிய செயல்களும் குறிக்கப்பட்டிருக்கும். அதன்படி காலம் தவருமல்

செய்துமுடிப்பார். நாடோறும் நான்கு மணிக்கே துயிலுணர்ந்து கடன்களை முடித்துத் திருநீறு பூசிக் கூத்தப்பெருமானைத் துதித்து வினை தொடங்குவார்.

நண்பர்களை வரவேற்றுப் போற்றி மகிழ்வதில் அவர்க்குப் பெரு விருப்புண்டு. தம்மைப் பார்க்க வரும் நண்பர்களிடம் குறித்த நேரத்தில் குறித்த செய்தியைப் பேசி முடித்துக்கொள்வார். அவர் பேசுவதும் எழுது வதும் சுருக்கமாகவே இருக்கும். பயனில சொல்லார்; பிறர் சொல்லவும் விரும்பார். பேசும் பொழுதே கடிகாரத்தைப் பார்ப்பார். வருபவர் குறிப்பறிந்து தாமாகவே விடை பெற்றுக்கொள்ளும்படி செய்வார்.

ராஜா சர் அவர்கள், நூறு இடங்களுக்கு மேல் கிளைகளை நிறுவித் தொழில் நடத்தினர்; தொழிலைக் காலத்திற்கேற்ப மேனுட்டு முறையில் இயங்கச் செய் தார். **செட்டிநாடு பாங்கி, செட்டிநாடு கார்ப்பொரேஷன், பர்மா கமர்ஷியல் கார்ப்பொரேஷன், தென்னிந்தியா கார்ப் பொரேஷன்** என்று, கூட்டுறவு முறையில் திறம்பட நடத்தினர்.

ராஜா சர் அவர்களுக்குப் பர்மாவில் ஒரு லக்ஷம் ஏக்கர் நன்செய்நிலமும் பல ஆலைகளும் சொந்தமாயின. இலங்கையிலும், மலேயாவிலும் அகன்ற தென்னந் தோப்புகள் உண்டு. பல தேயிலைத் தோட்டங்களையும் அவர் விலைக்கு வாங்கினர்; தென்னிந்தியாவில் பல கிராமங்களை விலைக்கு வாங்கினர். சித்தூர் மாவட்டத் தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களைக்கொண்ட செட்டிநாடு எஸ்டேட் அவருக்குண்டு.

இப் பெருநிதிக் கிழவர் பெற்ற வெற்றி நம்மை வியப்புறச் செய்கிறதல்லவா? ஆனால், அதற்குத் தடை யாகத் தோன்றிய போட்டிகள், பங்காளிப் பூசல்கள்,

வழக்குகள் முதலிய இடையூறுகள் பல குறுக்கிட்டும் எதற்கும் மலேயாமல் முன்னேறிச்சென்ற அண்ணமலே யின் நெஞ்சுறுதியின் அளவை உணர்வோமாயின், வெற்றியை வியப்பதா, வெற்றி பெற்றவர் வெற்றியை வியப்பதா என்ருய்ந்து ராஜா சர் அவர்கள் வினேத் திறத்தின்முன் அவர் பெற்ற வெற்றி சிறிதாகத் தோன்றுவதை உணர்வோம்.

தமிழர் மறவாத வள்ளல்.

ராஜா சர் அவர்கள் அயராதுழைத்துப் பொருளேக் குவித்தார். குவித்ததை வைத்துப் பூட்டிப் பாதுகாக்க வில்லே. தம்மைப் போலவே நம் நாட்டவரும் வாழ்வுற அறம் பொருள் இன்பங்களிற் பகுத்து வாரி வாரி வழங்கினர். அவர் செய்த அறச் செயல்களில் இரு பெருஞ் செயல்களே அவரைத் தமிழுலகம் என்றும் மறவாது போற்றுதற் குரியவை. ஒன்று பல்கலேக் கழகம்; மற்ருென்று தமிழிசை இயக்கம். அவர் தம் குறிக்கோளில் சாதி, மதம், கட்சி வேறுபாடற்றவர். அவரை மகாத்மா காந்தி முதலான பெருந்தலேவர்களும், சர். சி. வி. இராமன் போன்ற அறிவியலறிஞர்களும், சர். ராதாகிருஷ்ணன், ஐயகர், ஸ்ரீநிவாச சாஸ்திரியார் போன்ற பேரறிஞர்களும், மன்னர்களும், ஆங்கிலேயர் களும் ஒருங்கே பாராட்டியிருக்கின்றனர்.

பெண்டிர்க்குச் செய்த பெரும் பணி.

அகமும் புறமும் ஒன்றுபட்டு வாழ்வதே இன்ப வாழ்வு. அகமாவது இன்பம், புறம் பொருளேயும் அறத்தையும் குறிப்பது. புறம் நன்கு செழிக்கவேண்டு மாயின் அகம் பழுதற்று நிறைந்திருக்க வேண்டும். உள்ளமே அகவாழ்வை உணர்வது. உள்ளம் வாடு

மாயின் உடல் செழிக்குமா? இயங்குமா? அறிவொளி வீசுமா? பொருள் வளம் பொழியுமா? அறந்தான் தழைக்குமா? ஏதும் நிகழாது. அத்தகைய அக வாழ்வினை அளிப்பவர் பெண்கள். அப்பெண்மையே ஆண்மையைப் பேணி வளர்க்கின்றது. எந்த நாட்டில் பெண்கள் முகத்தில் புன்னகை தவழ்கின்றதோ அந்த நாடு செல்வத்தாலும் பிற எல்லா வகையாலும் முன்னேற்றமடைந்திருக்கும் என்பது திண்ணம். பிறநாடுகளில் பெண்களுக்கிருக்கும் சுதந்திரம் நம் நாட்டில் அவர்களுக்கு இல்லை. அவர்கள் தலை நிமிர்ந்து கை வீசி நடக்கவும்கூட ஆண் இனத்தின் உள்ளம் விரும்புவதில்லை. அவர்களுக்கின்றியமையாத வசதிகள் கூடக் கருக்கொள்ளும் நிலையில் இல்லை.

மக்களே நாட்டின் செல்வம். அச் செல்வத்தை ஈன்றளிக்கும் தாய்மார்க்கு வேண்டும் மருத்துவ வசதிகள் நம் நாட்டில் பெருகியுள்ளனவா? பெண் கல்வியோ போதிய வளர்ச்சி பெற்றதாகச் சொல்வதற்கில்லை. எல்லாவற்றிற்கும் பழமை பேசிப் புதுமையின் நன்மைகளைப் புறக்கணிக்கும் பழக்கம் இன்றும் மிகுதியாகவே நம்மிடையுள்ளது. நம் வள்ளல் பெண்ணினம் மேன்மைபெறும் வழிகளை எண்ணினார். அவர் எண்ணத்திற்குத் துணை நின்றார் சீதை ஆச்சியார். மூன்று வழிகளைத் தேர்ந்தெடுத்தார் வள்ளல். பெண்கள் உயர்ந்த கல்வி பெறுதற்குரிய நிலையம், அவர்கள் உடற் பயிற்சி பெறவும் காலத்துக்கேற்ற கருத்துக்களைக் கொண்டு பழகவும் ஒரு கழகம், மகப்பேற்றிற்குப் பெருந்துணை புரியும் மருத்துவ இல்லம் இம்மூன்றையும் அமைத்துதவினார் வள்ளல்; இவையேயன்றிப் பெண்கள்

முன்னேற்றம் கருதும் பல சங்கங்களுக்கும் வரையாது வழங்கினர்.

அருட்பணி.

அருட்கோயில் கலைக்கோயில் இரண்டிற்கும் அவர் செல்வம் பயன்பட்டுள்ளது. கோயில் வழிபாடு மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்குரிய மனப் பண்பையும் ஒழுக்கத்தையும் நிலைப்பெறச் செய்யும் சாதனமாகும். ஆகவே கோயில் திருப்பணி சமூகத் திற்குச் செய்யும் அறப்பணி என்பதே ஆன்றமைந்த சான்றோர் துணிபு. அம்முறையில் அறம் வளர்த்தலில் நாட்டுக் கோட்டை நகரத்தார் பொதுவாகப் புகழ் பெற்றவர் என்பதை முன்னர்க் கூறியுள்ளோம். நம் வள்ளல், வழிவழிவந்த அவ்வறச் செயலையும் வழுவறச் செய்தார். தமக்கியல்பான வேற்றுமையற்ற மனத் துடன் தாம் ஆழ்ந்த பற்றுக்கொண்டுள்ள சிவன் கோயில் திருப்பணிகள் மட்டுமன்றி வைணவத் திருப் பணிகளையும் செய்துள்ளார். கிரிஸ்தவ சமயத்திற்கும் அவர் உதவி புரிந்துள்ளார்.

நீண்ட காலமாகச் சைவ வைணவப் போராட்டத் தில் மூழ்கிக் கிடந்தது சிதம்பரம். எத்தனையோ வழக்குகள் சொற்போர் மற்போர் மூண்டன. எதனு லும் எவராலும் அமைதிபெறவில்லை. பெருமாள் திரு முன் சுவரெழுப்பி மறைக்கப்பட்டது. இந்நிலையில் வந்தார் நம் வள்ளல். சிதைந்து கிடந்த கோவிந்தராசப் பெருமாள் கோயிலைப் புதுக்கினர். பெரும் பொருட் செலவில் விமானம் எழுப்பினர். இவ்வாறு திருப் பணியை எவரும் வியக்க முடித்தது கண்டு வைணவ

அன்பர்கள் வாயார வாழ்த்தினர். சிவநெறிச் செல்வர்கள் வாழ்த்தாதிருக்க முடியுமா? ஆகவே, அதுவரை ஒன்றுபடாதிருந்த அவ்விரு சமயத்தாரும் தங்கள் மனக் கசப்பை மறந்து ஒன்று பட்டனர். அமைதி நிலவியது. நடராசப் பெருமானையும் கோவிந்தராசப் பெருமானையும் அன்பர்கள் ஒரே இடத்தில் நின்று வணங்கி மகிழ்ந்தனர்.

ராஜா அவர்கள் வழிவழி வணங்கும் இளையாத்தங்குடிக் கோயிலைச் செப்பம் செய்து கும்பாபிஷேகமும் நடத்தினர். அவ்வாறே கரூர், திருவேட்களம், கொழும்பு முதலிய இடங்களிலும் கோயிற்பணி புரிந்தார்.

கலைப்பணி.

பழமை பேசிப் புதுமையைப் புறக்கணிப்பது எவ்வளவு தவருனதோ அவ்வளவு தவருனதே, புதுமை புதுமையென்றலைந்து பழமையை மறப்பதும். பழைய நாளந்தா, தக்ஷசீலம் பல்கலைக் கழகங்கள் பழந்தமிழர் முச்சங்கம் இவைகளை நாம் மறந்துவிட முடியுமா? அக் குருகுலங்களால் விளைந்த பெருஞானச் செல்வமும், மனப்பண்பும், உடலுரமும் இக்காலக் குருகுலங்களாக விளங்கும் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களால் விளையும் அறிவியற் கலையும் அரசியலறிவும் ஒருங்கு செழிக்க நினைப்பதே காலத்திற்கேற்ற முறை. அதுவே நாட்டிற்குகந்தது எனக் கருதினர் வள்ளல்.

அவ்வமயம் தமிழர் கலைப் பண்பும் மொழிப் பண்பும் சிறப்புறத் தனியாக ஒரு பல் கலைக்கழகம் வேண்டுமென்ற கருத்து தமிழ்ப்பெரு மக்களிடைத் தோன்றி வளர்ந்தது. திருச்சி மதுரை இவ்விரு நகரங்களுள் ஒன்றே பல்கலைக் கழகத்திற்கேற்ற இடம் எனப்

பலர் கருதினர். அவ்வமயம் வறுமையால் வாடிய மதுரைக் கல்லூரியைச் செழிப்புற்றோங்கச் செய்யக் கருதினார் வள்ளல். பிறகு என்ன காரணத்தாலோ அவர் கருத்து ஆண்டு நிலைபெறாது சிதம்பரத்தை நோக்கித் திரும்பியது.

சிதம்பரத்தில் தம் தமையனார் அமைத்திருந்த உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்திலேயே தமது அன்னையாரின் பெயரால் மீனாட்சி கல்லூரியைத் தோற்றுவித்தார். அக்கல்லூரி வளர்பிறையென்ன வளர்ந்தது. மாணவர் தொகை பெருகிற்று. இடம் போதவில்லை. ராஜா சர் எண்ணமோ மேலும் மேலும் விரிந்து சென்றது. திருவேட்களம் வள்ளலுக்குச் சொந்தமான ஒரு சிற்றூர்; அப்பரும் சம்பந்தரும் பாடிய பழம்பதி. அங்கு ஒரு சிவன் கோயிலுண்டு. ராஜா சர் அவர்கள் ஒரு நாள் அக் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிவிட்டுக் கல்லூரியமைக்கும் நோக்குடன் கோயிலுக்கெதிரில் விரிந்துகிடந்த வெளியிடத்தைப் பார்த்தார். அவ்வமயம் அவ்விடத்தைச் சுற்றி இரண்டு கருடன்கள் வட்டமிட்டுக் குரல்கொடுத்துச் சென்றன.

அக்கணமே வள்ளல் உள்ளம் உறுதிகொண்டது. கல்லும், முள்ளும், புற்றும், புதரும், பெரும் பள்ளமும் மண்டிக்கிடந்த வெம்பாலை நிலம் வள்ளல் கைவைத்ததும் பைஞ்சோலையாக மாறியது. "சிட்டர் சேர் திருவேட்களம்" என்று அன்று அப்பர் பாடினார். அதனை இன்று கல்விச் செல்வர் வாழுமிடமாகச் செய்து மெய்யாக்கினார் நம் வள்ளல்.

1923-ல் முதற்கட்டிடம் நிறைவுற்றது. கட்டிடம் மலையெனப் பெருமிதத்துடன் நிமிர்ந்து நின்றது. இப்பொழுது இக்கட்டிடம் கலைமாளிகையாகக் காட்சி அளிக்கின்றது. கண்கவரும் கலைமகளுருவம் இதனைக் கவினுறச் செய்கின்றது. நல்ல நேரத்தில் மாணவர் இக்கலைமாளிகையுட் கால்வைத்தனர். அன்று முதல் அது மேன்மேலும் வளர்ச்சிபெறலாயிற்று. விஞ்ஞான மாளிகைகள் எழுந்தன. அதன்பின் மாணவர் ஆசிரியர் உறையுள், உணவு விடுதிகள் கட்டப்பட்டன. பி. ஏ. வகுப்பில் ஆங்கிலமேயன்றிக் கணிதம், பௌதிகம், இரசாயனம், தத்துவம், சரித்திரம், பொருளாதாரம் என்ற பாடங்கள் பலவும் கற்பிக்க ஏற்பாடாயிற்று.

1927-ல் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த **மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ. வே. சுவாமிநாதையரவர்கள்** தலைமையில் தமிழ்க் கல்லூரியும் **மகாமகோபாத்யாய தண்டபாணி தீக்ஷிதரவர்கள்** தலைமையில் வடமொழிக் கல்லூரியும் அமைத்தார் வள்ளல். பின்னர் பண்டித பயிற்சிக் கல்லூரியும் இசைக்கல்லூரியும் எழுந்தன.

பல்கலைக் கழகம்.

இந்தியாவில் அச்சமயம் பதினேழு பல்கலைக் கழகங்கள் இருந்தன. 1926-ல் ஆந்திரருக்கென ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டது. கன்னடருக்கு மைசூர் சர்வகலாசாலையுள்ளது. தமிழருக்கொரு தனிக் கழகம் இன்றும் தோன்றியபாடில்லையே எனக் கவன்றனர் தமிழ்ப் பெருமக்கள். உலகின் தொன்மொழியும் இன்றுவரை தன் எழில் நலம் குன்றா இனிமைத்

தென்மொழியுமான தமிழ்மொழிக்கொரு தனிப்பெருங் கழகம் வேண்டும் என்ற எண்ணம் எங்கும் எழுந்தது. அதனையறிந்த வள்ளல், ஏற்கனவே அமைத்த கட்டிடங்களுடன் மேலும் இருபது லக்ஷம் ரூபாய்கள் ஈந்து பல்கலைக்கழகம் அமைக்கத் தொடங்கினர். பத்திரிகைகளில் இச்செய்தி வெளிவந்ததும் தமிழகமே தலை நிமிர்ந்தது. அரசாங்கம் வள்ளலின் பெருங்கொடையை மகிழ்வுடன் ஏற்றுத் தானும் இருபத்தேழு லக்ஷம் அளித்ததுடன், ஆண்டுதோறும் ஒன்றரை லக்ஷம் கொடுக்கவும் முன்வந்தது. வள்ளலின் ஒப்பற்ற அறச் செயல் கருதித் திருவேட்களம் **அண்ணமலைநகர்** எனப் பெயர் சூட்டப்பட்டது. அங்கே அவர்கண்ட பெருங் கழகம் **அண்ணமலைப் பல்கலைக்கழகம்** என வழங்கப் பட்டது. இதுவரை அக் கலைக்கோயிலுக்கு அவர் அளித்த தொகை சுமார் அரைக்கோடி ரூபாயாகும். இவரைத் தமிழ் நாட்டு ராக்பெல்லர், தமிழன்னையீன்ற அஷுடோஷ் முகர்ஜி என்றெல்லாம் தமிழுலகம் புகழ்வது மிகையாகுமா? இந்தியாவிலேயே செல்வ நிலையில் கல்கத்தா சர்வகலாசாலைக்கு அடுத்தபடியாக செழிப்புற்று விளங்குவது இப் பல்கலைக்கழகம். இப்பொழுது அண்ணமலை நகர் 570 ஏக்கர் நிலப் பகுதியில் மாடமாளிகைகள் நிறைந்த வளநகராகக் காட்சியளிக்கின்றது. இதனை வாழ்த்திய **பாஷா கவிசேகரர் சேது சமஸ்தான மகா வித்வான் இராகவையங்காரவர்கள்.**

இசைமுழங்குவ தொருபுரம் தமிழியல் முழங்குவதொருபுரம்
இனிதியைந்து நல் வடமொழிக் கடல் இவண்முழங்குவ
[தொருபுரம்
வசையறும் மலையாளமும் வடுகும் முழங்குவதொருபுரம்
வளர் குடக்குள ஆங்கிலக் கவிவளமுழங்குவதொருபுறம்

நசையறும் பொருணூல் மதம் கணிதம் சரித்திர ஞான விஞ்
ஞான மோடதி நூல் விலங்கியல் நலமுழங்குமொவ்
[வோர்புறம்
மிசைவரும் இளையோர் புகும் விளையாடலோர்புறம் உழவுசேர்
விளைவுமோர்புறம் இவை அண்ணுமலை வேந்து
[நன்கொடை விளைவரோ.

என்று பாடினர். இப் பெருங் கழகத்தின் தோற்றத்திற்கு ஆதிமுதலே ஆய்வுரை கூறித் துணை புரிந்த **மகாகனம் ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்களே** இதன் முதல் துணைவேந்தராக விளங்கினர்.

தமிழிசை இயக்கம்.

ராஜா சர் அவர்களின் தமிழன்பிற்குத் தமிழிசை இயக்கமே உறைகல். சென்ற அரை நூற்றாண்டாக தமிழிசை புறக்கணிக்கப் பட்டது. இசையரங்குகளிலும் தமிழர் மணவரங்குகளிலும் இசைப் புலவர்கள் தெலுங்கிற்கே முதலிடமளித்துத் தமிழ் பாடல்களை ஒதுக்கித்தள்ளினர். நம் வள்ளல் இத்தாழ் நிலை நீங்க வேண்டுமெனக் கருதினர். தமிழிசை ஓங்கவும் தமிழ் இசைப் பாக்கள் வெளியிடவும், பல பதினுயிரம் ரூபாய்கள் நன்கொடையாக வழங்கினர். தமிழன்னை உள்ளம் குளிர்ந்தாள். 1941-ம் ஆண்டு அண்ணுமலை நகரில் முதல் தமிழிசை மகாநாடு நடந்தது. பேரறிஞர் பலர் ஆதரித்தனர். தமிழிசை முழங்கிற்று.

எத்தகைய வேற்றுமையுணர்ச்சியும் இறையளவும் அணுகாத தெளிந்த வுள்ளமுடைய வள்ளலின் பழு

தற்ற செயலுக்கும் பழுதுகூறத் துணிந்தனர் ஒரு சில தமிழர். ராஜாசர் அவர்கள் வடமொழி வளர்ச்சிக்கு வாரி வழங்கியிருப்பதை யறிந்தும், தியாகப்பிரும்மசமாஜத்தின் தலைவராக இருந்து, அதற்குப் பேருதவி புரிந்துவருவதை யுணர்ந்தும் நாக்கூசாமல் இத் தமிழ் இசைக் கிளர்ச்சி தியாகையர் கீர்த்தனைகளுக்கு எதிர்ப்பாக எழுந்ததே எனக் கூறலாயினர். தமிழ் மொழி இன்னிசைக்கேற்றதன்று என்றும் துணிந்து பேசினர் சிலர். தமிழில் இசைப்பாக்கள் இல்லை என்று அறிந்தவர்போற் பேசினர் மற்றும் சிலர். இதைக் கேட்டதும் எழுந்தார் நம் ஐயரவர்கள். 'தமிழிலா இசைப்பாக்கள் இல்லை? ஆண்டெல்லாம் பாடிக்கொண்டேயிருக்கலாம், இசையில் வல்லுநர் தமிழைப் போற்றுமையாலேயே அவை மறைந்து கிடக்கின்றன' என்று கூறித் தமிழிலுள்ள இசைநூல்கள் பற்றிப் பெரிய அட்டவணை ஒன்றும் வரைந்து விடுத்தார். அவ்வளவில் அம்முறையிற் பேசுவார் வாயடைத்தனர்.

வள்ளல் இவ்வெதிர்ப்பைக் கண்டு சிறிதும் கலங்கவில்லை. பொருள்தேடும் முயற்சியில் ஏற்பட்ட எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கும் நிலைகலங்காது நின்ற நெஞ்சுரம் படைத்த அண்ணலையல்லவா? ஆனால் தமிழரே தமிழிசையை எதிர்க்கின்றார்களே எனச் சிறிது வருந்தினர். ஒரு முறை தியாகப்பிரும்ம சமாஜ வரவேற்புரையில் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்த தம் கருத்தைத் தெளிவாக விளக்கினர். நாளடைவில் எதிர்ப்பு மங்கி மறைந்தது.

நாடெங்கும் தமிழிசை முழங்கிற்று. வீடெங்கும் இன்னிசை ஒலித்தது. தமிழிசை வளர்த்த வள்ளல்

என வாழ்த்தினர் தமிழர். பழைய புதிய தமிழிசைப் பாடல்கள் வெளிவரலாயின. இன்று இசையரங்குகளும் வானொலி நிலையங்களும் தமிழிசை மயமாக இருப்பதற்கு வள்ளலே காரணராவர்.

பட்டமும் பதவிகளும்


1910-ஆண்டிலேயே காரைக்குடி நகராண்மைத் தலைமைப் பதவி இவரைத் தேடி வந்தது. 1913 வரை அப்பதவியிலிருந்து அருந்தொண்டுகள் புரிந்தார். அப்பொழுது அரசாங்கம் இவர் புரிந்த சேவையை மெச்சி **ராவ்பகதூர்** பட்டமளித்தது. 1921-ல் ராஜாங்க சபையின் உறுப்பினரானார் இவர்; அதில் பதினைந்தாண்டுகள் தொடர்ந்து அங்கம் வகித்தார்; 1922-ல் **திவான்பகதூர்** ஆனார்; 1923-ல் **சர்** பட்டம் பெற்றார். அண்ணாமலை பல்கலைக் கழகம் அமைத்த வண்மைக்கும் பத்தாண்டுகள் இம்பீரியில் பாங்கு கவர்னராக இருந்த பெருமைக்கும் ஏற்ப 1949-ம் ஆண்டு **பரம்பரை ராஜா** என்ற பட்டத்தை அரசாங்கம் வழங்கியது. நாடு முழுவதும் மகிழ்ச்சி எல்லைமீறியது. எங்கும் வரவேற்புக்களும் விருந்துகளும் நடந்தன. 1932-லேயே சென்னை பல்கலைக்கழகம் இவருக்கு **எல். எல். டி.** பட்டத்தை வழங்கியது. 1942-ல் அண்ணாமலை பல்கலைக் கழகம் தன்னைத் தோற்றுவித்த வள்ளலுக்கு **டாக்டர்**பட்டத்தை வழங்கித் தன் நன்றியை வெளியிட்டுக்கொண்டது.

புகழ்ச்சேல்வர்

ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களும், ராணி சீதை ஆச்சியாரும் மங்கலமாகிய மனையறம் புரிந்து

நன்கலமாகப் பெற்ற மக்கள் எழுவர். அவருள் ஆண் மக்கள் மூவர். பெண் மக்கள் நால்வர்.

இவ்வாறு எல்லாச் செல்வமும் குறைவறப் பெற்று வாழ்ந்த நம் புகழ்ச் செல்வர், தாம் வந்த காரியம் யாவும் நிறைவுற்றது போன்ற மன அமைதியுடன் மண்ணுலகில் அழியாப் புகழ் நிறுவித் தம் அறுபத்தேழாவது வயதில் விண்ணுலகத்திற்கு விருந்தாயினர்.



ஜாம்ஸெட்ஜி நஸர்வான்ஜி டாடா.

5. வாணிகச் செல்வர்

டாடா

இந்திய வாணிகத் துறையின் கலங்கரை விளக்கமாக விளங்குவது **டாடா** என்னும் பெயர். டாடா, பிர்லா, டால்மியா என்ற வணிகர் மன்னர் பெயர்கள் இன்று உலகமெங்கும் புகழொளி வீசிச் சிறப்புற்றிருப்பினும் இம்மூன்று பெயர்களிலும் டாடாவின் பெயரே முதன்முதல் வழிகோலிய பெருமைக் குரியது. தொழில் துறையில் நம் நாட்டவர், இறங்குவதற்குத் தயங்கிக் கொண்டும், தப்பித் தவறி இறங்கினும் நிலைபெற நிற்கும் வழியின்றித் தள்ளாடிக் கொண்டும் இருந்த நிலையில் இவர் அத்துறையில் வியக்கத் தக்க வெற்றியும் புகழும் பெற்று மற்றவர்க்கு வழிகாட்டியாயும் நின்றார். சுதந்திர பாரதத்தின் சீரமைப்புக்கு இத்தகைய அரிய சாதனை அவசியமாதலின், இவரது வரலாற்றை அறிதல் மாணவர்க்கு மிகவும் இன்றியமையாததாகும்.

நஸர்வான்ஜி டாடா

டாடாவின் முழுப்பெயர் **ஜாம்ஸெட்ஜி நஸர்வான்ஜி டாடா** என்பதாகும். இவர், 1839-ம் ஆண்டு பரோடா சமஸ்தானத்தைச் சேர்ந்த **நவ்சாரி** என்ற ஊரில் நஸர் வான்ஜி டாடா என்பவருக்கு மகனாகப் பிறந்தார். நஸர் வான்ஜி பார்சி வகுப்பில் புரோகிதர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் புரோகிதருக்குரிய அமைதியான வாழ்க்கையை விரும்பாமல் வாணிகம் செய்து பொருள் ஈட்ட விரும்பி பம்பாய் வந்து தங்கினார். அங்கே வாணி கத்தில் ஈடுபட்ட ஒரு செல்வரின் கீழ் வேலைக்கமர்ந்து அத்துறையில் பயிற்சி பெற்றார். பிறகு தாமே தனியாக வாணிகம் செய்யத் தொடங்கி ஜப்பான் முதலிய அயல்

நாடுகளுக்கும் சென்று பொருள் தேடிப் பம்பாயில் ஏழடுக்கு மாளிகை ஒன்றை விலைக்கு வாங்கினார். சிறு பொறியில் தோன்றிய பெரு விளக்கம்போல் இவர்க்குப் புதல்வராகத் தோன்றினார் ஜாம்ஸெட்ஜி.

கல்விப் பயிற்சி

ஜாம்ஸெட்ஜி சிறிது காலம் நவ்சாரியில் கல்வி கற்றுப் பதின்மூன்றாம் வயதில் பம்பாய்க்கு வந்து எல்பின்ஸ்டன் கலாசாலையில் சேர்ந்தார். அங்குத்தான் அவரது மதிநுட்பம் வினைத்திறம் முதலியவை வெளிப் படலாயின. இவர் 1858-ல் பட்டம் பெற்று, கலா சாலையை விட்டு நீங்கி ஏதேனும் உத்தியோகம் பார்க் கலாம் என எண்ணினார். ஆனால் இவருக்குரிய வழி வேறாக இருந்ததால் விரைவில் தந்தைக்குத் துணையாக வாணிகத் துறையில் ஈடுபடலானார். ஜாம்ஸெட்ஜி படித்துக் கொண்டிருக்கும்பொழுதே திருமணம் நிறை வேறியது. இவருக்கு வாய்த்த மனையார் பெயர் ஹீராபாய் என்பது. இவர்கட்கு ஓர் ஆண்மகவு பிறந்தது.

வாணிகப் பயிற்சி

இயல்பாகவே நுண்ணறிவுடைய ஜாம்ஸெட்ஜி கலாசாலைப் படிப்பும் பெற்றதால் மிக விரைவில் வாணிக நுட்பங்களையும் பணமாற்று விகிதங்களையும் செம்மையாக உணர்ந்துகொண்டார். 1859-ல் நஸர் வான்ஜி வேறு இருவருடன் கூட்டாக ஹாங்காங் நகரில் வாணிகத்தின் கிளையொன்றை அமைத்தார். அக் கிளைக்கு ஜாம்ஸெட்ஜி மேற்பார்வையாளராக அனுப்பப் பட்டார். அவர் அங்குச் சென்ற சிறிது காலத்திற் கெல்லாம் ஷாங்கை நகரில் மற்றொரு கிளை அமைக்கப் பட்டது. அங்கே அவர்களுடைய முக்கியமான

வாணிகம் பருத்தி, அபின் ஆகியவற்றை விற்பதும் அங்கிருந்து தேயிலை, பட்டு, கற்பூரம் முதலியவற்றை இந்தியாவுக்கு வாங்கி அனுப்புவதும் ஆகும். இவ் வாணிகத்தில் அவர்கட்கு மிகுந்த இலாபம் கிடைத்தது.

அலெக்ஸாண்டிரியா மில்

1864-ல் இலண்டனில் தொடங்கிய மற்றொரு கிளைக்கு மேற்பார்வையாளராக ஜாம்ஸெட்ஜி அனுப்பப் பட்டார். அப்பொழுது அவர் பருத்தியாடை நெசவுக்குப் பேர்போன மான்செஸ்டருக்கும், லங்காஷயருக்கும் பன்முறை சென்று பருத்தி வாணிகம், நூற்றல், நெசவு முதலிய துறைகளில் ஓரளவு அனுபவம் பெற்றார். அந்த அனுபவத்தைக்கொண்டு *1869*-ல் நம் நாட்டில் சிஞ்ச்பூக்ளி என்னுமிடத்தில் ஒரு பருத்தி ஆலையை நிறுவினார். **அலெக்ஸாண்ட்ரியா மில்** என்ற பெயர் கொண்ட அப்பருத்தியாலையில் நல்ல இலாபம் கிடைத்தது. எனினும் இரண்டு ஆண்டு கழித்து அதை வேறொருவர்க்கு அதிக விலைக்கு விற்றுவிட்டார்.

எம்பரஸ் மில்

1873-ல் ஜாம்ஸெட்ஜி மீண்டும் இங்கிலாந்து சென்றார். செல்லும் வழியில் கெய்ரோ, அலெக்ஸாண்டிரியா, ஜெருஸலம் முதலிய நகரங்களில் இறங்கிப் பார்த்துக்கொண்டே சென்றார். இங்கிலாந்தில் இயந்திரத் தொழில் பற்றிய நுட்பங்களை அறிந்துகொண்டு *1877*-ல் தாய்நாடு மீண்டார். இவ்விங்கிலாந்துச் செலவால் அவர் அடைந்த நன்மைகள் பல.

1877-ஜனவரி முதல் தேதியன்று அவர் நாகபுரியில் ஒரு ஆலையை நிறுவினார். அதை நடத்தும் நிலை

யத்திற்குப் பத்து லட்சம் ரூபாய் மூலதனம் வைத்தார். விக்டோரியா மகாராணியார் இந்திய சக்கரவர்த்தினியாகப் பிரகடனம் செய்துகொண்ட தன் நினைவுக்குறியாக அவ்வாலைக்கு **எம்பரஸ் மில்** என்று பெயரிடப்பட்டது. அவர் அவ்வாலைக்கு முதலில் வாங்கிய பொறிகள் சரியாக இல்லாததால் சிறந்த பொறிகளை வாங்கிவர மீண்டும் இங்கிலாந்து சென்றார். புதிய பொறிகள் அமைந்த பிறகே இலாபம் கிடைக்கலாயிற்று. அதுவரை அதனால் ஏற்பட்ட நஷ்டங்களை அவர் சிறிதும் பொருட்படுத்தவேயில்லை.

அவ்வாலைக்கருகிலேயே தொழிலாளருக்கு வீடுகளும், பிற வசதிகளும் செய்து கொடுத்தார். தொழிலாளர் நலனையே பெரிதாகக் கருதி, அவர்கள் உற்சாகத்துடன் இருப்பதற்கு வேண்டியவற்றையெல்லாம் செய்தமைத்தார். அதன் பயனாக அவரது ஆலை, இந்தியாவில் அப்பொழுதிருந்த பிற ஆலைகளைவிடத் துணி நெசவில் முன்னேற்றமடைந்து விளங்கியது.

ஜாம்ஸெட்ஜி தம் புதல்வர் **டோராப்ஜியைப்** புதுச்சேரிக்கனுப்பி அங்கும் ஒரு பஞ்சாலை நிறுவச் செய்தார். ஆனால் பம்பாயில் அவருடைய வாணிகம் பெருகவே டோராப்ஜியைத் தம்மிடமே அழைத்துக் கொண்டார். எம்பரஸ் மில்லில் 30 ஆண்டுகளில் 80 லக்ஷம் ரூபாய் இலாபம் கிடைத்தது. அதன் பங்குகளின் மதிப்பு மிக மிக உயர்ந்துவிட்டது. ஐந்நூறு ரூபாய் பங்கின் மதிப்பு 7000 ரூபாய்க்கு மேலும் உயர்ந்தது.

சுதேசி மில்ஸ்

இந்திய தேசீயக் காங்கிரஸ் தோன்றி சுதேசி இயக்கத்தைப் பரப்பிவந்த காலத்தில் டாடா அதை

ஆதரித்துச் செயல் முறையில் அன்னிய வாணிகத்துடன் போட்டியிட்டு அதை ஒழிக்க எண்ணினார். எனவே அவர் 1876-ல் **சுதேசி மில்ஸ்** என்ற பெயருடன் மெல்லிய ஆடைகளை நெய்யும் கம்பெனியொன்றைத் தொடங்கினார். பன்னிரண்டு லக்ஷ ரூபாய்க்குப் பழைய பஞ்சாலையொன்றை விலைக்கு வாங்கினார். அதன் பொறிகள் பல பழுதுற்றிருந்தன. டாடா அவற்றைச் செப்பம் செய்தமைத்தார். முதலில் அதனால் நஷ்டம் ஏற்பட்டது. மற்றும் பல இடையூறுகள் முளைத்தன. டாடாவின் மன ஊக்கமும் இடையறா முயற்சியும் அவற்றை எல்லாம் புறங்கண்டன. இலாபமும் புகழும் பெருகின. அவ்வாலையில் நூற்கப்பட்ட மெல்லிய இழைகள் வெளிநாடுகட்குக்கூட அனுப்பப்பட்டன.

டாடா தம் ஆலைக்கு வேண்டிய மெல்லிய இழை தரும் பருத்தியை எகிப்திலிருந்தே பெறவேண்டியிருந்தது. இந்தியாவில் அத்தகைய பருத்தி இல்லை. அது பற்றி அவர் ஆராய்ந்து இந்தியாவிலேயே அதைப் பயிரிட முயன்று வெற்றியும் பெற்றார்.

திரண்ட செல்வம்

ஆமதாபாத்தில் **அட்வான்சு மில்** என்ற மற்றொரு மில்லையும் டாடா விலைக்கு வாங்கினார். ஆனால் அதைச் செம்மைப்படுத்திச் சில ஆண்டுகளில் ஐந்து லக்ஷ ரூபாய் இலாபத்திற்கு விற்றுவிட்டார். முற்கூறிய ஆலைகளால் அவருக்குக் கோடி கோடியாக இலாபம் கிடைத்தது. அவர் செல்வத்திற் குபேரனாக விளங்கினார். அவர் அத் திரண்ட செல்வம் முழுவதையும் தமக்கு மட்டுமே உரிமையாக்கிக் கொள்ளவில்லை. 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்றபடி

அவர் செல்வம் அனைவருக்கும் பயன்பட்டது. தொழிலாளர்களுக்கு வீடுகள், கலாசாலைகள், மருத்துவ நிலையங்கள், விளையாடுமிடங்கள் முதலிய பல வசதிகளைச் செய்து கொடுத்தார் டாடா.

ராஜ்மகால் விடுதி

டாடா, பம்பாய் நகரையே அழகு படுத்தக் கருதிப் பல அழகிய மாளிகைகளைக் கட்டினார். பிரயாணிகள் தங்குவதற்கென உலகப் புகழ் கொண்ட **ராஜ்மகால்** என்ற பெயர்கொண்ட மகோன்னதமான மாளிகையைக் கட்டினார். அயல் நாடுகளில் அத்தகைய விடுதிகள் பல இருப்பதைக் கண்ட டாடா பம்பாயிலும் அவ்வாறு ஒன்று இருக்கவேண்டுமெனக் கருதி அப்படியே செய்து முடித்தார். அக்கட்டிடத்திற்கு வேண்டிய நவீனமான பொருள்களை இலண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களுக்குச் சென்று வாங்கி வந்தார். 1903-ல் அக்கட்டிடம் கட்டி முடிவுற்றது. அது தான் கொண்ட பெயருக்கேற்பச் சிற்பச் சிறப்புடனும் அழகுடனும் விளங்குகின்றது; கடற்கரையோரமாக அமைக்கப் பட்டிருப்பதால் கடற்காற்று வீசிக் கவலைகளை மறக்கச் செய்கிறது; அயல் நாட்டினரும் வியந்து நோக்கும் வண்ணம் நிமிர்ந்து நிற்கின்றது.

டாடா எத்துறையில் இறங்கினாலும் ஆர அமர ஆராய்ந்த பிறகே தொடங்குவார். அவசரப்பட்டும் தீர ஆராயாமலும் ஒரு செயலையும் செய்யார். அவ்வாறு எண்ணித் தொடங்கிய பின் அதனை நிறைவேற்றாமல் விடுவதில்லை. 'எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்பது பொய்யாமொழியல்லவா? ஆகவே அவர் எடுத்த

காரியம் யாவினும் வெற்றியே பெற்றார். அவர் நாட்டின் நலன் கருதிச் செய்யும் காரியங்களில் இலாபத்தைக் கருதுவதில்லை. டாஜ்மகால் விடுதி இதற்குச் சிறந்த சான்றாகும். அது கட்டி முடிந்து பல ஆண்டுகள் வரை அவருக்கு இலாபம் கிடைக்கவில்லை. ஆயினும் நாட்டிற்குப் பெருமைதரக்கூடிய அதைப்பற்றிச் சிறிதும் வருந்தாமலும் தோல்வி மனப்பான்மை கொள்ளாமலும் தொடர்ந்து நடத்தினார். பிறகு வருவாய் பெருகத் தொடங்கியது.

கப்பல்த் தொழில் :

1893-ல் அவர் கப்பல் தொழிலில் ஈடுபட்டார். இதில் அவர் முடிவான வெற்றி பெறாவிடினும் இம் முயற்சியால் நாட்டிற்கு பல நன்மைகள் உண்டாயின. பல உண்மைகள் வெளியாயின. அரசாங்கத்தார் இங்கிருந்து ஏற்றுமதியாகும் இந்தியப் பொருள்களுக்கு அதிகக் கட்டணம் விதித்து, வெளிநாடுகளில் ஆங்கிலச் சரக்குகளோடு போட்டியிட முடியாமல் செய்த அநீதி வெளியாயிற்று. அதைத் தடுக்கவே அவர் இந்தியக் கப்பல் குழு ஒன்றை நிறுவ எண்ணினார்.

பண்டைக் காலத்தில் இந்தியக் கலங்கள் பல நாடுகட்கும் கடல் கடந்து சென்று வாணிகம் செய்துவந்த பெருமையை மீண்டும் நிலைநாட்ட முயன்றார் டாடா. அந்நாளில் நம்நாட்டுக் கப்பல் வாணிகம் அயல்நாட்டார் கையிலேயே இருந்தது. அவர்கள் நெறியற்ற முறையில் பெரும் பொருளீட்டுவதைக் கண்டார். அக் கொடுமையை ஒழிக்க ஜப்பானுக்குச் சென்று அங்கு இருந்த ஒரு கப்பல் குழுவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி, அக் கப்பல் குழு இந்தியப்

பருத்தியை அயல் நாடுகளுக்கு மலிவாக எடுத்துச்செல்வ தென்றும் தம் கப்பல்களைச் சீனு, ஜப்பான் முதலிய கீழைநாடுகளுக்கே உதவ வேண்டுமென்றும் ஏற்பாடா யிற்று. பிறகு அவர் அமெரிக்கா வழியாக இங்கிலாந்து சென்று அங்கு ஆங்கிலக் கப்பலை வாடகைக்குச் செலுத்தும் உரிமையைப்பெற்ருர். இவ்வாறு டாடாலைன் என்ற குழு ஏற்பட்டது.

கப்பல் குழுவின் மறைவு :

பி. அண்டு ஓ. குழுபோன்ற அயல்நாட்டுக் கப்பற் குழுவினர், தாம் தனியுரிமையாய் நடத்திவந்த இந்தியக் கப்பல் வாணிகம் டாடா குழுவால் கெட்டுவிடும் என்று கருதிச் சீற்றம்கொண்டு டாடா குழுவை ஒழித்துவிட முனைந்து முறையற்ற வழிகளையும் கையாண்டனர். பி. அண்டு ஓ, குழு அளவுக்கு மீறிப் பெற்றுவந்த கட்டணத் தொகையை ஒழுங்கான அளவுக்கும் குறைத்துக் கொண்டது. பிறகு கட்டணம் வாங்காமல் இலவசமாகவே சரக்குகளை ஏற்றிச் செல்லவும் முன் வந்தது. இவ்வாறு பல வழிகளிலும் அது டாடா குழுவை நசுக்க முயன்றது. அது விரும்பியபடியே டாடா குழுவிற்கு இப்போட்டியால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. நம்நாட்டு வணிகர்களிலும் பலர் பி. அண்டு ஓ. குழுவினர் செய்யும் அநீதியை எண்ணமலும் நாட் டுப் பற்றுணர்ச்சியின்றியும் அப்பொழுது கிடைக்கும் இலாபம் ஒன்றையே கருதி டாடா குழுவைப் போற்ற வேண்டிய தங்கள் கடமையை மறந்தனர். தம் கப்பற் குழு இவ்வாறு இழிந்த முறைகளால் ஒடுக்கப்படுவது கண்டு வருந்திய டாடா இந்தியா மந்திரிக்கு விண்ணப் பம் செய்துகொண்டார். அவர் முறையீட்டை ஆங்கில

அரசாங்கம் கவனிக்கவில்லை. ஆகவே ஒரே ஆண்டில் அவர் தம் கப்பலைத் திரும்ப அனுப்பிவிட்டார். டாடா குழு மறைந்தது.

பட்டுத் தொழில் :

அடுத்தபடியாக டாடா பட்டுத்தொழிலை நடத்த எண்ணினர். சீனவிலும் ஜப்பானிலும் பட்டுப்பூச்சி களை வளர்க்கும் முறைகளையும் பட்டு நெய்யும் வழிகளை யும் அவர் நன்கு பார்த்திருந்தார். இந்தியாவிலும் அத்தொழிலைப் புகுத்தித் தொழிலற்றவர்களுக்குத் தொழில் கொடுக்கக் கருதினர். அந்நாளில் பட்டுத் தொழிலில் ஜப்பானே முதன்மைபெற்று விளங்கியது. உலகத்தில் நெய்யப்படும் பட்டில் முக்கால் பங்கு அந் நாட்டிலேயே நெய்யப்பட்டது. அதனல், ஜப்பானில் செல்வம் செழித்தது. பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதற்கு, இந்தியாவில் மைசூரே ஏற்ற இடம் என அறிந்து அங்கு ட்டாடா ஒரு பண்ணையை நிறுவினர். அதற்கு மேற்பார்வையாளராக இரு ஜப்பானியப் பட்டுத் தொழில் நிபுணர்களை அமர்த்தினர். சிறிது காலத்திற் குள் அத்தொழில் சிறப்புறலாயிற்று. அயல் நாட்டின ரும் பாராட்டும்படியான உயர்ந்த பட்டு அப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டது. டாடாவின் முயற்சியைப் பின்பற்றி இந்திய அரசாங்கமும் சில பட்டுப் பண்ணை களை நிறுவியது.

இந்திய விஞ்ஞானக் கழகம் :

பல்வேறு தொழில் துறைகளிலும் தாம் பெற்ற அறிவு, திறமை முதலியவற்றின் சிறப்பை உணர்ந்த டாடா, தம் நாட்டினர் பலரும் அத்தகைய திறமை பெற்று முன்னேற்றம் அடைவதற்கு வழி யாது என

எண்ணினர். அதன் விளைவாக நம்நாட்டு இளைஞர்களைத் தொழில் துறைகளிலும், தொழில் வளத்திற்குரிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுத்த விரும்பினர். இதற்கென ஒரு நிலையம் அமைய வேண்டும் எனக் கருதினர். அறிவும் திறமையும் இருந்தும்; பணவசதியில்லாததனல் தொழில் துறையில் இறங்காமலிருக்கும் ஏழைச் சிறுவர்களுக்கு உபகாரச் சம்பளமளித்துதவ ஒரு திட்டம் இட்டார். இத்தகைய சீரிய நோக்குடன் அவரது இடையரு முயற்சியின் விளைவாகவே பங்களூரில் **இந்திய விஞ்ஞானக் கழகம்** எழுந்தது. இதனைச் சுருக்கமாக டாடா கழகம் என வழங்குவர்.

இந்தியக் கலாசாரக் கல்வி வெறும் ஏட்டளவில் நிற்பது கண்ட பேரறிஞர் பலர், அதை மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்திக் கூறி வந்தனர். அவர்கள் கூறிய குறையைப் போக்கும் பொருட்டே முற்கூறிய கழகம் நிறுவப்பட்டது. 1892-முதலே டாடா பல இளைஞர்களைத் தம் செலவில் இங்கிலாந்திற்கு மேல் படிப்புக்காக அனுப்பி வந்தார். அவர் அவ்விளைஞர்களுக்காகும் செலவுகளை யெல்லாம் முதலிற் கொடுத்து பிறகு சிறிது சிறிதாகத் திரும்பப் பெறுவது என்ற திட்டமமைத்தார். இவ்வுபகாரச் சம்பளக் கடன் திட்டத்தால் பல இளைஞர் நன்மை பெற்றனர். இந்தியாவில் விஞ்ஞானக் கழகம் தொடங்கிய பிறகு இதில் பலர் பயிற்சி பெற்றுத் தகுந்த பதவிகளில் இடம் பெற்றனர். இக்கழகம் தோன்றிய பிறகு நம் இளைஞர்கள் பயிற்சிக்காக அயல் நாடு செல்லவேண்டிய அவசியயம் குறைந்தது. ஆனல் டாடா கண்ட கனவு அவர் காலத்திற்குப் பிறகே அவரது குமாரர் டோராப்ஜியால்

நினைவாக உருவெடுத்தது. 1911ல் இந்திய விஞ்ஞானக் கழகம் அவரது குமாரரால் தொடங்கப்பெற்றது. இப்பொழுது இக் கழகத்தில் பொறியியல், மின்சார ஆராய்ச்சி, இரசாயன ஆராய்ச்சி முதலிய பலவகை ஆராய்ச்சிகளில் ஆண்டு தோறும் பல மாணவர்கள் தேர்ச்சி பெற்று நம் நாட்டிற்குப் பெருமை யளித்து வருகின்றனர்.

இரும்புத் தொழிற்சாலை :

நம் நாட்டில் புதிய தொழில்களைத் தோற்றுவிக்கும் நோக்குடன் டாடா செய்த முயற்சிகளில் தலை சிறந்தது, இரும்பு எஃகுத் தொழிற்சாலையைத் தொடங்கியதாகும். இரும்புத் தொழில் ஒரு அடிப்படைத் தொழிலாகும். இரும்பு பெரிய கைத்தொழில்களுக்கும் சிறிய குடிசைத் தொழில்களுக்கும் இன்றியமையாத பொருள். அத்தகைய அவசியமான தொழிலை இந்தியாவிலேயே நடத்துவது மிகவும் நன்மை பயக்கும் என்று டாடா கருதினர். அதற்காக அவர் பலரோடு சூழ்ந்தார். இரும்புத் தொழில் நடைபெறும் பல நகரங்களுக்கும் சென்று, நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்தார். அது பற்றி விவாதித்துப் பல நுட்பங்களை அறிந்துகொண்டார். முடிவில் தம் கருத்தையும், தாம் அறிந்தவை களையும் தம் மகனரிடம் கூறி அதனை அவரிடம் ஒப்படைத்தார். தந்தையின் கனவுகளை முற்றுவிக்கப் பிறந்த தனயரல்லவா அவர்! 1908-ல் சக்சி என்னுமிடத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவினர் அம்மைந்தர். அவ்விடத்திற்கு இப்பொழுது **ஜாம்ஷெட்பூர்** என்பது பெயர். மனித நடமாட்டமில்லாது காடாகக் கிடந்த வெற்றிடம் இப்பொழுது பெரு நகரமாக விளங்கு

கின்றது. டாடாவின் அரிய முயற்சியால் இரும்புத் தொழிலில் நம் நாடு, இப்பொழுது ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது.

நீர் மின்சாரத் திட்டம் :

அறுபது வயதாகியும் ஊக்கமும், உடல் வலியும் குன்றாது ஜாம்ஸெட்ஜீ அல்லும் பகலும் அயராது உழைத்துவந்தார். முன் வகுத்தத் திட்டங்களை நிறை வேற்றுவதுடன் புதிய புதிய திட்டங்களை வகுப்பதிலும் இடையறாது சிந்தனை செய்து வந்தார். அப்படி அவர் புதிதாக உருவாக்கிய திட்டங்களில் நீர் மின்சார உற்பத்தித் திட்டமும் ஒன்றாகும்.

மின்சார சக்தி, இயந்திரங்களையும், ஆலைகளையும் இயக்குதற்கு இன்றியமையாதது. அவ்வாறு இயக்கு வதே எளிதும் மலிவான முறை. ஆகவே அவர் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத மின்சார உற்பத்தியைப் பெருக்க ஆவல் கொண்டார். மின் சாரத்தை மிகுந்த அளவில் எடுப்பதற்குப் பெரிய நீர் வீழ்ச்சிகளைப் பயன்படுத்தும் முறை மேனாடுகளிற் சிறந்த பயனளித்து வந்தது. டாடா இதுபற்றி நினைந்து மேனாட்டு நிபுணர்களுடன் கலந்தாலோசித் தார். பம்பாய்க் கருகில் மலைப்பாங்கரில் போனவலா என்னும் சிற்றூரை யடுத்து நீரைத் தேக்கிச் செயற்கை நீர்வீழ்ச்சி யுண்டாக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இத் திட்டமும் அவர் காலத்தில் உருப்பெற வில்லை. இதனையும் டோராப்ஜியே நிறைவேற்றி வைத்தார். இத்திட்டம் உருப்பெற்றதன் பயனாகப் பம்பாயில் பல நெசவாலைகள் வளரவும், புதிய தொழில் கள் பல தோன்றவும் வழியுண்டாயிற்று.

பண்புகள்:

டாடா ஆயுள் முழுவதும் சுறுசுறுப்புடன் இடைவிடாது உழைத்து வந்தார். ஒரு கணமேனும் வீணுக்க மாட்டார். ஓய்ந்த நேரங்களில் அறிவு வளர்ச்சிக்கான நூல்களைப் படிப்பது அவர்க்குப் பொழுது போக்காயிற்று. இன்பம் கேளிக்கை என்பனவற்றில் அவர் உள்ளம் ஈடுபட்டதில்லை. எப்பொழுதும் எதையாவது பற்றி எண்ணுவார். அதன்பிறகு ஆராய்ச்சிகள் நிகழும். ஆராய்ச்சியைத் தொடர்ந்து சிந்தனை செயல் வடிவில் காட்சியளிக்கும்.

அவர் எல்லோருடனும் நட்புடன் பழகுவார். யாரையும் மரியாதையாகவே நடத்துவார். அவருடன் தொழிலில் பகைமையுடன் போட்டி யிட்டவர்களும், அவரது சீரிய இயல்பைப் பாராட்டுவர். வாணிகத் துறையில் அவர் மறைமுகமான செயல்களையோ, தந்திரங்களையோ கையாண்டதில்லை. ஒளிவு மறைவின்றி எதனையும் வெளிப்படையாகவே செய்வார். பிறருடைய ஆலோசனைகளைக் கேட்பதில் அவர் சலிப்படையாதது போன்றே, பிறர்க்கு ஆலோசனை கூறுவதிலும் அவர் சலிப்படைவதில்லை. சுற்றுப் பிரயாணம் செய்வதில் அவருக்கு விருப்பம் அதிகம். வாணிகத்திற்காகவும், புதிய திட்டங்களை நிறைவேற்றுதற்காகவும் அவர் செய்த அயல் நாட்டுப் பிரயாணங்கள் பல. அப்படிச் செல்லும்போது வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளையும், அரிய நிகழ்ச்சிகளையும் கண்டு இன்புறுவதுமட்டுமன்றி அவற்றைக் குறித்துக் கொண்டும் வருவார். தொழில் தொடர்பான பல நுட்பங்களையும் நன்கு அறிந்து குறித்து வைத்துக்கொள்வார். அவர் சுற்றுப் பிரயாணத்தால் அடைந்த நன்மைகள் எண்ணில.

ஜாம்ஸெட்ஜி மிகுந்த நாட்டுப் பற்றுடையவர். அவர் வகுத்த திட்டங்களெல்லாம் நாட்டு நலனுக்கான திட்டங்களே. நாட்டின் முன்னேற்றத்திற்கு என்னென்ன வகையில் பணிபுரிய முடியுமோ அத்தனை வகையிலும் செயலாற்ற வேண்டுமென்பதே அவர் குறிக்கோள். அவரால் உருவாகிய திட்டங்களெல்லாம் இன்று நாட்டின் தொழில் வளத்தை எவ்வளவு பெருக்கியுள்ளன என்பதை எண்ணினால், அவரது குறையாத நாட்டுப்பற்றை உணர முடியும். இன்னும் அவரது சிந்தனை எத்தனை புதிய திட்டங்களை எண்ணிற்றோ? அவரது அறிவு எவ்வளவு விரிந்து சென்று ஆராய்ந்ததோ ? யார் கண்டார்? அவரை ஒரு தனி மனிதன் என்று கூறுவதைக் காட்டிலும் ஒரு பெரிய ஸ்தாபனம் என்றே சொல்ல வேண்டும். பெரிய ஸ்தாபனமும் செய்ய முடியாத பல அரிய செயல்களை அவர் ஒருவரே சிந்தித்து, ஆராய்ந்து, முடிவுகட்டிச் செயலிலும் நிறைவேற்றி வைத்தார் என்றால், அவரைப்பற்றி எவ்வளவு வியந்தாலும் புகழ்ந்தாலும் அவை மிகையாகுமா ?

அவர் செல்வத்திற் புரளும் சீமானாயினும், மிகவும் சிக்கனமான வாழ்வை நடத்தவே விரும்பினார். எளிய உடையும், உணவும், பழக்க வழக்கங்களும் உடையவராகவே விளங்கினார். பணத்தைக் கண்டபடி ஊதாரித்தனமாக வாரி இறைக்கமாட்டார். தம் குடும்பத்தினரும் அவ்வாறு நடக்கவேண்டுமென்றே விரும்பினார். தனிப்பட்டவர்களுக்கு ஒன்றீவதைக்கூட அவர் சிறந்த அறமாகக் கருதுவதில்லை. பொது நிலையங்களுக்கு நன்கொடையளிப்பார். கல்விக்காக அவர் கொடுத்த

பணம் கணக்கற்றது. தொழிலாளர் நலனுக்காக அவர் பணம் செலவழிப்பதில் தயங்குவதே இல்லை.

மறைவு :

இனிப்புப் பண்டங்களை உண்ணுவதில் அவருக்கு விருப்பம் அதிகம். அளவுக்கு மிஞ்சிக்கூட அவற்றை அவர் உண்டுவிடுவார். அதனால், அவர் அடிக்கடி பசி இன்மையால் அல்லற்படுவதுண்டு. வயதான நிலையிலும் இந்த ஆவல் குறைவதில்லை. அதனால், அவர் உடல் நலம் குன்றியது. இப்பழக்கமே அவரது உயிருக்கு இறுதியைக் கொணர்ந்தது என்றே சொல்லலாம். அவரது நோய் முற்றிற்று. சிகிச்சைக்காக அவர் ஜர்மனி சென்றார்; அங்கு 1904-ல் மே-மாதம் உயிர் நீத்தார். அவரது உடலை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்று, அங்கே அடக்கம் செய்தார்கள்.

அவரது மறைவைக் கேட்ட பம்பாய் நகரம் துயர்க் கடலில் மூழ்கியது. உலகம் முழுவதும் இச் செய்தி பரவி பலரைத் துயரத்துள் ஆழ்த்தியது. அவரது அருங் குணங்களை வியந்தும் அவரது சாதனைகளைப் பாராட்டியும் பலர் பத்திரிகையில் எழுதினர். 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போற் செயின்' என்ற பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் டாடா. வாழ்வில் தாழ்மையைக் கடைப் பிடித்துத் தாழ்வில் மேன்மை பெற்றவர் அவர். அவருடைய சாதனைகள் அவரது புகழ்ச் சின்னங்களாக என்றும் விளங்குமாதலால், இறந்தும் இறவா நிலை எய்திய புகழ்ச் செல்வர் ஆவர்.

---

6. சீர்திருத்தச் செல்வர்

சீர்திருத்தமும் தீர்க்கதரிசியும் :

மனிதன் கூட்டு வாழ்வை மேற்கொண்ட அன்றே பற்பல விதிகளுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அக்கட்டுப்பாடுகள் இயற்கையாகவும் செயற்கையாகவும் தோன்றின. மனிதனது அறவுணர்ச்சியால் தோன்றிய கட்டுப்பாடுகள் தருமங்கள் எனப் பெயர் பெற்று இயல்பாய் அமைந்தன. சமூக முன்னேற்றங் காரணமாக அமைந்த கட்டுப்பாடுகள், விதிகள் என்றும் சட்டங்கள் என்றும் பெயர் பெற்றுச் செயற்கை முறையில் மனிதனது ஒழுகலாற்றை வளப் படுத்தின. இவ்விருவகைக் கட்டுப்பாடுகளுமே நிலையாய் அமைந்தன அல்ல; ஒரு படித்தாயுள்ளனவும் அல்ல. நாடுதோறும் இவற்றில் வேறுபாடுகள் இருப் பதைப்போல் காலந்தோறும் இவற்றில் மாறுதல் நிகழ் வது உண்டு. இத்தகைய மாறுதல்களே **சீர்திருத்தம்** எனப்படும். இச்சீர்திருத்தம் தூய ஒழுக்கமும், சிறந்த அறிவும், நிறைந்த அன்பும் வாய்ந்த பெரியார்களா லேயே அவ்வப்பொழுது நிகழும். அவர்களே **தீர்க்க தரிசிகள்** எனப் பாராட்டப் பெறுவர். நமது நாடு அத் தகைய தீர்க்கதரிசிகள் பலரைப் பெற்று பெருமை கொண்ட நாடு. அப் பெரியார்களுள் **ராஜாராம் மோகன் ராயும்** ஒருவர்.

பிரும்ம சமாஜத்தின் பிதா :

ஹிந்து மதம் என்பது பல்வேறு கொள்கைகளையும் தத்துவங்களையும் தன்னுட்கொண்ட விரிந்த மதங்களின் தொகுதியாகும். அது ஒரு தனி மதமாகக் கருதப்



ராஜாராம் மோகனராய்.

படினும் பல மதத்தவர்க்கும் இடங்கொடுத்துத் தழுவிக் கொள்ளக்கூடிய பரந்த நிலேயுடையது. பல மதத்தவர்க்கும் உடன்பாடான உட்பிரிவுகள் பல ஆங்குள்ளன. அத்தகைய உட்பிரிவுகளில் காலத்தால் பிற்பட்டுத்தோன்றியவை **ஆரிய சமாஜம், பிரும்ம சமாஜம்** என்பன. இவை வேத மதத்திலுள்ள சாதிப்பிரிவு, உருவ வழிபாடு, வேள்வி முதலியவற்றை எதிர்த்துத் தோன்றியவை. இவ்வாறு வேத மதத்திலுள்ள சில கொள்கைகளேயும் சடங்குகளேயும் எதிர்த்துத் தோன்றிய இயக்கங்கள் நாளடைவில் தனி மதங்களாகவே பிரிந்து நின்றன. பௌத்த மதமும் ஜைன மதமும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஆனல் ஆரிய சமாஜமும், பிரும்ம சமாஜமும், பௌத்தமும், ஜைனமும் போலத் தனி மதங்களாகாமல் ஹிந்து மதத்திற்குட்பட்ட பிரிவுகளாகவே கருதப்படுகின்றன. இவற்றுள் பிரும்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர் ராஜாராம் மோகன ராய் அவர்கள்.

சீர்திருத்தவாதி:

ராம்மோகனர் நமது நாட்டின் புகழை வெளிநாடுகளில் நிலே நிறுத்திய பெரியாராவர். அவர் ஒப்பற்ற அருங்குணங்கள் படைத்தவர்; பற்றற்ற உள்ளமும், தூய ஒழுக்கமும், ஆன்ற உலகியலறிவும், அகன்ற கல்வியறிவும் ஒருங்கு படைத்த மேதைகளே சீர்திருத்தம் பேசுதற்குரியராவர். அவர்கள் சொல்லளவிலன்றிச் செயலிலும் அவற்றைக் கொண்டு வழிகாட்டும் வன்மை படைத்தவர்களாக விளங்குவர். நாட்டின் நன்மையும் சமுதாயத்தின் நல்வாழ்வுமே கருதியவராக விளங்குபவராதலின் அத்தகையோர் சீர்திருத்தமே

உண்மைச் சீர்திருத்தமாகும். ராம்மோகனர் வாழ்வு முழுவதும் அத்தகைய உயரிய சீர்திருத்த வாதியாக விளங்கினர். மக்கள் யாவரும் சாதிசமய வேற்றுமை யின்றி அன்புடன் நெருங்கிப் பழகி உயர்ந்த குறிக் கோள்களுக்காகப் பாடுபடவேண்டுமென அவர் விரும் பினர். ஆணும் பெண்ணும் சமவுரிமையும் கல்வியும் பெற்று வாழவேண்டுமெனக் கருதினர். பெண்கள் தம் கணவர் இறந்த பிறகு உடன்கட்டை ஏறும் வழக்கம் நாளடைவில் உடன் கட்டை ஏற்றும் கொடிய அரக்கத் தன்மை படைத்த பழக்கமாக மாறியதைக் கண்டு மனங்கசிந்து அதை நிறுத்த அரும்பாடு பட்டார். கல்வித்துறையிலும் அவர் செய்த சீர்திருத்தங்கள் பல. ஏழைகள் வாழ்வு உயரவும், அவர்கள் சீர்திருந்தவும் பல அரிய அறிவுரைகளைக் கூறினர். இவருடைய வாழ்க்கை முழுவதும் மக்கள் நலங்கருதியதாகவே இருந்ததால், இவரது வரலாற்றை அறிதல் சமுதாய முன்னேற்றம் கருதும் ஒவ்வொருவர்க்கும் இன்றி யமையாததாகும்.

பிறப்பும், கல்விப் பயிற்சியும் :

ராம் மோகனர் வங்காளத்தைச் சேர்ந்த **ராதா நகர்** என்னுமிடத்தில் **ராமகாந்த ராய்க்கும், தாரிணி தேவிக்கும்** அருமைப் புதல்வராக 1772-ல் பிறந்தார். ராம் மோகனர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர். இளமை முதலே கல்விப் பயிற்சியிலும், ஒழுக்கப் பயிற்சியிலும் உயர்ந்து விளங்கினர். இவரிடம் இயல்பாக அமைந்த நுண்மதி கல்விப் பயிற்சியால் வளர வளர எதனையும் ஆராயும், திறமும் உய்த்துணரும் வன்மையும் பெற்றுச் சிறந்தோங்கியது. சிறு வயதிலேயே இவர் தம் தாய்

மொழியாகிய வங்க மொழியுடன் ஆங்கிலம், ஆரியம், அராபிக், பாரசீகம் ஆகிய பல மொழிகளையும் பயின்றார். இவருடைய முன்னோர்கள் மொகலாய ஆட்சியில் பணியாற்றிவந்தனர். ஆகையால், இவரும் அரசாங்கப் பணி புரிய விரும்பி அரபி, பாரசீக மொழிகளைக் கற்றார்; அவை மட்டுமன்றி வேறு பல சாத்திரங்களையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். தத்துவம், கணிதம், தர்க்கம் முதலியன அவருக்கு விருப்பமான பாடங்கள். பொதுவாகப் பள்ளியில் எப்பொருளையும் விரைவாகவும் நன்றாகவும் கற்று ஆசிரியருடைய போற்றுதலுக்கு உரியராக விளங்கினார்.

மோகனர் மனவுறுதி :

மோகனருடைய தந்தையார் வைணவர்; தாயும் மிகுந்த கடவுட் பற்றுடையவர். அவ்விருவருடைய கடவுட்கொள்கைகளுக்கும் மாறுபட்டு, இவர் ஹிந்து மதத்தின் உண்மைகளை ஆராயத் தொடங்கினார். ஹிந்து மதத்தின் கடைப்பிடிகளையும் கட்டுப்பாடுகளையும் ஆராயாமல் முற்றிலும் அப்படியே ஏற்றுக்கொள்ள இவர் மறுத்தார். அம்மதத்தின் அடிப்படையான தத்துவத்தை அறிய விரும்பினார். மத நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய சாத்திரக் கடலில் மூழ்கி உண்மையைக் காண விழைந்தார். ஆனால், அம்முயற்சி எளிதில் கை கூடுவதா? அம்முயற்சியின் பயனாய் இவர் ஹிந்து சமயத்தில் பல குறைகளைக் கண்டார். ஆகவே, மதத்தையே சீர்திருத்தும் பெரும் பணியை மேற்கொள்ளத் துணிந்தார்.

மோகனர் பதினாறும் வயதிலேயே சற்றேனும் அஞ்சாமல் தாம் கண்ட உண்மைகளையும், அதற்குச்

செய்யவேண்டிய செயல்களையும் விளக்கி ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அவர் கூறிய சீர்திருத்தங்களில் முக்கியமானவை, "கடவுள் வழிபாட்டில் உருவ வழி பாடு கூடாது என்பதும்; சாதி வேற்றுமை ஒழிய வேண்டும்" என்பதுமே. இப்படி அவர் வெளிப்படை யாகத் தம் கருத்துகளைக் கூறத் துணிந்ததனால் அவரது தந்தையாரே அவரை வெறுத்தார்; கடுமையாகக் கடிந்தார். ராம்மோகனர் தந்தையிடம் அன்பும் பணிவும் உடையவரேயாயினும் தம் கருத்துக்களை அவர் பொருட் டாகவேனும் மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. தந்தை யார், கடுமொழிகளைக் கைவிட்டு இனிய மொழிகளாலும் அறிவுரைகளாலும் தம் மைந்தரைத் திருத்த முயன்றார். மோகனர் தம் கொள்கையில் மிக்க உறுதியுடன் நின்றார். அவர், தம் தந்தையிடம் பணிவாகத் தம் கருத்துகள் நேர்மையானவை என வாதித்தார். இவ்வாறு தந்தை யும் மகனும் தத்தம் வழிக்கு மற்றவரைத் திருப்ப முயன் றனர். இருவரும் தத்தம் நிலையில் அசையாத நம்பிக்கை கொண்டதனால் இருவர் முயற்சியும் தோல்வியுற்றன. முடிவில் ராமகாந்தராய் தம் மைந்தரது பிடிவாதமான புரட்சிப் போக்கில் மருட்சி கொண்டு, தம் எதிரே நிற்றலும் கூடாது என மைந்தரை வெருட்டியோட்டி னார். இதனால் மோகனர் வீட்டை விட்டே வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்நிலையிலும் அவர் தம் கருத்துக்களை மாற்றிக்கொள்ள ஒருப்படவில்லை.

சுற்றுப்பிரயாணம்:

அவ்வாறு வெளியேறிய ராம்மோகனர் திபேத்து நாடு சென்றார். அப்பொழுது அவருக்கு வயது பதி னாறே. அங்கும் அவர் கண்ட காட்சி என்ன? அங்கே

யும் மதத்தின் பெயரால் பல கொடுமைகள் நடப்பதைக் கண்டார் மோகனர். தெய்வத்திற்கு நரபலி கொடுப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அவர்களுடைய அறியாமையை எண்ணி வருந்திக்கொண்டு இருக்கையில் அவருடைய உயிருக்கே ஆபத்து நெருங்கியது. ஒரு கூட்டத்தார் அவரையே நரபலியிட முயன்றனர். ஆனால் நல்ல வேளையாக அக்கூட்டத்தில் இருந்த பெண்களிற் சிலர் அவர் மேல் இரக்கங் கொண்டு அவரைத் தப்புவித்தனர். உடனே அவர் அந்நாட்டை விட்டகன்று துறவுக்கோலம் புனைந்து பல இடங்களுக்கும் சென்றார். ஆங்காங்கு அவர் அறிந்த செய்திகள் பல.

காசி வாழ்க்கை :

ராமகாந்தராய் சீற்றம் தணிந்த பிறகு தம் மைந்தரை வீட்டை விட்டுத் துரத்தியதற்கு மிகவும் வருந்தினார்; அதனால் அவரைத் தேடலானார். பல மாதங்கள் வரை அவர் இருக்குமிடம் தெரியவேயில்லை. முடிவில் அவர் இருக்குமிடத்தை அறிந்து உடனே வந்து சேருமாறு அழைத்தார். மோகனரும் மூன்றாண்டுகள் பல இடங்களிலும் அலைந்து அல்லற்பட்டபின் பெற்றோரைக் காணும் விருப்புடன் ஊருக்கு மீண்டார். அவ்வாறு மீண்ட பிறகும் இருவருக்கும் கருத்து வேற்றுமை குறையவில்லை. அதனால் அவர்கள் சேர்ந்து வாழ்வது இயலாதாயிற்று. அதன்மேல் மோகனர் காசிக்குச் சென்று வடமொழியை நன்கு பயின்று இந்துசமய நூல்களை யெல்லாம் தெளிவாக ஆராய்ந்தார். சில ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து வடமொழியிலுள்ள வேதாந்த வுண்மைகளை வங்காளியிலும்

ஹிந்துஸ்தானியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டார். இவ்வாறு பத்து ஆண்டுகள் காசியில் வாழ்ந்தார்.

மோகனர் ஆராய்ச்சிகள்:

1803-ல் மோகனரது தந்தையார் காலமானார். அதன் பிறகு அவர் மூர்ஷிதாபாத்தையடைந்து பாரசீக மொழியில் ஒரு நூலை வெளியிட்டார். அதன் வாயிலாக அவர் பெயர் எங்கும் பரவிற்று. அறிஞர்கள் பலர் அவரை அறியலாயினர். அந்நூலில் அவர் பல நுணுக்கமான ஆராய்ச்சிகளை வெளியிட்டார். 'கடவுள் ஒருவருண்டு. கடவுள் வழிபாடு மக்கள் இயற்கைக்கேற்ப மாறுபடுகின்றது. எல்லாச் சமயங்களிலுமே பொய்யான சடங்குகளும் கற்பனைகளும் மலிந்துவிட்டன. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் சமயத்தலைவர்கள் வேண்டுவதில்லை. சமயத் தலைவர்கள் புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டு நேர்மையற்ற முறைகளில் நடக்கின்றனர்' என்ற கருத்துக்களை அந்நூலில் வெளியிட்டார். மறுக்க முடியாத உண்மைகளுடன் தருக்க முறையில் அந்நூல் எழுதப்பட்டிருந்தது.

சமயவுண்மைகள்:

மோகனராய் அதன் பிறகு சிலகாலம் அரசாங்கத்தில் ஓர் அலுவலைப் பெற்று தம் வாழ்க்கைக்கு வழி தேடிக்கொண்டு வாழ்ந்தார். ஆனால் அது அவர் மனப்பான்மைக்கு ஒத்துவராததால் விரைவில் அதை விட்டு வெளியேறினர். ஆங்கிலேயர்களுடன் நெருங்கிப் பழகிய பிறகு அவர்கள்மீது கொண்டிருந்த அவநம்பிக்கை குறைந்தது. ஆங்கிலேயரிடமுள்ள சில நற்பண்புகளும் நாகரிகச் சிறப்பும் நம்மிடம் புகவேண்டுமென அவர் விரும்பினர்.

உத்தியோகத்தை விட்ட பிறகு, அவர் பல மதங்களையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள நல்லனவெல்லாவற்றையும் ஒருங்கு திரட்டி, ஒரு புதிய மதத்தை அமைக்க விரும்பினார். அதற்காக அவர் கல்கத்தாவில் அமைதியாகச் சில நாள் தங்கி முயற்சி செய்தார். வடிவமும் பெயருமற்ற பரம்பொருளைப் பல வடிவங்களாலும், பெயர்களாலும் வழிபடுவதை அவர் விரும்பவில்லை. தம் கருத்திற்கு ஆதாரமாக வேதங்களில் இருந்தே சான்றுகள் காட்டினார். 1815-ல் வேதாந்த சூத்திரம் என்ற நூல் ஒன்றை வங்கமொழியில் வெளியிட்டார். அடுத்த ஆண்டில் ஆங்கிலத்திலும் அத்தகைய வேதாந்த நூல் ஒன்றெழுதினார். அவர்தான் முதன் முதலில் வேதத்தை வடமொழியிலிருந்து பிறமொழிகளில் பெயர்த்து எழுதினார். அதற்குமுன் அத்தகைய செயலில் ஈடுபட யாரும் துணிவுகொள்ளவில்லை.

மேலும் மோகனர் சைவம், வைணவம் என்ற பிரிவுகள் பொருளற்றவை எனக்கருதினார். ஒவ்வொரு சமயத்தவரும் தம் தெய்வமே உயர்ந்தது, உண்மையானது என்று கூறுவதை அவர் வெறுத்தார். அவ்வாறு கூறுவதால், மக்கள் அன்புகொண்டு நன்கு வாழும் வழிகாட்டத் தோன்றிய சமயங்கள் பிளவுகளையும், பூசல்களையும் பெருக்குதற்குக் கருவியாகின்றன; மக்களுக்குள் ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை வளர்க்கின்றன எனக்கருதி, சமயச் சார்பான பிரிவுகள் மறையவேண்டும் எனக் கூறினார். ஒரு சாரரை மற்றொரு சாராரிடமிருந்து வேறுபடுத்தி உயர்வு தாழ்வு கற்பிக்கும் சமயம் சமயமாகாது எனவும் துணிந்து கூறினார். மதத்தின் பெயரால் உயிர்ப்பிராணிகளைப்

பலியிடும் பழக்க வழக்கங்களையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். தெய்வங்களுக்குப் படைப்பது என்பதே பொருத்தமற்ற செயல்; தெய்வம் நம்மிடமிருந்து எந்தப் பொருளையும் விரும்பி நிற்கவில்லை; அதிலும் உயிர்ப் பலியை அது அறவே ஏற்காது என்று வாதம் செய் தார். சமய சம்பந்தமான இவருடைய இத்தகைய கருத்துக்கள், நாட்டில் ஒரு சாராரிடம் பரபரப்பையும் மற்ளுெரு சாராரிடம் விழிப்புணர்ச்சியையும் உண் டாக்கின.

சதியோழிப்பு:

பண்டை நாளில் தன் கணவனை உயிரென மதித்த பெண், அன்பால் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகையில், கணவன் இறப்பின் இயல்பாகவே தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடுபவள்போல், தானும் இறந்து கற்பு நெறியை நிலை நாட்டி வந்தாள். காலத்தால், அச் சீரிய அன்புநிலை மாறியபிறகும், கணவனுடன் காரிகை யும் இறத்தல் வேண்டுமென்பது வழக்கமாகியது. அவ் வழக்கம் கணவரை இழந்த பெண்களை உடன் கட்டை யேற்றிக் கொல்லும் கொடிய பழக்கமாக மாறியது. இப்பழக்கத்தைக் கண்ட மோகனர் மிகவும் மனம் நொந்தார். அவ்விறக்கமற்ற அரக்கச் செயலை அறவே ஒழிக்க வேண்டுமென முனைந்தார். அதற் காகப் பல இடங்களில் பேசினர். பல துண்டுப் பிரசு ரங்களை வெளியிட்டார். இடையருத இவரது பிரசா ரத்தின் பயனுக 1829-ல் கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங்கு பிரபு, அத்தீய பழக்கத்தை ஒழிக்கச் சட்டமியற்றினர். அன்று முதல் அக்கொடுமை ஒழிந்தது.

சமயத் தொண்டு :

கிறிஸ்து மதத்தின் உண்மைகளை ஆராய கிரேக்க மொழியையும், எபிரேய மொழியையும் அவர் பயின்றார். முதல் கிறிஸ்துவ வேதம் அம்மொழிகளில்தான் எழுதப் பட்டிருந்தது. அதற்காகவே அம்மொழிகளைப் பயின்றார் மோகனர். மொழி பெயர்ப்புக்களைக் கொண்டு அரை குறையாக ஆராய்வதால், சிறந்த முடிவைக் காண இயலாது என்பது அவர் கருத்து. இது அவர்க்கு உண்மை அறிவதிலுள்ள நாட்டத்தினை நன்கு காட்டும். மக்களுக்குள் வேற்றுமையின்மை, எல்லா உயிர் களிடத்தும் அன்புடைமை, சகோதரப்பற்று முதலிய உயரிய தத்துவங்கள் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. இவை ஹிந்து மதத்தில் இருப்பினும் காலப்போக்கில் கொள்கைக்கும், செயலுக்கும் வேற்றுமை விரிந்து கொண்டே சென்றதனால், ஹிந்து மதத்தின் உயரிய கொள்கைகள் மறைந்து பொருளற்ற பழக்க வழக்கங் களைப் போற்றுவதே ஹிந்து மதம் என்றாகிவிட்டது. இதனை உணர்ந்த மோகனர் ஹிந்து மதத்தின் உயரிய கோட்பாடுகளைச் செயல் முறையில் கொண்டுவரப் பாடுபடலானார். கிறிஸ்துவின் உபதேசங்களைச் சிறு நூலாக ஆங்கிலத்தில் வெளியிட்டார். அம்மதத் தத்து வங்களில் இவ்வாறு ஈடுபட்டவராகக் காணப்பட்ட நிலையிலும் அதன்பொருட்டு அவர் அம்மதத்தைத் தழுவவேண்டுவது அவசியம் என்று கருதவில்லை. மத மாற்றம் தேவையற்ற செயல் என்றே கூறுவாரானார். ஒருவர் தாமாகவே எம்மதத்தையும் ஏற்றுக்கொள்ள லாம். ஆனால், அறிவுரைகளாலோ, பிற வழிகளாலோ ஒருவர் மற்றொருவரை மதமாற்ற முயற்சித்தல் கூடாது என்று வாதாடினார்.

1821-ல் அவர் ஒரு செய்தித்தாளை வங்க மொழியில் தொடங்கினர். அதில் அவர் மக்கள் உரிமைக்காகவும் சமயச் சீர்திருத்தத்திற்காகவும் பல கட்டுரைகள் எழுதினர். பிறகு அவர் பாரசீக மொழியிலும் ஒரு செய்தித்தாளை நடத்திவந்தார். இந்தியாவில் அக்காலத்தில் இந்திய மொழிகளில் நடத்தப்பட்டுவந்த நான்கு பத்திரிகைகளில் அவருடைய பத்திரிகைகள் இரண்டு. அவருடைய பத்திரிகைகள் பொதுமக்களாலும் அரசாங்கத்தாலும் ஆதரிக்கப்பட்டன. இவ்வாறு அவர், மக்களுக்குப் பத்திரிகைத் தொழிலிலும் சிறந்த தொண்டு ஆற்றினர்.

கல்விப் பணி:

மோகனர் நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்தினர். அவரது முயற்சியால் பல கல்விச் சாலைகளும், கல்லூரிகளும் தோன்றின. எல்லோருக்கும் பொதுவாக இந்து கல்லூரி ஒன்றையும், ஆங்கிலோ இந்தியர்களுக்கெனத் தனிக்கல்லூரி ஒன்றையும் அவர் நிறுவினர். அவற்றை அவர் தம் சொந்தச் செலவிலேயே நடத்தினர். அதன் பிறகு அவர் வேதாந்தக் கல்லூரி ஒன்றை நிறுவினர். அவர் தமது கல்லூரிகளிலெல்லாம் பாடங்களை ஆங்கிலமொழியின் வாயிலாகவே போதித்து வந்தார்.

மகளிர் நலம் :

பெண்களுக்கு இழைக்கப்பட்டுவந்த உடன்கட்டையேறுதல் என்ற கொடிய பழக்கம் ஒழிந்த பிறகும் பெண்களுடைய குறைகள் பல நீங்கவில்லை என்பதைக் கண்டறிந்து, அக்குறைகளைப் போக்குவதில் தம் கருத்தைச் செலுத்தினர் மோகனர். ஒரு ஆடவன் பல மனைவியரை மணக்கச் சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால்,

ஒரு பெண் கணவன் இறந்த பிறகு உயிர் வாழ்வதற்கும் தகுதியற்றவளாகக் கருதப்படுகிருள். அவள் விதவை யாக வாழ நேரிட்டாலும் சொத்துரிமை இன்மையால், சுதந்திரமாக வாழமுடியாமல் பிறரைச்சார்ந்து அடிமை வாழ்க்கையில் அல்லற்பட வேண்டியிருக்கிறது. அந் நாளில் மறுமணம் புரிந்து கொள்ளவும் உரிமை கிடை யாது. இக் குறைகள் நீங்க வேண்டுமாயின், பெண் மக்களுக்கும் சொத்துரிமை வழங்க வேண்டுமெனக் கருதிஞர். இந்து சமூகம் சீர்திருத்தப்பட வேண்டுமென வாதாடிஞர்.

மோகனருடைய சீர்திருத்தக் கருத்துக்களெல்லாம் உறங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பின; அவ்வாறு விழிப்புற்ற மக்கள் பழம் போர்வையை உதரித் தள்ளிக் கண் திறந்து பார்க்கும்படிச் செய்தன. அவை, மக்களைக் குறுகிய மனப்பான்மையும் காலத் திற் கொவ்வாத பழக்க வழக்கங்களையும் எதிர்த்து நிற்கும்படி துணிவு கொள்ளச் செய்தன.

அவர் அரசியலில் மிகவும் முற்போக்கான கருத்துக் களையுடையவர். மேஞடுகளில் குடியாட்சி முறை தோன்றி வளர்ந்து வருவதைக் கண்டு மகிழ்ந்தார். மேஞடுகள் ஒவ்வொன்ருக முடியாட்சியைத் தகர்த் தெறிந்து மக்களாட்சியை மேற்கொண்டு வருவதை ஆதரித்து நம் நாட்டிலும் பிரசாரம் செய்தார். இந்திய மக்கள் அரசியல் உணர்ச்சி கொள்ள வேண்டுமென்று அரும்பாடுபட்டார்.

பிரும்ம சமாஜம் :

மக்கள் சமய வாழ்வில் உயர்ந்து விளங்குவதே எல்லாவற்றிற்கும் முதன்மையான சீர்திருத்தம் எனக்

கருதினர். சமயம் அல்லது கடவுள்நெறி ஒரு சாரருக்கு மட்டும் உரிமையானதாக இராமல் எல்லோருக்கும் உரியதாக விளங்கவேண்டுமெனக் கருதினர். அதற்காக யாவரும் மேற்கொள்ளத்தக்க சமயத்தை நிறுவ முயன்றார் மோகனர்; 1828-ல் **பிரும்ம ஸமாஜம்** என்னும் திருநெறிக்கூட்டத்தைத் தோற்றுவித்தார். இதில் நாடு, மொழி, மதம், சாதி முதலிய எவ்வித வேறுபாடுமின்றி யாவரும் சேரலாம். இதன் கொள்கைகள் அறிவிற்குப் புறம்பாகவோ யாருக்கும் முரண்பாடாகவோ இல்லாமல் யாவரும் மேற்கொள்ளுமாறு அமைந்திருந்தன.

இச்சபை கிறிஸ்தவ சமயத்தோடு ஒற்றுமையுடையதாய் இருத்தல் கண்டு ஆதாம் என்னும் பாதிரியார் அதைக் கிறிஸ்தவ சமயத்தின் பெயரால் நிலைநாட்ட முயன்றார். ஆனல் அவரது முயற்சி பலிக்கவில்லை. எனவே, அது இந்து பிரும்ம ஸமாஜம் என்றே அழைக்கப்படலாயிற்று. மோகனர் பிரும்ம சமாஜத்திற்கு வேதத்தையே ஆதாரமாகக் கொண்டார். ஆதாம் பாதிரியார் விரும்பியபடி கிறிஸ்துவ வேதத்தை அடிப்படையாகக்கொள்ள மறுத்துவிட்டார். எனவே, ஆதாம் தம் தோல்விக்கு மனமுடைந்து தாய் நாடு திரும்பி விட்டார்.

அதன் பிறகு இப்பிரும்ம சமாஜம் பல பேரறிஞர்களைத் தன்பால் ஈர்த்தது. மகரிஷி தேவேந்திரநாத் தாகூர், மகாகவி ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் இதை ஆதரித்தனர். நாளடைவில் முதல் பிரும்ம சமாஜத்தில் பல கிளைகள் தோன்றின; கேசவ சந்திரசேனர்

என்னும் பேரறிஞர், ஆதிபிரும்ம சமாஜத்திலுள்ள சில பழக்கங்களை மாற்றிப் புதியநிலை ஒன்றை நிறுவினர்.

இங்கிலாந்துப் பயணம் :

ராம்மோகனர், இங்கிலாந்து சென்று மேனாடுகள் இந்தியாவைப் பற்றி நன்கறிந்து மதிக்கும்படி செய்தது, அவர் செய்த பிற எல்லாப் பணிகளிலும் பெரும் பணியாகும். அந்நாளில் இந்துக்களில் சில சாதியார் கடல் கடந்து செல்வது, மதவொழுக்கத்திற்கு முரண்பட்டது என்ற கருத்து மிக உறுதியாக நிலைத்திருந்தது. அவருக்கு முன் யாரும் துணிந்து கடல் கடந்து மேனாட்டுக்குச் சென்றதில்லை; சென்றால், சாதியிலிருந்து தள்ளி வைக்கப்படுவர். மேலும், அந்நாளில் கப்பற் பயணம் மிகவும் ஆபத்தானதாக இருந்தது. மோகனர் எத்தகைய தடையையும் துன்பத்தையும் பொருட்படுத்தாமல் இங்கிலாந்து செல்லத் துணிந்தார். அவரது துணிவு பின்னாளில் பலருக்கு வழிகாட்டியாய் நின்றது. அவருக்குப் பின் பலர் கடல் கடந்து, பல நாடுகட்கும் சென்று கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலிய பல துறைகளிலும் பயிற்சிபெற்று மீண்டுவந்து நம் நாட்டின் சிறப்பைப் பெருக்கத் துணைபுரிந்தனர்.

டில்லியில் ஆண்ட மொகலாய மன்னரின் குறைகளைப் பாராளு மன்றத்தில் எடுத்துக் கூற மோகனர் அம்மன்னரால் அனுப்பப்பட்டார். அப்பொழுது அம் மன்னர் மோகனருக்கு **ராஜா** என்ற பட்டம் அளித்தார். ராஜாராம் மோகனராய் இங்கிலாந்துக்குச் சென்ற காரியம் முடிவுற்றதும் தத்துவ ஞானிகளையும் மத போதகர்களையும் சந்தித்து மதத் தொடர்பான

கருத்துக்கள் பற்றி விவாதம் செய்தார். அவ் விவாதங்களால் அவரது அறிவாற்றலும் ஹிந்து மதத்தின் மேன்மையும் மேனுட்டார்க்குத் தெரியவந்தன. அவரது மேனுட்டுப் பயணத்தால், இந்தியாவுக்கும் மேனுடுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இந்தியாவின் மதிப்பு உயர்ந்தது. இங்கிலாந்தில் தொழிலாளர் முதல் அனைவரும் அவரைப் பாராட்டலாயினர். அவருக்கு வரவேற்புக்கள் பெருகின. முதலில் அவரை அலட்சியம் செய்த கிழக்கிந்தியக் குழுவினர், அவர் பெருமையை யுணர்ந்து அவருக்கு ஒரு விருந்தளித்து ராஜா என்ற பட்டத்தையும் அங்கீகரித்தனர்.

அவர், இங்கிலாந்திலிருந்தபோது இந்தியச் சீர்திருத்த மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இந்தியருக்கு அது ஓரளவு உரிமை நல்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டது. ஆகவே, மோகனர் அதை ஆதரித்தார். அது வெற்றி பெற்றதும் அதைத் தம் சொந்த வெற்றியாகக் கருதினார். அம் மசோதா தோல்வியுற்றிருந்தால் அவர் மனம் வருந்தி ஆங்கிலேயருடன் கொண்டிருந்த தொடர்பையே கைவிட்டிருப்பார். இந்தியா நலனுக்கு ஒவ்வாத செயல்களை யார் செய்தாலும் அவர் வாளாயிருப்பதில்லை. இது அவருடைய நாட்டுப் பற்றை நன்கு விளக்குவதுஆகும்.

மோகனர் மறைவு:

பின்னர் மோகனர் பிரான்சு தேசம் சென்றார். அங்குப் பல பெரியார்களையும் அந்நாட்டரசரையும் சந்தித்துப் பேசினார். இவ்வாறு அவர் தம் ஐரோப்பியப் பயணத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டார். அவர் இங்கிலாந்தில் இருக்கும்போது அவரை

ஒரு கொடிய நோய் பற்றிக்கொண்டது. அது மூளைத் தொடர்பான நோய். அந்நோயை நீக்க எவ்வித மருத்துவ முறையும் பயன்படவில்லை. அதன் விளைவாக 1833-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ம் நாள் உயிர் நீத்தார். இந்தியாவிற் பிறந்து இந்திய நாட்டிற்கு உழைத்த பெரியார் தம் தாய் நாட்டு மண்ணில் மறையாமல் அயல் நாட்டில் மரிக்க நேர்ந்தது விதியின் விளையாட்டே. ஆனல் உலகப் புகழ் பெற்ற புகழ்ச் செல்வர்களுக்கு, அவர்களுடைய விரிந்த மனப் பான்மைக்கு ஏற்ப உலகமே தாயகமாகிவிடுகிறது. அவர்களுக்கு யாதும் ஊராகிவிடுகிறது. யாவரும் கேளிராகிவிடுகின்றனர். மோகனர் ஆன்மா அமைதியுற அந்நாட்டு மக்கள் தமக்கேற்ற முறையில் வழிபாடு நடத்தினர். ஆனல் அவர் விரும்பியபடி அவரது உடல் இந்துமதச் சடங்குகளுடன் அடக்கம் செய்யப்பட்டது. அவரது மறைவு குறித்து, பத்திரிகைகள் பலவும் வருத்தம் தெரிவித்து எழுதின.

பண்புகள்:

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவரது என்புகள் ஆர்னேஸ்வேல் என்னுமிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆங்கொரு சமாதியில் வைக்கப்பட்டன. சமாதியின்மீது அவரது அருங்குணங்கள் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டன. ''மனிதர்க்குரிய முழுச் சிறப்பையும் பெற்றவர் மோகனராய். அவரைப்போல் தெளிந்த அறிவும் அருளும் அடக்கமும் பெற்ற ஒருவர் எப்பொழுதும் இருந்ததில்லை. மக்களில் அவரைப்போல் பணிவுள்ள புனிதர் வேறொருவருமில்லை'' என்று டாக்டர் பூட் என்பார் அவரைப் பாராட்டிப் பேசினர்.

உண்மை யுணர்வதில் எவ்வாறு ஊக்கமும் உழைப்பும் காட்டுவாரோ, அவ்வாறே தாம் அறிந்த உண்மைகளைப் பிறர் அறிய உணர்த்துவதிலும், அஞ்சாமையும் அசைவற்ற உறுதியும் காட்டுவார் ராம்மோகனர். பெற்ற தாயை விட்டுப்பிரிய நேர்ந்த நிலையினும் தம் கருத்துக்களை விட்டுக் கொடுக்கவில்லை. சீர்திருத்தக் கருத்துக்களுக்கு வந்த கடும் எதிர்ப்பைக்கண்டு, அவர் சிறிதும் கலங்குவதில்லை. ஆனால், மாறான கருத்துடையவரிடமும் பணிவும் மரியாதையும் காட்டுவார். தம் நுண்ணறிவாலும் தெளிந்த ஆராய்ச்சி வன்மையாலும் இனிய பண்புகளாலும் வைதிகரின் எதிர்ப்புக்களைச் சமாளித்தார்; உழைப்பின் சிகரமாக விளங்கினார்; அறிவுக் கடலாகக் காட்சியளித்தார். தான் பிறந்த நாட்டிற்கு அரசியல், கல்வி, மதம் முதலிய பல துறைகளிலும் அரும்பணி செய்த இப்பெரியார் ஒரு பெரும் புகழ்ச் செல்வர் என்பதில் ஐயமுண்டோ?

கட்டுரை விஞக்கள்

1. *தமிழ்ச் செல்வர் :*

   1. மதுரையில் பாண்டித்துரையவர்கள் தமிழ்ச் சங்கம் அமைக்க எண்ணிய காரணமும் அது செய்துவரும் பணிகளும்பற்றி விளக்கி வரைக.
   2. பாண்டித்துரையவர்களது தமிழ்ப்பற்றை விளக்கி வரைக.
   3. பாண்டித்துரையவர்கள் புரிந்த தமிழ்ப் பணிகளைத் தொகுத்து வரைக.

2. *அருட் செல்வர் :*

   4. சமரச சன்மார்க்கம் பற்றி விளக்கிக் கூறுக.
   5. இராமலிங்கர் பெரியபுராணச் சொற்பொழிவு பற்றி வரைக.
   6. இராமலிங்கர் புரிந்த விந்தைச் செயல்கள் யாவை?
   7. அவரது அருட்பணிகளைப் பற்றி விளக்கி வரைக.

3. *இசைச் செல்வர் :*

   8. இசையின் மேன்மைபற்றி வரைக.
   9. தியாகராஜ சுவாமிகளுக்கு இராமலக்குவர் காட்சியளித்ததுபற்றி விளக்கி வரைக.
   10. கேசவையாவின் கலைச்செருக்கைத் தியாக ராஜர் அடக்கியதுபற்றி வரைக.
   11. வில்வீரர் கல்மாரி காத்தவகைபற்றி விளக்கி வரைக.

4. புகழ்ச் செல்வர் :

12. அண்ணாமலை அரசரின் குறிக்கோளும் அவர் செல்வம் திரட்டிய வினைத்திட்பமும் பற்றி விளக்கி வரைக.

13. அவர் செய்த அருட்பணிகளைப் பற்றி வரைக.

14. அண்ணாமலை பல்கலைக் கழகம்பற்றி வரைக.

15. தமிழிசை இயக்கம்பற்றிக் கூறுக.

5. வாணிகச் செல்வர் :

16. டாடாவின் ஆலைத்தொழில் முயற்சிபற்றி வரைக.

17. டாடா முயன்ற பிற திட்டங்கள் யாவை? ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனி பத்து வரிகளில் விளக்கி வரைக.

18. டாடாவின் பண்புகள் யாவை?

6. சீர்திருத்தச் செல்வர் :

19. மோகனர் மனவுறுதியை விளக்குக.

20. மோகனர் கண்ட சமயவுண்மைகள் யாவை?

21. அவர் பெண்களுக்குச் செய்த பெருந் தொண்டுகள் யாவை?

22. பிரும்ம சமாஜம்பற்றி வரைக.

23. மோகனரின் பண்புகளைப்பற்றி விளக்கி வரைக.

அருஞ்சொற் பொருள்

அகந்தை	— கர்வம்
அதர்	— வழி
அமுத கானம்	— அமுதமயமான பாடல்
அயராது	— தளர்ச்சியடையாமல்
அல்லல்	— துன்பம்
அல்லும் பகலும்	— இரவும் பகலும்
ஆக்கம்	— செல்வம், சிறப்பு
ஆய்வுரை	— ஆலோசனை
ஆறலை கள்வர்	— வழிப்பறி செய்வோர்
ஆற்ருமை	— தாங்க இயலாமை
ஆன்ற ஏது	— சிறந்த காரணம்
ஆன்றமைந்த	— அறிவால் சிறந்து அடங்கிய
இசையரங்கு	— சங்கீத சபை
இதிகாசம்	— பழைய வரலாறு
இரவி குலம்	— சூரிய குலம்
இல்லம்	— வீடு
இளவல்	— தம்பி
இன்னல்	— துன்பம்
இறுதி	— முடிவு, அழிவு
இறையளவும்	— சிறிதும்
இறையன்பு	— தெய்வபக்தி
இறைவழிபாடு	— கடவுட்பூசை
ஈட்டல்	— தேடுதல்
ஈர்த்தன	— இழுத்தன
உய்ய	— பிழைக்க, வாழ

உரம்	— வலிமை
உவப்பிலா	— அழிவில்லாத
உவகை	— மகிழ்ச்சி
உழன்று	— அலைந்து
எழில்	— அழகு
ஏற்பு மகன்	— ஸ்வீகார புத்திரன்
ஐயம் திரிபற	— சந்தேகமும் மாறுபாடும் நீங்க
கடியப்படுதல்	— நீக்கப்படுதல்
கணக்காயர்	— ஆசிரியர்
கண்ணோட்டம்	— தாட்சணியம்
கபாலம்	— தலை
கருக்கொள்ளும்	— தோன்றும்
கவன்றனர்	— வருந்தினர்
கவின்	— அழகு
கன்மாரி	— கல்மழை
காரிகை	— பெண்
கீதம்	— பாட்டு
குழுமிய	— கூடிய
குன்ற	— குறையாத
கேளிர்	— சுற்றத்தார்
கொற்றவன்	— அரசன்
சதமடங்கு	— நூறு மடங்கு
சாதனம்	— துணை
சான்றோர்	— பெரியோர்
சிட்டர்	— பெரியோர்
சீரிய	— சிறந்த
சீற்றம்	— கோபம்
சூலை நோய்	— வயிற்றுவலி நோய்

சேண் — தூரம்
திகழ்ந்தனர் — விளங்கினர்
திருமுன்பு — சந்நிதி
தெள்ளியர் — தெளிந்த அறிவுடையார்
தொன்னகர் — பழமையான நகரம்
நடுநிசி — நள்ளிரவு
நிதிக்கிழவர் — செல்வத்திற்கு உரியவர்
நிலைக்களம் — இருப்பிடம்
நைந்து — வருந்தி
பட்டிமண்டபம் — கல்விச்சபை
பணி — தொண்டு
பண் — இசை, இராகம்
கரிசனங்கள் — பரிவாரங்கள்
பரிவு — அன்பு
பழுதர — குற்றம் நீங்க
பாகம்படும் — பாதிவரும்
பாஸ்கரன் — சூரியன்
புராணம் — பழங்கதை
புலம் — அறிவு
புறங்கண்ட — தோல்வியுறச் செய்த
பூசல் — சண்டை
பெருமிதவுணர்ச்சி — வீரவுணர்ச்சி
பெறலரும் — பெறுவதற் கருமையான
பெற்றி — தன்மை
பொலிவு — அழகு
பொற்கிழி — பொன் முடிப்பு
மகப்பேறு — புதல்வரைப்பெறுதல்; புத்திரபாக்கியம்
மிளிர்கின்றன — விளங்குகின்றன

முரண்பாடு	— மாறுபாடு
மேதை	— பேரறிஞர்
மேனிப்பொலிவு	— உடல் அழகு
வழங்கி	— கொடுத்து
வழிவழியாக	— பரம்பரையாக
வழுவற	— குற்றமில்லாமல்
வான்புகழ்	— சிறந்த புகழ்
விழுப்பயன்	— சிறந்த பயன்
விழைந்தார்	— விரும்பினர்
வினைத்திட்பம்	— செயல் உறுதி
வினைத்திறம்	— செயல் திறமை
வெருட்டி	— அச்சுறுத்தி
வேள்வி	— யாகம்
வையகம்	— உலகம்

சாரதா விலாஸ பிரஸ், கும்பகோணம்.

8023

615
204 ×

Cindy
25986